கோகுலம்

GOKULAM ஏப்ரல் '96 ரூ. 5.00

நாங்களும் உதவி செய்வோம்!






கோகுலம்

ஏப்ரல் 1996
இதழ் : 14;
மலர் : 3

உயிர்களிடத்து அன்பு வேணும்
- தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேணும் - பாரதியார்



அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம். கோடை விடுமுறை தொடங்கப் போகிறதே? எந்த ஊருக்குப் போகத் திட்டமிட்டிருக்கிறீர்கள்? இல்லை, உள்ளூரிலேயே பொதுப்பணி ஏதாவது கூட்டு முயற்சியிலோ, தனியாகவோ செய்யப் போகிறீர்களா? நீங்கள் என்ன செய்யப் போகிறீர்களோ அதை கோகுலத்திற்கு எழுதியனுப்புங்கள். இது, இந்தக் கோடை விடுமுறையில் செய்ததாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. கடந்த விடுமுறையைக் கழித்ததாகக் கூட இருக்கலாம். ஏற்றதாக இருப்பின் கோகுலத்தில் வெளியிடுகிறோம். என்ன...? இப்பொழுதே எழுத ஆரம்பித்துவிட்டீர்களா?

கோடை விடுமுறை வருகிறது என்பதை எண்ணும்போதே உள்ளுக்குள் உதறலாக இருக்கிறது! நீங்கள் போட்டியில் கலந்து கொண்டு அனுப்ப உள்ள கடிதங்கள், கதை, கட்டுரைகளின் சுமையை நினைத்துத்தான் இந்த உதறல்! ஆனால் இது மகிழ்ச்சியும், பெருமையும் கலந்த உதறல்! கோகுலத்தின்மேல் உங்களுக்கு உள்ள பற்றுதலின் வெளிப்பாடு இல்லையா இவை?

பல சிறுவர் சிறுமியர் தொடர்கதை அனுப்பட்டுமா, படக்கதை எழுதட்டுமா என்று கேட்டு எழுதுகிறார்கள். இதற்கு நான் ஏற்கெனவே பலமுறை பதில் கூறியிருக்கிறேன். எடுத்த எடுப்பில் தொடர்கதையோ, படக்கதையோ எழுத முயற்சிக்காதீர்கள். முதலில் சிறுகதைகள் எழுதி, வெளியாகி அனுபவப்பட்ட பிறகு தொடர்கதை எழுத முயலுங்கள். படக்கதை எழுத முதிர்ந்த அனுபவம் தேவை. கதைகளை அனுப்புமுன் உங்கள் வயதுள்ள நண்பர்களுக்கோ, இல்லை உறவினர்களுக்கோ படித்துக் காட்டி, அவர்கள் அந்தக் கதையை எப்படி வரவேற்கிறார்கள் என்பதைக் கவனித்து, தேவை இருப்பின் மாற்றங்கள் செய்து பிறகு அனுப்புங்கள். இதுதான் வளர்ச்சிக்கு வழி.

அடுத்த இதழில் வழக்கம்போல் உங்கள் அறிவுக்கும் பொழுதுபோக்குக்கும் உதவும் வகையில் கோடை விடுமுறைப் போட்டி உண்டு. இதுதவிர, வழக்கமான போட்டியும் உண்டு.

கோகுலத்திற்கு பேட்டிகளைத் தயாரித்து அனுப்ப ஆர்வமுள்ளவர்களைத் தொடர்பு கொள்ளுமாறு எழுதியிருந்தோம். ஏராளமானவர்கள் எழுதியிருக்கிறார்கள். இவை பரிசீலனையில் உள்ளன.


எல்லோருக்கும் புத்தாண்டு வாழ்த்துகள்.

அன்புடன்,
ரேவதி
(கௌரவ ஆசிரியர்)



கோகுலம் 1996 ஏப்ரல் இந்த இதழில்....


கடிப்பது எந்த எறும்பு? பக்கம் 77




தேன்மொழி வாழ்க! (படக்கதை) பக்கம் 40



தந்தங்கள் பக்கம் 69





சிங்கராஜா போட்ட சத்தியம்
பக்கம் 21


''வாழைப்பழம் எவ்வளவு?''
''அறுபது காசு''
''நாற்பது காசுக்குத் தருவீங்களா?''
''நாற்பது காசுக்கு தோல்தான் கிடைக்கும்.''
''சரி அப்ப இந்தாங்க இருபது காசு தோலை உரிச்சு நீங்களே வச்சுக்கிட்டு பழத்தை மட்டும் கொடுங்க!''

– நா. செந்தில்குமார்




''எங்கள் வீட்டு பூனை எலியே பிடிக்காது.''
''ஏன்?''
''அதற்கு எலியே பிடிக்காது!''

– சித்திரவேலு



''அந்த பட்டிமன்றத்துக்கு முட்டாள்தனமா தலைப்பு வெச்சிருக்காங்களா...! என்ன தலைப்பு?''
''உருவத்தில் பெரியது எலியா? யானையா?''

- இரா. அ. தென்றல்நிலவன்



யாருக்குப் போட்டி?


அந்த நடுநிலைப் பள்ளியின் ஆண்டு விழாவிற்குத் தேதி குறித்தாகி விட்டது. மாணவ மாணவியருக்கான பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளுக்கான அறிவிப்பும் வெளியாயிற்று. ஒருசில மாணவ மாணவிகள் மட்டும் ஆர்வத்துடன் ஓடி வந்து போட்டிகளுக்குத் தங்கள் பெயர்களைப் பதிவு செய்திருந்தார்கள்.

போட்டியாளர் பட்டியலை மேலோட்டமாக நோட்டம் விட்ட தலைமையாசிரியரின் முகம் மெல்லச் சுருங்க ஆரம்பித்தது. ஏதோ இனம்புரியாத ஒருவகைக் குறை அவரது உள்ளத்தை உறுத்துவது போலிருந்தது. ஆறாம் வகுப்பில் முதல் ரேங்கில் வரும் அமுதாவின் பெயரைப் பட்டியலில் காணோமே? ஆனால், எல்லாப் பாடங்களிலும் ஏகமாகக் கோழி முட்டை வாங்கும் கோபுவின் பெயர் முதலாவதாக இருக்கிறதே! ஏழாம் வகுப்பில் தமிழில் நூற்றுக்கு நூறு வாங்கும் ஈஸ்வர் ஏன் எந்தப் போட்டியிலும்



கலந்து கொள்ள வில்லை? தமிழில் சா...ாக ஒரு வாக்கியம் எழுதத் தெரியாத சதிஷ் கூடத் தைரியமா கத் தன் பெயரைப் பதிவு செய்திருக்கிறானே!

'கெட்டிக்காரப் பிள்ளைகள் எல்லாம் ஏன் இப்படிப் போட்டிகளில் கலந்து



குரு. சீனிவாசன்

கொள்ளாமல் விலகி நிற்கிறார்கள்? காரணம் தெரிய வேண்டுமே?"

தனக்குத்தானே கேட்டுக் கொண்ட தலைமையாசிரியர் சற்று நேரம் குழம்பித் தவித்தார். அடுத்த நிமிடமே அமுதாவையும் ஈஸ்வரையும் அழைத்து வர ஏவலர் பறந்தார்.

"படிப்பிலே மட்டும் திறமை போதாது. ஆடல், பாடல், பேச்சு, எழுத்து என்று எல்லாத் திறமைகளையும் படிக்கிற காலத்திலேயே வளர்த்துக்க வேண்டாமா? ஏன் ஆண்டு விழாப் போட்டிகள் எதிலும் நீங்க கலந்துக் கலே?" - சற்று கண்டிப்பான தொனியிலேயே கேட்டார் தலைமையாசிரியர்.

''போட்டியிலே உண்மையான திறமையைக் காட்ட வாய்ப்பு இருக்கணும். ஜெயிக்கணும் அது இல்லாத போது வீணா ஆசைப்பட்டு என்ன ஆகப் போகுது சார்?'' - மனதில் பட்டதை மறைக்காமல் சொன்னாள் அமுதா.

"படிப்பிலே சரா சரிக்கும் கீழே நிற்கிற பசங்க கூட ஆர்வமா கலந்துக்கிறாங்களே! நீங்க ஏன் முயற்சி பண்ணக் கூடாது? எதிலுமே தன்னம்பிக்கை வேணும்" - அக்கறையோடு அறிவுரை கூறினார் அவர்.

"நாங்க கலந்துக்கிட்டாலும் எங்களுக்கென்ன பரிசு கிடைக்கவா போகுது சார்?" - தயக்கத்தோடு கூறினான் ஈஸ்வர்.

"திறமையைக் காட்டினா ஏன் பரிசு கிடைக்காது?" - எச்.எம்.மின் எதிர்க் கேள்வி வியப்போடு வெளிவந்தது.



"ஒரே ஒரு மார்க்குல நான் ஃபெயில் ஆயிட்டதை நினைச்சா மனசு வருத்தமா இருக் குபா."

"எவ்வளவு மார்க்குதான் நீ எடுத் திருக்கே?"

"அதான் சொன்னேனே... ஒரே ஒரு மார்க்குன்னு!'

- சீர்காழி வி. ரேவதி

"நிச்சயமா கிடைக்கப் போறதில்லே சார்!" - உறுதியான குரலில் கூறினாள் அமுதா.

"அதுதான் ஏனென்று கேட்கிறேன்?" - பொறுமையை இழந்தவர் போல எரிச்சலாக வினவினார் அவர்.

"நாங்க இதைச் சொல்றதுக்கு எங்கள மன்னிக்கணும் சார். ஒரு சின்ன சந்தேகம்; எல்.கே.ஜி. குழந்தைங்களுக்குன்னு நடக்கிற ஓட்டப் பந்தயத்திலே ஷைனி வில்ஸனும், ரோசாக் குட்டியும், பி.டி. உஷாவும் வந்து கலந்துக்கிட்டா, அந்தப் பச்சைக் குழந்தைங் களால் பரிசை நெனச்சிக் கூடப் பார்க்க முடியுமா? நீங்களே சொல்லுங்க?" - ஈஸ்வர் ஏதோ புதிர் போட்டுப் பேசினான்.

"நீ என்ன சொல்றே?" - விளங்காமல் வினவிய தலைமையாசிரியரின் கேள்வியில் உண்மையை அறியத் துடிக்கும் ஆவல் தொனித்தது.

"உள்ளத்தைத்தான் சொல்றோம் சார். கோபுவும் சதீஷும் படிப்பிலே சுமாரா இருந் தாலும், அவங்களோட அப்பா அம்மாக்க நிறையப் படிச்சவங்க. அவங்க எழுதிக் கொடுக்கிறதை கோபுவும் சதீஷும் குருட்டு மனப்பாடம் பண்ணி எழுதிக் காட்டியும் ஒப்பிச்சும் பரிசுகளைத் தட்டிட்டுப் போயிடுறாங்க. கடந்த ரெண்டு மூணு வருஷமா கட்டுரை, பேச்சுப் போட்டிகளிலே இதுதானே நடந்துக்கிட்டு வருது? எனக்கும் அமுதாவுக்கும் யார் எழுதிக் கொடுப்பாங்க? எங்க அப்பா அம்மாக்க பெரிய படிப்புப் படிக்காதவங்க ஆச்சே?" - ஈஸ்வரின் வாக்கு மூலத்தில் அவனது சாமர்த்தியம் வெளிப் பட்டாலும், கூடவே ஏக்கமும் எதிரொலிப் பதை அவரால் நன்கு உணர முடிந்தது.

அவர்களுக்கு என்ன சமாதானம் சொல்வதென்று தலைமையாசிரியருக்குச் சட்டென்று பிடிபடவில்லை. தன் மனத் தைச் சிந்தனையில் ஓட விட்டார். அதற்குள் அமுதா தனது மனக்குறையை வார்த்தை களாக்கிக் கொட்டத் தொடங்கி விட்டாள்.

"சின்னவளான என்னோட யோசனைக்கு மன்னிக்கணும் சார். இங்கே படிக்கிற பிள்ளைகளின் பெற்றோர்களுக் குன்னு ஒரு போட்டியை வையுங்க. அவங்க தாராளமா வந்து கலந்துக்கிட்டு தங்களோட திறமையைக் காட்டட்டும். ஆனா குழந்தை களுக்கான போட்டிகளிலே அவங்க மறை முகமா கலந்துக்கிட்டாலும் போட்டியின் நோக்கம் மட்டுமில்லே; புனிதமும் போயிடும் இல்லியா? பூனைகளுக்காக நடக்கிற போட்டியிலே யானைகள் வந்து நிக்கிறது என்ன நியாயம் சார்?"

"ஈஸ்வர் அமுதா, உங்க ரெண்டு பேருடைய உணர்ச்சிகளையும் நான் நல்லாப் புரிஞ்சிக்கிட்டேன். இனிமேலே இந்த மாதிரி மறைமுகமான தலையீடுகள் நடக்காமே நானே பார்த்துக்கிறேன். அதற்கான வழிகள் இல்லாமலே தடுத்துடலாம். நீங்க இனி தைரியமா தன்னம்பிக்கையோட போட்டி களில் கலந்துக்கலாம்!" என்று அந்த இருவரையும் தட்டிக் கொடுத்து சமாதானம் பண்ணி அனுப்பி வைத்தார் தலைமை யாசிரியர். அடுத்த நிமிடமே போட்டிகளுக் கான புதிய விதிமுறைகளோடு சுற்றறிக்கை ஒன்று எல்லா வகுப்புகளுக்கும் பறந்தது.

'ஆண்டு விழாப் பேச்சு மற்றும் கட்டு ரைப் போட்டிகளுக்கான தலைப்புகள் போட்டி தொடங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகப் பள்ளி எல்லைக் குள்ளேயே அறிவிக்கப்படும்?' - சற்றும் எதிர்பாராத இந்தப் புதிய அறிவிப்பால் சதீஷ், கோபு போன்றவர்களின் உற்சாகம் சரிந்து மறைந்த இடம் தெரியவில்லை. சொந்தக் காலில் நிற்க முடியாத அவர்கள் அதற்கப்புறம் போட்டிக் களத்தை எட்டிப் பார்க்கவே இல்லை. உண்மையிலேயே திறமையுடைய ஈஸ்வர், அமுதா போன்ற மாணவ, மாணவியரின் வெற்றிக்கு இனிமேல் என்ன தடை?



சிங்கம் போல...

கந்தன் ஓர் ஏழை விவசாயி. ஒருநாள் விதை நெல் வாங்கிவரக் காட்டு வழியாக டவுனுக்குச் சென்று கொண்டிருந்தான். அப்போது ஒரு கொன்று மாட்டைத் துரத்தி மடக்கியது; சிங்கம் தின்ன ஆரம்பித்தது.

அந்த வழியாக ஒரு நரி வந்தது. சிங்கம் இரைதின்பதைப் பார்த்தது. சந்தடி செய்யாமல் அது அருகிலிருந்த மரத்தடியில் ஒளிந்து கொண்டது. சிங்கம் மாட்டை வயிறு முட்டத் தின்று விட்டு, மீதியை அப்படியே விட்டு விட்டுச் சென்றது. இதை எதிர்பார்த்துக் கொண்டிருந்த நரி, உடனே அந்த மிச்சத்தை அப்படியே இழுத்துக் கொண்டு தன்னிடத்திற்குச் சென்றது.

உடம்பு அலுங்காமல் நரிக்கு இரை கிடைத்ததைப் பார்த்த கந்தனுக்கு ஒரு யோசனை தோன்றியது. நாமும் ஏன் அந்த நரியைப் போல் கடவுள் மீது பாரத்தை போட்டுவிட்டு 'அக்கடா' என்று ஒரு மூலையில் அடங்கிக் கிடக்கக் கூடாது? எப்படியாவது ஆண்டவன் அந்த சிங்கத்தைப் போன்றவர்கள் மூலமாக நமக்கு உணவு கிடைக்க வழி பண்ணுவான் என்று எண்ணினான் முட்டாள் கந்தன். எனவே, நெல் வாங்கச் செல்லாமல் வீட்டுக்கே திரும்பி வந்தான், கடவுள் மேல் பாரத்தைப் போடுவிட்டு ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு விட்டான்.

ஒருநாள் ஓடியது. கந்தன் வெளியே வராமல் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தான். அவனுக்கு உணவு கிடைக்கவில்லை. இரண்டாம் நாளும் அப்படியே. அன்றும் உணவு கிடைக்கவில்லை. மூன்றாம் நாளும் அதே நிலை. அன்றும் உணவு கிடைக்கவில்லை. நான்காம் நாள் கந்தனால் பசியைத் தாங்க முடியவில்லை.

பொங்கிப் பொங்கி அழுது கொண்டிருந்தான்.

ஊருக்குச் சென்றிருந்த அவன் மனைவி திரும்பி வந்தாள். கந்தன் நடந்தவற்றைக் கூறினான். அவன் மனைவி சிரித்தாள்.

"உழைக்காம அடுத்தவங்க தயவுல சாப்பிட நினைக்கிற அந்தத் தந்திரக்கார நரி மாதிரி இருக்க, ஏன் ஆசைப்படறீங்க? தானே கஷ்டப்பட்டுத் தன் உழைப்பால் சாப்பிடும் அந்த கம்பீரமான சிங்கத்தைப் போல் இருக்கப் பாருங்களேன்?" என்றாள் மனைவி.

கந்தன், தான் எடுத்த முடிவு தவறானது என்பதை உணர்ந்தான். உழைக்க எழுந்தான்.

— பாசி. கோகுலன்.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் வெளியிடத் தேர்ந்தெடுக்கப்பட்ட போட்டிக் கதை–7

பிள்ளையார் பிழைத்தார்!

அ. கங்காதரன்

கிராமமே பெரும் பரபரப்பாக இருந்தது. மக்கள் கூட்டம் கூட்டமாக அங்கும் இங்குமாய் ஏதோ வியப்பாகப் பேசியபடி வீதியில் சென்று கொண்டிருந்தனர். என்றுமே இல்லாத அளவுக்கு ஆரவாரம்! என்ன காரணம் இதற்கு?

வெங்கட்டிற்குப் புரியவில்லை. பள்ளி விட்டு வருகையில் நண்பன் ஆனந்த்திடம் கேட்டான்.

“அதுவா! பக்கத்து கிராமம் புதுப்பட்டி இல்லே, அங்கேயிருந்து ஏதோ பிள்ளையார் சிலையைத் திருடிகிட்டு வந்திருக்காங்களாம். அதைப் பாக்கத்தான் சாரிசாரியாப் போயிக்கிட்டு இருக்காங்க.”

“திருடிக்கிட்டு வந்ததா?”– வெங்கட் வாயைப் பிளந்தான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

“ஆமாண்டா! நம்ம கிராமத்துல அதைப் பிரதிஷ்டை பண்ணப் போறாங்க. திருடி வந்ததா இருந்தாதான் ரொம்ப விசேஷமாம். அதுதான் ரொம்ப ராசியானதாம். எங்க அப்பா கூட சொன்னார்.”

“திருடறதே தப்பு. அதுவும் பிள்ளையாரையே திருடறதுங்கறது எத்தனை பெரிய தப்பு!”

“என்கிட்டே நியாயம் கேட்டேன்னா நான் என்னடா பண்ணட்டும்? என்னமோ நான் எடுத்து வந்த மாதிரில்ல எங்கிட்டே பேசறே?”

வெங்கட் அதற்குப் பிறகு ஒன்றுமே பேசவில்லை. ஆனந்த் கேட்பது நியாயம் தானே? அவனால் எப்படிப் பதில் சொல்ல முடியும்? இருந்தும், கடவுளையே திருடுவது என்பது தப்பாகாதா? இப்படித் திருட்டு புத்தியை நாமே உற்சாகப்படுத்துவது நியாயமா? எண்ணி எண்ணி வெங்கட் மனம் குமைந்தான். அவனால் அதை ஏற்க முடியவில்லை.

வீடு வந்து விட்டதைக் கூட அவனால் உணரமுடியவில்லை. நண்பன் விடை பெற்றதும்தான் தன் நிலைக்கு வந்தான்.

“ஏண்டா வெங்கி, வாசல்லயே நின்னுகிட்டு இருக்கே?”

அம்மா சற்று உரக்கக் கேட்டதும் ‘ஒண்ணுமில்லேம்மா’ என்று உள்ளே வந்தான். ‘பிள்ளையாரைத் திருடிக்கிட்டு வந்தது நியாயமா’ என்ற கேள்வி மனதில் உறுத்திக் கொண்டே இருந்தது. இது பற்றி அண்ணனிடமும் அப்பாவிடமும்தான் கேட்க வேண்டும். அம்மாவிடம் கேட்டால் ஊர் வழக்கம்,

அது இது என்று ஏற்க முடியாத சாக்குப் போக்கு எதையாவது சொல்லி விடுவான். அம்மாவிடம் கேட்கக் கூடாது என்று முடிவு கட்டியவனாய் முகம் அலம்பச் சென்றான்.

சாப்பாட்டை முடித்து விட்டு வெங்கட் பாடப் புத்தகத்தைப் படித்துக் கொண்டு இருந்தான். கண்கள்தான் புத்தகத்தை வட்டமிட்டனவே தவிர எண்ணமெல்லாம் திருடிக் கொண்டு வந்து விட்ட பிள்ளையாரைப் பற்றித்தான். சிறிது நேரத்தில் டியூஷன் சென்றிருந்த அண்ணன் வந்தான். கேட்கலாமா என எண்ணியவன், வந்ததும் வராததுமாக ஏதாவது கேட்டால் எரிச்சல் படுவானே என்ற எண்ணத்தில் பேசாமலிருந்து விட்டான்.

அண்ணன் சாப்பிட்டு விட்டு வந்தான்.

"அண்ணா, நம்மூரில் ஒரு பிள்ளையார் சிலையைக் கொண்டு வந்து வெச்சிருக்காங்களாமே?

"அது வந்து, தெரியுமே!"– அண்ணன் சர்வ சாதாரணமாக, ஆர்வம் காட்டாமல் மெதுவாகப் பதிலுரைத்தான்.

"இல்லேண்ணா. அது திருடிக் கொண்டு வந்ததாமே?"– 'திருடிக் கொண்டு என்பதை அழுத்திச் சொன்னான் வெங்கட்.

"அது ரொம்ப ரொம்ப, அழகான சிலை. வலப்பக்கம் துதிக்கை வளைந்த, வலம்புரி விநாயகர். அந்தப் பிள்ளையாரைத் திருடி வந்தால்தான் நம்ம ஊருக்கு நல்ல காலம். இனிமே பாரு நம்மூர்ல காலந்தப்பாம மழை பெய்யும்."

"இருக்கட்டுமே, அதுக்காக இன்னொரு ஊர் பிள்ளையாரைத் திருடறது தப்புத்தானே?"

"யாரில்லேன்னா? சில விஷயங்களில் அதெல்லாம் பார்க்கக் கூடாதுடா. அப்பிடி பார்த்தா நம்ம ஊர் மக்கள் அதிர்ஷ்டம் இல்லாம அல்லல்பட வேண்டியதுதான்."

"திருடினாத்தான் அதிர்ஷ்டம்னு யாரு சொன்னாங்க?"


"நானே பாலாஜி வீட்டில இருந்த சின்ன சைஸ் பிள்ளையார் பட்டி போட்டோவைத் திருடி, பரீட்சை அட்டைல ஒட்டிக்கிட்டேன். அதுனாலதான் அடுத்த பரீட்சையில் 'ஏ' கிரேடு வாங்கினேன். ஹூம், சில விஷயங்கள்ல நீ என்னமோ உன்னைப் பெரிய சீர்திருத்தவாதியா நெனச்சு பேசறேடா வெங்கி. இது உன் வயசுக்குப் பொருத்தமா இல்லே!"

அண்ணனின் பேச்சிலிருந்த எகத்தாளத்தை உணர்ந்ததும் வெங்கி மேற்கொண்டு ஒன்றும் பேசவில்லை. மற்ற சமயமெனில் சண்டை பிடித்திருப்பான்.

இது பற்றி அப்பா வந்ததும் அவரிடமும் வெங்கி கேட்டான்.

"இதெல்லாம் ஒரு நம்பிக்கைதான் வெங்கி" என்றார் அவர். அண்ணன், அப்பா இருவருமே இப்படிக் கூறியதால் வெங்கட் சிறிது அதிர்ச்சியடைந்தான்.

பிள்ளையாரை அவனுக்கு ரொம்பப் படிக்கும். அப்படிப்பட்ட தெய்வமான பிள்ளையாரையே இவர்கள் பக்கத்து ஊரில் இருந்து திருடிக் கொண்டு வந்து



விட்டார்களே! கேட்டால் தலைக்குத்தலை ஏற்க முடியாத சமாதானம்! இந்தத் திருட்டை மட்டும் ஏன் போலீஸ்காரங்க கண்டுக்காம இருக்காங்க?

இரவில் வெங்கிக்குத் தூக்கமே பிடிக்க வில்லை. திருடுவது என்பது தீய செயல். அதிலும் ஒரு சாமி சிலையையே, அதையும் கூடத் தெரிந்தே திருடுவது எத்தனை கொடுமையான செயல்! ஒரு திருட்டை ஊராரே ஒற்றுமையாக இருந்து நடத்துவதால் திருடு நியாயமாகி விடுமா? வெங்கட் புரண்டு புரண்டு படுத்தான்.

காலையில் வெங்கட் கண் விழித்த போது அப்பாவும் அம்மாவும் குளித்துவிட்டு எங்கோ கிளம்பிக் கொண்டிருந்தார்கள். அண்ணனைக் காணவில்லை.

'நீயும் சீக்கிரமா குளிச்சிட்டுக் கிளம்பு, கோவிலுக்குப் போகணும்''- அப்பா கூறியபோது வெங்கட் புருவத்தை உயர்த்தினான்.

"எந்தக் கோவில்?"

"புதுசா பிள்ளையார் வைக்கப் போகிறார்களே, அங்கதான். இன்று ஹோமம் நடக்கிறது. அதைப் பார்க்கத்தான்"- அம்மா விளக்கினாள். மனதில் குறுகுறுப்புடன் வெங்கட் கிளம்பினான்.

அவர்கள் சென்றபோது ஹோமம் முடியும் நிலையில் இருந்தது. எக்கச்சக்கமான கூட்டம். கிராமமே திரண்டு அங்கே குழுமி இருந்தது.

அப்பா குருக்களிடம் கேட்டார்.


"எப்போ அடிக்கல் வைக்கப் போறீங்க?"

"பிள்ளையாரை சில நாள் மறைச்சு வெச்சுத் தான் மத்த நடவடிக்கை எடுக்கணும். புதுப்பட்டிக் காரங்க என்ன பண்ணப் போறாங்கன்னு பார்த்துத்தான் பிரதிஷ்டை பண்ணணும்'' என்றபடி குருக்கள் சென்று விட்டார்.

வெங்கட் பிள்ளையாரைப் பார்த்தான். எல்லா பிள்ளையார்களையும் போலத்தான் அந்தத் திருடிவந்த பிள்ளையாரும் அழகாக, பார்த்தவர் மனம் கவரும்படி இருந்தார். இருந்தாலும் அவர் கண்களில் ஏதோ வருத்தம் தெரிவது போல் தோன்றியது வெங்கட்டுக்கு.

"வெங்கட், என் கதியைப் பார்த்தாயா? எல்லோரும் என்னிடம் வரம் கேட்டு வேண்டிப்பாங்க. ஆனால் இன்றைக்கு என் பரிதாப நிலையைப் பார்த்தாயா? உன்னை மாதிரி எத்தனை பிள்ளைகள் என்னைக் காணாமல் புதுப்பட்டியில் தவிப்பாங்க தெரியுமா? உங்க கிராமத்துக்கு வேணுமானால் புதுசா ஒரு பிள்ளையாரை செய்யச் சொல்லி வாங்கிக்கக் கூடாதா?" என்று தன்னிடம் பிள்ளையார் முறையிடுவது போல் தோன்றியது வெங்கட்டுக்கு.

அவனுக்கு மனதை என்னவோ பண்ணியது. சாப்பிட்டானதும் புதுப்பட்டி கிராமத்துக்கு விரைந்தான். அவன் நண்பன் ரத்னம் புதுப்பட்டிதான். தங்கள் ஊரில் உள்ள பிள்ளையார்



திருடு போனதைப் பற்றி அங்கும் அதிர்ச்சிதான். குறிப்பாக, குழந்தைகள் கலங்கியிருந்தார்கள்.

"ரத்னம். உங்க ஊர் பிள்ளையார் எங்கும் போகலே. எங்க ஊரில்தான் இருக்கார். திருடிக்கிட்டு வந்திருக்காங்க" என்றான் வெங்கட்.

"நல்லா தெரியும்டா வெங்கி," என்றான் ரத்னம்.

"பேசாம உங்க ஊர்காரங்கள போலீஸுல புகார் பண்ணச் சொல்லேன்?'

"நாங்க சொல்லியாச்சு வெங்கி. அதுல ஒரு சிக்கல் இருக்கு. எங்க ஊர் பிள்ளையார்... அதாவது இப்ப உங்க ஊர்ல இருக்காரே,... அவரை தாழப்பட்டி கிராமத்துலேருந்து திருடிக்கிட்டு வந்தாங்களாம். அதனால போலீசுக்குப் போனால் பெரிய பிரச்சனையாயிடும்னு எல்லோரும் பயப்படறாங்க."

வெங்கட் அயர்ந்து நின்றான்.


"இருந்தாலும், இந்த ஜனங்கள் எல்லாம் ரொம்ப மோசம். சாமியையே திருடறாங்களே!"

அவர்கள் நண்பன் மாரியப்பன் ஓடோடி வந்தான்,

"டேய் ரத்னம். எங்க தோட்டத்து கிணற்றை ஆழப்படுத் தினப்போ, ஒரு பிள்ளையார் சிலை கிடைச்சிருக் குடா."

ஊர்காரர்கள் கிணற்றடியில் கூடியிருந்தனர் பிள்ளையாரைப் பார்க்க. பிள்ளையார் மிக அழகாக, பெரிதாக, திருடுபோன பிள்ளையார் மாதிரியே இருந்தார்.

தன் ஊரிலிருந்து திரும்பிய வெங்கட் நண்பர்களைக் கூட்டி ஆலோசித்தான்.



பிள்ளைகள் எல்லாருக்குமே பிள்ளையாரைத் திருடிக் கொண்டு வந்திருப்பது மகிழ்ச்சியைத்தர வில்லை என்பதை அறிந்து கொண்டான்.

"நாம பிள்ளைகள் எல்லோரும் ஒன்றாகக் கூடி, திருடிக் கொண்டு வந்த பிள்ளையாரை புதுப்பட்டி கிராமத்திற்கே கொண்டு போய்ச் சேர்த்துவிட்டு, அங்கே கிணற்றை ஆழப்படுத்தும்போது கிடைத்த பிள்ளையாரை, அவர்களிடம் வேண்டிப் பெற்று வந்து நம்ம ஊரில் பரதிஷ்டை பண்ணலாம் என்று கூறிப் பார்ப்போமா?" என்று தன் கருத்தாகக் கூறினான் வெங்கட்.

அந்தக் கருத்துக்கு பலமான வரவேற்பு. சுமார் அறுபதுக்கு மேற்பட்ட கிராமத்துக் குழந்தைகள். வெங்கட்டின் தலைமையில் தெருக்களில் கோரிக்கை ஊர்வலம் போனார்கள். பெரியவர்கள் மனம் அசைய ஆரம்பித்தது.

"பிள்ளைகளின் கோரிக்கை நியாயமானதே. பிள்ளையாரைப் பார்த்ததும் வேண்டிக்கத் தோன்றாது. திருடிக்கிட்டு வந்த பிள்ளையார்தானே என்ற எண்ணமே தோன்றும் அதோடு, பக்கத்து கிராமத்துப் பகைவேற வளரும்" என்று பெரியவர்களும் அவர்கள் கோரிக்கையை ஆதரித்தனர்.

ஊர்ப் பெரியவர்கள், புதுப்பட்டிக்கு வந்து அந்த கிராமத்தின் தலைவர்களுடன் பேசினார்கள். குழந்தைகள் தெரிவித்த கருத்து ஏற்கப்பட்டது. ஒரு நல்ல நாளில், திருடப்பட்டு வந்திருந்த பிள்ளையார் ஊர்ப் பிள்ளைகள் புடைசூழ பல்லக்கில் புதுப்பட்டிக்குக் கிளம்பினார். அதே நேரத்தில் கிணற்றில் கிடைத்த பிள்ளையாரை பல்லக்கில் வைத்துக் கொண்டு பிள்ளைகள் புடைசூழ புதுப்பட்டியில் இருந்து ஊர்க்காரர்கள் கிளம்பினர். நடுவழியில் இரண்டு பிள்ளையார்களும் சந்தித்து இடம் மாறிக் கொண்டனர்.

நாளைக்கு இரண்டு பிள்ளையார்களுக்கும் அவரவர்கள் ஊரில் கும்பாபிஷேகம். நீங்களும் வாங்களேன்!



திறவு கோல்!

இளையர் அறிவியல் களஞ்சியம், மணவை முஸ்தபா, பக். 320 ரூ.95/-, மணவை பப்ளிகேஷன்ஸ், AE.103 அண்ணா நகர், சென்னை – 40.

அறிவியல் தமிழில் குறிப்பிடத்தக்க சாதனைகள் பல புரிந்து வருபவரும், யுனெஸ்கோ தமிழ் கூரியர் பதிப்பின் ஆசிரியருமான இந்த நூலாசிரியர் தமிழ் அறிவியல் உலகுக்கு வழங்கியுள்ள புதிய பரிசு இந்தக் களஞ்சியம். குழந்தைகள் கலைக் களஞ்சியம் 10 தொகுதிகளும் வெளி வந்து எத்தனையோ ஆண்டுகள் கடந்து விட்டன. இடையே எண்ணிலடங்கா அறிவியல் வளர்ச்சி. இவை களையும் இணைத்து, அறிவியல் கண்ணோட்டத்தில் ஒவ்வொரு பொருளையும் அணுகி இந்தக் களஞ்சியத்தை வழங்கியுள்ள ஆசிரியரைப் பாராட்ட சொற்கள் போதாது! ஒவ்வொரு பொருளிலும், பக்கத்திலும் ஆசிரியரின் கவனமான ஈடுபாட்டையும் உழைப்பையும் காண முடிகிறது. ஒரு பல்கலைக் கழகம் செய்ய வேண்டிய அரிய பணியை இவர் அடக்கமாகச் செய்துள்ள துணிவையும் சாதனையையும் எத்தனை பாராட்டினாலும் தகும். பரிசளிக்க ஏற்ற நூல். பெருமைதரும் தயாரிப்பு. பள்ளி நூலகங்கள், வினாடிவினா நடத்துவோர், அறிவியலில் ஈடுபாடுள்ளோர் ஆகிய ஒவ்வொருவரிடமும் அவசியம் இருக்க வேண்டிய தகவல் நூல். ஏனெனில் இது 20ஆம் நூற்றாண்டுவரை நிகழ்ந்துள்ள அறிவியல் முன்னேற்றங்களை அறிமுகப்படுத்தி, 21ஆம் நூற்றாண்டுக்கு அழைத்துச் செல்லும் திறவுகோல்.



கோபம்

மு. நடராசன்

அண்ணன் பாஸ்கர் சொன்ன இனிப்பான செய்தியைக் கேட்ட போது தன் காதுகளையே நம்ப முடியவில்லை சுதாவிற்கு!

விடுமுறை நாட்களில் கூட அலுவலகக் கோப்புகளை வீட்டில் பார்த்துக் கொண்டிருக்கும் அப்பா, இன்று எல்லோரையும் மெரீனா பீச்சுக்கு அழைத்துச் செல்லப் போவதாய் பாஸ்கர் கூறியபோது மகிழ்ச்சியாக இருந்தது.

அன்பான குடும்பம். அழகாக காரில் வந்து இறங்கினார்கள். காரை உரிய இடத்தில் நிறுத்திவிட்டு வந்த அப்பா சுதாவின் கையைப் பிடித்துக் கொள்ள, பாஸ்கர் அம்மாவின் கையைப் பிடித்துக் கொண்டான்.

இதமான காற்று மேனியை வருடிவர வேற்க, கடற்கரையில் ஆனந்தமாய் நடந்தனர்.

கடற்கரையையொட்டி திடீரென்று முளைத்திருந்த குடிசைகளைப் பார்த்து அருவருப்பாய் முகம் சுளித்தான் பாஸ்கர்.

“இப்ப என்ன ஆச்சு உனக்கு? ஏன் இப்படி முகத்தை சுளிக்கிறே?” – வெகுளியாய்க் கேட்டாள் சுதா.

“பின்னே என்ன? இந்த அழகான கடற்கரையில் இந்தக் குடிசைகளும் கோவணாண்டிகளாகத் திரியற குழந்தைகளும் நல்லாவா இருக்கு? அசிங்கம்” – வெறுப்பை உமிழ்ந்தான் பாஸ்கர்.

“அழகு என்பதும் அசிங்கம் என்பதும் பார்வைக்கு உட்படும் பொருளை மட்டும் அல்ல பார்க்கிறவங்களோட மனசையும் பொறுத்த விஷயம். இவங்க கடலை நம்பி வாழறவங்க. இவங்களும் உன்னை மாதிரி மடிப்புக் கலையாத சட்டை டிராயர் போட்டுக் கொண்டால், மீன் பிடித்து வரும் இவங்க அப்பா அம்மாவுக்கு எப்படி உதவ முடியும்?” – மகனைப் பற்றி நன்கு அறிந்த அப்பா நயமாய்ச் சொன்னார்.

அப்பாவின் பதில் பாஸ்கருக்கு அமைதி அளிக்கவில்லை. கையில் கொண்டு போயிருந்த கேமராவை எடுத்து வைத்துக் கொண்டு, “அம்மா, அப்பா, சுதா நீங்க மூணு பேரும் அந்தக் கட்டுமரத்துக்கு முன்னால் அப்படியே நில்லுங்க. ஒரு படம் எடுக்கறேன்” என்று காமிராவில் உருவத்தைச் சரிசெய்தான். அவன், கோணம் பார்த்து, ‘கிளிக்’ செய்யப் போகும் நேரத்தில், அம்மா, அப்பா, சுதாவுக்குப்

பின்னால் யாரோ தெரிந்தார்கள். பார்வையைக் காமிராவில் இருந்து விலக்கி, நிமிர்ந்து பார்த்தான். அவன் முகத்தில் வெறுப்பு நிறைந்தது. காரணம், அம்மா, அப்பா, சுதாவுக்குப் பின்னால் காணப்பட்டவர்கள், இரு கோவணாண்டிச் சிறுவர்கள்.


"விலகிப் போங்கடா அப்பாலே" என்று வெறுப்பை உமிழ்ந்தான்.

''அண்ணா, எங்களையும் போட்டோ எடுங்கண்ணா."

"காசு வேணுமானாலும் தந்துடறோம்."

"போங்கடா போக்கத்த பரட்டைகளா. உங்க கோவணாண்டிக் கோலத்தை போட்டோ வேற எடுக்கணுமா?" என்று விரட்டி விட்டு, அப்பா, அம்மா, சுதாவை மட்டும் புகைப்படம் எடுத்தான் பாஸ்கர்.

''அம்மா, தண்ணீரில் நிக்கணும்மா" என்று சுதா கேட்கவும் எல்லோரும்



அலைக்கு வந்தனர்.

தண்ணீரில் நின்று, அலைகள் வந்து கால்களைத் தீண்டும் போது, உடலெங்கும் ஏற்படும் மகிழ்ச்சிப் பெருக்கை எத்தனை மணி நேரத்திற்கும் அலுப்பின்றி அனுபவிப்பதில் அப்படியொரு இன்பம் அவர்களுக்கு!

''நீங்க வேணும்னா தண்ணீரில் இன்னும் கொஞ்ச நேரம் நில்லுங்க. முன்னே போயிடாதிங்க. நான், இதோ நமக்கு முன்னே போகும் எங்க ஆபீசரின் பெற்றோரைப் பார்த்து நலம் விசாரித்து விட்டு வருகிறேன்" என்று அப்பா முன்னே போனார்.

ஆர்வமாய்த் துள்ளித் தாவிய குழந்தைகளைக் கட்டுப்படுத்தித் தனது இரு கைகளிலும் அவர்களைப் பிடித்துக் கொண்டு நீரில் நின்றாள் அம்மா.

நேரம் செல்லச் செல்ல நீரில் நிற்க வரும் சிறுவர் பெரியவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

கால்களை மணலில் புதைத்து, அலைகளின் வருடலால் மண் கரைந்து, கால்கள் வெளிப்படும் போதும் மகிழ்ச்சியாய் இருந்தது சுதாவிற்கு.

தனது காலணிகளைக் கடலில் வீசி, அலைகள் மீண்டும் அவற்றைக் கரைக்குக் கொண்டு வந்து தரும் விளையாட்டு மிகவும் சுகமாயிருந்தது பாஸ்கருக்கு. அந்த நேரத்தில் ஆளுயர அலை ஒன்று பொங்கி வந்தது. அதைப் பார்த்து நீரில் நின்றிருந்தவர்கள் பின்

னோக்கி இரண்டடி எடுத்து வைத்த னர்.


'நமக்குப் பயந்து மனிதர்கள் பின் வாங்குகிறார்கள்' என்று நினைத்த அந்த அலை மீண்டும் கடலுக்குள் ளேயே ஐக்கியமான போது, பாஸ் கரைக் காணோம்!

"ஐயோ பாஸ்கர்!" அரண்டு போன அம்மா குலைநடுங்கக் கத்தினாள். கரையில் இருந்தவர்கள் தங்கள் குழந் தைகளை இறுக்கமாய்ப் பிடித்துக் கொண்டனர்.

"ஐயோ எம்புள்ளய யாராவது காப் பாத்துங்களேன்...!" என்ற அம்மாவின் அலறல் கேட்டு மின்னலாக வந்தார் கள் அந்தக் கோவணச் சிறுவர்கள்.

தலைகீழாய்த் தொங்கவிட்டு இரண்டு சுற்று வேகமாகச் சுற்றினார். பாஸ் கரின் மூக்காலும் வாயாலும் நீர் வெளி யேறியது. மீண்டும் தரையில் கிடத்தி னர். சற்று நேரம் கழித்து பாஸ்கரின் உடல் லேசாக அசைய, மெதுவாக சுய நினைவு வந்தது.

கண் விழித்துப் பார்த்த போது, எதிரே கரிய நிறத்தில், கோவணம் கட் டிய அதே இரண்டு சிறுவர்கள். தலை யிலிருந்து நீர் சொட்டச் சொட்ட அவ னையே ஆவலுடன் கண் இமைக்கா



வந்த அதே வேகத்தில் கடலில் பாய்ந் தனர். கடுமையான முயற்சிக்குப் பின் பாஸ்கரின் கால்களைப் பிடித்து இழுத் துக் கொண்டு இருவரும் சொட்டச் சொட்ட வந்தனர்.

ஓடோடி வந்தார் அப்பா. நனைந்த மரக்கட்டை போல் அசைவற்றுக் கிடந்தான் பாஸ்கர்!

நிலைமையைச் சட்டென்று புரிந்து கொண்ட இரு சிறுவர்களும் பாஸ் கரின் கால்களைப் பிடித்துத் தூக்கித்

மல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"இவர்கள் மட்டும் உதவாது போயி ருந்தால்... உன் கதி அதோகதியாகி யிருக்கும். முதலில் இவர்களுக்கு நன்றி சொல்லு" என்றாள் அம்மா.

நன்றிப்பெருக்குடன் கைகளை நீட்டி, கோவணச் சிறுவர்களுடன் கை குலுக்கினான் பாஸ்கர். இப்பொழுது அருவருப்பே இல்லை அவன் மனத் தில்! அதோடு, அந்த குடிசைகள், காக் கும் ஆலய கோபுரங்களாகத் தோன் றின!

அவசரக் குடுக்கை!

ஈற்று வாக்கியக் கதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை

நல்ல பிள்ளையாய் அமர்ந்து படித்துக் கொண்டிருந்த பூமா கையில் ஒரு பார்சலோடு அப்பா நுழைவதைப் பார்த்ததவுடன் ஆவலுடன் ஓடிப்போய் வாங்கிக் கொண்டாள்.

"என்னதுப்பா இது....?"

"இது வந்து பொம்மை ஹெலிகாப்டர் பண்ணும் 'கிட்'. அதுக்குள்ளயே செய்முறை இருக்கு. இரும்மா. குளிச்சிட்டு வந்துடுறேன். அப்புறமா நீயும் நானும் ரெண்டு பேருமா சேர்ந்து இதை வச்சு ஹெலிகாப்டர் செய்யலாம். உனக்காகத் தானே இது?"

பூமாவுக்குத் தலைகொள்ளாத மகிழ்ச்சி. எப்போதும் பரபரவென்று ஏதேனும் செய்து கொண்டேயிருக்கும் "துறு துறு" பூமாவுக்கு அப்பா வாங்கி வந்திருப்பது ஒரு "ஹெலிகாப்டர் கிட்" என்று தெரிந்த பிறகு அமைதியாகப் படிக்க முடியவில்லை. அவள் கொஞ்ச அவசரக் குடுக்கையும் கூட.

மெல்ல எழுந்து கிட் பாக்ஸ் வைத்திருந்த மேசையின் அருகே சென்று பார்த்தாள். அப்பாவும், அம்மாவும் ஹாலில் இல்லை என்பதை நிச்சயப் படுத்திக் கொண்ட பின், கிட் மீது சுற்றி இருந்த வண்ணத் தாளை சத்தம் செய்யாமல் மெதுவாகப் பிரித்தாள்.

உள்ளே அழகுப் பெட்டியில் சின்னச் சின்னதாய் பெயர் தெரியாத ஏதேதோ சாமான்கள். ஹெலி காப்டர் செய்ய வழி காட்டும் சிறிய புத்தகமும் ஒன்று. எட்டாம் வகுப்பு படிக்கிற பூமாவுக்குப் புரிந்து கொள்வது பெரிய சிரமமாக இருக்கவில்லை.

புத்தகத்தைப் படிக்கும் போதே சாமான்களை எப்படி எப்படி இணைப்பது என்பது பூமாவுக்குத் தெளிவாகப் புரிந்தது. அப்பா குளித்து விட்டு வருவதற்குள் இவையெல்லாவற்றையும் இணைத்து நாமாகவே இந்த ஹெலிகாப்டரைச் செய்து பார்த்தால் என்ன.. என்று அவள் அவசரக் குடுக்கை புத்தி பரபரத்தது. பூமாவின் கரங்கள் ஒவ்வொரு சாமானாக எடுத்து ஹெலிகாப்டரின் பாகங்களை இணைக்க ஆரம்பித்தன.

ஆயிற்று.. மேலே சுழலும் காற்றாடி மட்டும் தான் பாக்கி. என்ன இந்த அப்பாவை இன்னமும் காணோம்? காற்றாடியைச் சொருகி சாவியையும் கொடுத்தால் ஹெலிகாப்டர் பறக்காதா என்ன? அப்பா வந்து பார்த்து அசர வேண்டும். அவர் வரும் முன் அதையும் கூடக் கொடுத்து விடுவோமே?

அவசரக் குடுக்கை பூமா, சாவி கொடுத்தாள் மெல்ல ஹெலிகாப்டர் மேலேழுந்தது. அவள் தலைக்கு மேலே. மேலே சத்தம் போட்டுப் பறந்தது!

ஆகா! எத்தனை மகிழ்ச்சியான பெருமை!

"பூமா....."

' என்னப்பா! இப்போதான் குளிச்சி முடிச்சீங்களா? பாருங்க மேலே ஹெலி காப்டர் பறக்குது."

"நீயே பண்ணிட்டியா? சாவி..! சாவி எங்கே?" என்று அப்பா கேட்டார். பரபரத்தார். அப்பாவின் குரலில் படபடப்பும் வேகமும் இருந்தன.

"சாவி ஹெலிகாப்டரிலேயே இருக்குதுப்பா. இறங்கியவுடனே கழட்டிக்கலாம்."

"அட.... அவசரக்கார மக்குப் பொண்ணே! சாவியைக் கழட்டலேன்னா, அது இறங்காமல் எங்காவது...

அப்பா சொல்லி முடிக்கவில்லை பரபரவென காற்றாடி சுழலப் பறந்து கொண்டிருந்த ஹெலிகாப்டர் வீட்டெதிரில் இருக்க வேப்ப மரத்தில்... டமார்!"


மோதியே விட்டது!"

"என்னம்மா! நான் தான் வரன்னு சொன்னேனே? என்ன அவசரக் குடுக்கைத் தனம்?" என்று கடிந்தார் அப்பா.

செய்வதறியாது திகைத்து நின்றாள். பூமா.

— க. கண்ணகி, மிட்டூர்.







வாழ்த்து அட்டை

ஈற்று வாக்கியக் கதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை

தன்னைச் சுற்றி அமர்ந்திருந்த மாணவிகளிடம் **3-D** வாழ்த்து அட்டையைக் காண்பித்து, "இதையே தொடர்ந்து கண் கொட்டாமல் உற்று நோக்கினால் இதில் உள்ள உருவம் அசைந்து வருவது போலிருக்கும்" என்றாள் சுசீலா.

"இரண்டுமே ரொம்ப அழகாயிருக்கு சுசீ! ஆமாம், இந்த இரண்டையும் யாருக்கு அனுப்பப் போறே?" என்று ஆவல் பொங்கக் கேட்டாள் மாதவி.

"இந்த வாழ்த்து அட்டைகள் விலை உயர்ந்தவை. என் மனதில் உயர்ந்த இடத்தில் உள்ள இருவருக்குப் புத்தாண்டு வாழ்த்தாக இவைகளை அனுப்பப் போகிறேன். இதுக்குன்னு மூன்று மாதமாக கைப் பணத்தைச் சேர்த்து இவைகளை வாங்கியிருக்கேன். தெரியுமா? என்று பெருமை பொங்கக் கூறினாள் சுசீலா.

பூமாவிற்கு எரிச்சலாயிருந்தது. வகுப்புத் தலைவி என்கிற உரிமையில் "ம்... ம் எல்லோரும் அவங்க அவங்க இடத்திற்குப் போங்க" என்று விரட்டினாள்.

இவ்வளவுக்கும் பூமாவும் சுசீலாவும் இணை பிரியாத சிநேகிதிகள். ஊர் மாற்றலாகி தாமதமாக பள்ளியில் சேர்ந்த சுசீலாவிற்கு எல்லாப் பாடங்களையும் கற்றுக் கொடுத்தவள் பூமாதான். இருந்தாலும், சுசீலா புதிது புதிதாக எதையாவதுக் காட்டி மாணவிகளைத் தன் பக்கம் கவர்ந்து கொண்டது, பூமாவிற்கு எரிச்சலை வரவழைத்தது. பூமாவின் கோபத்திற்குக் காரணம் இதுமட்டுமல்ல. அவள் காட்டிய **3-D** வாழ்த்து அட்டையின் அழகும், வண்ணமும், தன்னிடம் அதுபோல் இல்லையே என்ற ஏக்கமும் ஆற்றாமையுமே ஆகும்.

வகுப்பு தொடங்கி 'அறிவியல் பாடப் புத்தகத்தில் ஐம்பதாம் பக்கம் எடுங்கள்' என்று ஆசிரியை கூறியதும் மாணவிகள் அவசர அவசரமாகப் புத்தகத்தைப் பிரித்தனர். சுசீலாவின் புத்தகத்திலிருந்து ஏதோ ஒன்று நழுவிக் கீழே விழுந்தது. மின்னல் வேகத்தில் அதை எடுத்து மறைத்துக் கொண்டாள் பூமா. சுசீலா கவனிக்கவில்லை.


இரண்டு நாட்கள் ஓடின. கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு பண்டிகை விடுமுறை தொடங்குமுன், அன்று பள்ளி இறுதி நாள். மாணவிகள் அனைவரும் மகிழ்ச்சியாயிருந்தனர். ஆனால் சுசீலா மட்டும் வாட்டமாயிருந்தாள். ஏன் சுசீலா ஒரு மாதிரியிருக்கிறாய்?" என்று வினவினாள் பூமா.

"அன்று இரண்டு வாழ்த்து அட்டைகளைக் காண்பித்தேனே? நீ கூட நல்லாயிருக்கு என்று கூறினாயே? அதில் ஒன்றை இரண்டு நாளாகக் காணவில்லை. தேடாத இடமேயில்லை. அதில் ஒன்றை வருஷத்திற்கு ஒருமுறை மட்டுமே வந்து போகும் என் அன்புத் தந்தைக்கும் என் ஆருயிர்த் தோழியான உனக்கும் அனுப்ப இருந்தேன். ஒன்றைக் காணவில்லை. அதனால் நட்புக்கு இலக்கணமான உனக்கு மட்டுமே அந்த மீதி ஒரு வாழ்த்தை அனுப்பியிருக்கிறேன். இந்த வருடம் அப்பாவிற்கு வாழ்த்து அனுப்ப முடியாமல் போனதால் மனதிற்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது" என்று கலங்கினாள் சுசீலா.

'சுசீலாவால் நழுவவிட்டு, தன்னால் எடுத்துக் கொள்ளப்பட்ட அந்த வாழ்த்து அட்டை, தனக்கு அனுப்பப்பட இருந்ததா! தந்தைக்குக் கூட அனுப்பாமல் தனக்கு அனுப்பியுள்ள இவளுடைய அன்புக்கு ஏற்ற தோழியாக இருக்கத் தனக்கு தகுதி இருக்கிறதா?' - பூமா திகைத்துப் போய் நின்றாள்.

— மூ. சுகந்தி

பண்ணனைப் பார்த்து...



ஆசிரியர் ஆறாம் வகுப்பு 'ஆ' பிரிவில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். திடீரென்று 'படபட'வென்று தூறல் போட ஆரம்பித்தது. கூடவே 'உஸ்' என்ற காற்றின் சப்தம் கேட்டது. மணி இரண்டரை.

"மழை காரணமாக, நேற்றும் நேற்று முன் தினமும் பள்ளி விடுமுறை. இன்றைக்கும் மழை வரும் போலிருக்கிறதே!" என்று முணுமுணுத்தவாறு கூறினார் ஆசிரியர்.

"இது ஐப்பசி மாதம் சார்! ஐப்பசியில் அடை மழை!" என்றான் வேலாயுதம்.

"ஐப்பசியில் அடைமழை, ஆடிப் பட்டம் தேடி விதை, தை பிறந்தால் வழி பிறக்கும் என்றெல்லாம் மாதங்களை ஒட்டிய பழமொழிகள் பல இருக்கின்றன" என்றார் ஆசிரியர்.

"ஆமாம் ஐயா! தையில் தரையும் குளிரும். மாசியில் மனமும் குளிரும் என்று என் அம்மா கூட அடிக்கடி சொல்வார்கள்" என்றான் பண்ணன்.

பண்ணன் அப்படிச் சொன்னதும் எல்லோரும் சிரித்தார்கள். அவன் பேச ஆரம்பித்தாலே மற்றவர்கள் சிரிப்பது வாடிக்கையாகி விட்டது. அது ஆசிரியருக்கும் தெரியும். அவரால் சிரிக்க முடியவில்லை. ஆத்திரம் ஆத்திரமாக வந்தது அவருக்கு. ஓங்கித் தட்டினார் மேசையை. சிரித்த மாணவர்கள் வாயைப் பொத்திக் கொண்டனர்.

ஆசிரியர் கோபமாக எழுந்து பண்ணன் அருகே வந்தார். மாணவர்கள் ஒருவித பயத்துடன், ஆசிரியரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பண்ணனின் கன்னத்தில் 'பளார் பளார்' என்று அறையப் போகிறார் என்று கூட மாணவர் சிலர் எதிர்பார்த்தனர். அவர்களுக்கே அறை விழுவதைப் போல் சிலருக்கு மனம் 'திக்திக்' கென்று அடித்துக் கொண்டது.

பண்ணன் மட்டும் ஆடாமல் அசையாமல், ஆசிரியர் முகத்தைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தான்.

"பண்ணன் நீங்கள் சிரிக்கும்படி என்ன அப்படித் தவறாகப் பேசுகிறான்? அவன் பேச்சைக் கேட்டதும், நீங்கள் ஏதோ பெரிய நகைச்சுவைத் துணுக்கைக் கேட்டுச் சிரிப்பதைப் போல் அப்படிச் சிரிக்கிறீர்களே?" என்று உரத்த குரலில் கேட்டார் ஆசிரியர்.

"சார்! அவன் அழுத்தந்திருத்தமா, எப்பவும் இலக்

கண சுத்தமா பேசறான் சார்?" என்றான் தருமன்.

"அதான் சார் சிரிக்கிறோம்!" என்றான் மற்றவன். அப்போதும் சிலர் சிரித்தார்கள்.

"இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது? அவன் பேசு வதைப் போலத் தாய்மொழியைத் தவறில்லாமல் பேச முடியாது திணறும் உங்களைப் பார்த்து பண்ணனும் நானும் அல்லவா சிரிக்க வேண்டும்? பிழையில்லாமல் எழுதுவதைப் போல பிழை இல்லாமல் பேசுவதும் பெரு மைக்குரிய செயலா, அல்லது கேலிக்குரிய செயலா? சொல்லுங்கள்!"

அதட்டினார் ஆசிரியர். மௌனமாக இருந்தனர் அனைவரும். ஆசிரியரே மேலும் பேசினார்.

"பண்ணன் வகுப்பில் மட்டுமல்லாமல் வெளியிலும் வீட்டிலும் கூட அப்படித்தான் திருத்தமாகப் பேசு கிறான்" என்று பண்ணனின் முதுகைத் தட்டிக் கொடுத்தார் ஆசிரியர்.

"என் அப்பா எப்போதும் இலக்கண சுத்த மாகவே பேசுவார் ஐயா!" என்றான் பண்ணன்.

"உன் அப்பா புலவரா? தமிழ் ஆசிரியரா?" என்று கேட்டான் நவமணி.

"புலவராகவோ தமிழ் ஆசிரியராகவோ இருந்தால் தான் திருத்தமாகப் பேச வேண்டுமா என்ன? எல்லோ ருமே பேசலாமே? ஏன்? பண்ணன் என்ன, புலவரா, தமிழாசிரியரா? இவனால் இத்தனை திருத்தமாகப் பேச முடிகிற போது, உங்களால் மட்டும் இது முடியாதா? இதற்கெல்லாம் மனம் வேண்டும்; உறுதி வேண்டும்; ஆர் வம் வேண்டும். முயன்றால் முடியாததில்லை. அது சரி. நான் கூட வகுப்புக்கு வெளியில் கொச்சையாகத்தான் பேசுகிறேன், உங்களைப் போல! வகுப்பில்தான் பிழை இல்லாமல் திருத்தமாகப் பேசுகிறேன். ஆமாம்... நான் இப்படிப் பேசுவது மட்டும் உங்களுக்குச் சிரிப்பை உண்டாக்கவில்லையே! அது ஏன்?"

ஆசிரியர் கேள்விக்கு யாரும் பதில் சொல்ல வில்லை.

"இது வெட்கப்பட வேண்டிய விஷயம். பேச்சு என்பது கருத்தைத் தெரிவிப்பதற்காகத்தான். அந் தப் பேச்சைக் கொச்சையாகப் பேசுவதை விட, பாடப் புத்தகத்தில் உள்ளதைப் போல நல்ல தமிழில் பேசுவது எந்த வகையில் தவறாகும்? இல்லை.. ஏழைப் பையன் பண்ணன் இனிய தமி ழில் பேசக் கூடாது என்று சிரிக்கிறீர்களா?"

"சார்! பண்ணன் பாவம் சார்! மத்தியானம் பள் ளியிலே கொடுத்த சத்துணவைத் தட்டோடு தூக்கிக் கொண்டு ஓடிப் போய்த் திரும்பி வந்தான் சார்!" என்றான் அமீர்.

பண்ணன் ஏதும் சொல்லவில்லை. என்றாலும் அவன் கண்கள் கலங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார் ஆசிரியர்.

"சார்! பண்ணன் வீடும் எங்க வீடும், ஏரிக்கரைக்குக் கீழே குடிசைப் பகுதியிலே..."

அமீர் சொல்லி முடிக்கு முன், "சார்! பலத்த மழையி னாலே ஏரி நிரம்பி, கரை



பூவை அமுதன்

உடைஞ்சி, குடிசை எல்லாம் அடிச்சிக்கிட்டுப் போயிடுத்து சார்! பாவம்... பண்ணன் குடிசையும் போயிட்டது சார்!" என்றான் நவமணி.

"அவன் அப்பா போன மாசம்தான் செத்துப் போனார்! அம்மாவும் குழந்தையும், பண்ணனும் மத்தவங்களோடு எப்படியோ தப்பிச்சிக்கிட்டாங்க! எல்லாரும் இப்போ... பெருமாள் கோயில் மண்டபத்திலே இருக்காங்க. எங்கப்பா அம்மா, தாத்தா பாட்டி கூட அங்கேதான் சார் இருக்கோம். எல்லாம் போச்சு சார், ஆக்கிச் சாப்பிட ஏதுமே இல்லை. பட்டினியா, குளிரிலே அவதிப்பட்டுக்கிட்டிருக்கோம் சார்!"

ஏகதாசன் சொன்னதைக் கேட்க வேதனையாக இருந்தது ஆசிரியருக்கு. சிறிது நேரம் பொறுத்துப் பண்ணனைக் கேட்டார், "ஏன் தம்பீ! சத்துணவைத் தம்பிப் பாப்பாவுக்காகத்தான் எடுத்துக் கொண்டு ஓடினாயா? நீ உண்ணவில்லையா? வேறு யாரும் வந்து உதவி செய்யவில்லையா உங்களுக்கெல்லாம்?"

அப்போதும் பண்ணன் பதில் சொல்லவில்லை. நவமணிதான் சொன்னான், "சார்! இந்த ஏகதாஸ் கூடத் தன் உணவிலே பாதியைப் பண்ணனுக்குக் கொடுத்துத் தின்னச் சொன்னான். அதைக் கூடப் பண்ணன் சாப்பிடலே சார்! பசியோடதான் சார் இருக்கான்!"

"அது சரி! தான் பசியோடு இருக்கிற போதும் பண்ணனுக்குச் சகோதர பாசம் போகவில்லை. அந்தத் தம்பிப் பாப்பா உண்பதற்கு ஏதும் இல்லாமல் அழுது கொண்டிருக்குமே என்று ஓடியிருக்கிறான். இப்படி தாய்ப் பாசம், சகோதர பாசம், இருந்தால்தான் மற்றவர்கள் மீதும் உண்மையான பாசமும் அக்கறையும் கொள்ள முடியும். தன்னைச் சார்ந்தவர்களிடமே பாசம் இல்லாதவனுக்குத் தன் ஊரில் உள்ளவர்கள் மீதும் நாட்டில் உள்ளவர்கள் மீதும் எப்படிப் பற்றும் பாசமும் ஏற்படும்?"

"அது மட்டுமில்லை சார்! மந்தியானம் வகுப்புக்கு லேட்டாகக் கூடாதுன்னு மண்டபத்திலிருந்து ஒரே ஓட்டமா ஓடி வந்திருக்கான் சார்!" என்றான் அமீர்.


"எந்த நிலையிலும் பாடம் கெடக் கூடாது என்கிற ஆர்வம் இருக்கிறது பண்ணனுக்கு. இத்தனை பசியோடு இருக்கிறபோதும், தாய்மொழியைத் தான் பேசுகிற போது தவறு ஏற்படக் கூடாது என்கிற அக்கறை இருக்கிறதே! இதை எவ்வளவு பாராட்டினாலும் தகும்! இவனைப் பார்த்து நீங்கள் சிரிக்கிறீர்களே! உங்களைப் பார்த்து எனக்கு அழத்தான் தோன்றுகிறது!" என்று வேதனைப்பட்டார் ஆசிரியர்.

"ஐயா! நாங்களும் இனிமேல் பண்ணனைப் பின்பற்றுகிறோம்!" என்றான் நவமணி. அவனோடு மற்றவர்களும் சேர்ந்து கொண்டனர்.

"பண்ணன்! பள்ளி முடிந்ததும் ஊர்ப் பெரியவர்களைப் பார்த்து, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, என்னவெல்லாம் எப்படியெல்லாம் உதவி செய்ய முடியுமோ, அதற்கு முயற்சிக்கிறேன். கண் எதிரே சிலர் துன்பப்படுவதைப் பார்த்துக் கொண்டு சும்மாயிருந்தால், அப்புறம் நமக்குக் கண் இருந்துதான் என்ன பயன்?" என்று நா தழுதழுக்கப் பேசி விட்டு எழுந்தார் ஆசிரியர்.

"ஐயா! நாங்களும் எங்களால் முடிந்த உதவிகளைச் செய்கிறோம்!" என்று ஒரே குரலில் கூவினார்கள் மாணவர்கள்.

ஆசிரியர் பெருமையுடன் அவர்களை நோக்கினார்.



"எதுக்கு உன் குட்டியைத் தூக்கிட்டு போறே?"

"போஸ்யோ சொட்டு மருந்து கொடுக்கற,பக்குத்தான்."

— பா. ஜெயக்குமார்



சிங்கராஜா போட்ட சத்தியம்!

சிங்கராஜாவின் அரச சபை கூடியிருந்தது. வழக்கத்திற்கு அதிகமாக, என்றுமே இல்லாதபடி, விலங்குகளும் பறவைகளும் குழுமியிருந்தன.

"இத்தனை பேர் வந்திருக்கிறீர்களே! ஏதாவது பெரிய பிரச்னையா?" என்று கம்பீரமாகக் கேட்டார் சிங்கராஜா.

"ஆமாம் மகாராஜா. எல்லாப் நமக்கு உயிர்ப் பிரச்னையான குடிநீர் கிடைக்காமைதான். கிழக்குப் பக்க ஏரி அடியோடு வறண்டு விட்டது."

"மேற்குப் பக்க அருவியில் நீர் வருவது நின்றே போய்விட்டது. அருவிக்கு மேலே அணைகட்டி, ஆற்றின் போக்கையே மாற்றிக் கொண்டு தங்களுக்கு சாதகமாகப் பண்ணி, கிழே பெரிய அணையைக்கட்டிக் கொண்டு விட்டார்கள் மனிதர்கள். அணைகட்ட திட்டம் போட்டுக் கொண்டு, நதியின் போக்கையை மாற்ற அவர்கள் முயன்றபோதே, நாமெல்லாம் மொத்தமாகப்போய் அந்த ஏற்பாடுகளை அழிப்போம் என்று கெஞ்சினேன். நீங்கள் அனுமதிக்கவில்லை. அதன் விளைவுதான் இத்தனையும்" என்றார் அமைச்சர் நரியார்.


"நமக்குத்தான் கிழக்குப் பக்க ஏரி இருக்கிறதே என்று தான் நான் தடுத்தேன். ஆனால் ஒன்று, அன்றைக்கு நாம் தடுத்திருந்தால்கூட மனிதர்கள் தங்கள் முயற்சிகளைக் கைவிட்டிருப்பார்கள் என்று சொல்ல முடியாது. சுயநலம், வஞ்சகத்தனம் எல்லாம் நிறைந்தவர்கள் அவர்கள். அறிவுத் திறமை இருப்பதால், நினைத்ததை முடித்துக் கொள்வார்கள். நான் தடுத்ததற்குக் காரணமே வேறு."

அமைச்சர் நரியார் சிங்கராஜாவின் முகத்தை ஆவலுடன் நோக்கினார்.

"நம்முடைய காட்டு விலங்குகள் பறவைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. மனிதர்களின் திட்டத்தை நாம் தகர்த்தால், அவர்கள் துப்பாக்கி பீரங்கிகளோடு வந்து இன்னும் மிச்சம் மீதி இருக்கும் நம் இனத்தவர்களையும் அழித்துக் குருமா பண்ணி சாப்பிட்டு விடுவார்கள். அதற்காகத்தான் தடுத்தேன்" என்று விளக்கிய சிங்கராஜா, "சரி, இப்போ என்ன பண்ணலாம்? குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க ஏதாவது வழி கூறுங்கள்?" என்றார்.

"நம்முடைய நீர்வளங்களை எல்லாம் தங்களுக்கு சாதகமாகத் திருப்பிக் கொண்டு மனிதர்கள் பெரிய அணையைக் கட்டியிருக்கிறார்களே? நாமெல்லாம் ஒன்றாகத் திரண்டு போய் அதை உடைத்து விட்டு வரலாம். கிழக்குப் பக்க ஏரியும் நிரம்பி விடும். மேற்குப் பக்க அருவியிலும் தண்ணீர் வந்து விடும்" என்றார் நரியார்.

"அமைச்சர் அவர்களே, உங்கள் திட்



டம் [illegible] புறப்பட்டாலும் பலன் இருக்காது. நம்மை வஞ்சித்து அவர்கள் கட்டியுள்ள அணையில் பொட்டுத் தண்ணீர்க் கூட இல்லை. அவைகளில் சிக்கியிருக்கும் மீன்கள் தவிக்கின்றன. நாங்கள் பறக்கும் போது தினமும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்" என்றார் கழுகார்.

"அவர்களுக்குத் தண்ணீர் இல்லாமல் முடியாதே! அப்போ, அவர்கள் என்ன பண்ணுகிறார்கள்?"


"பூமியில் ஆழமாக, ஆழ்துளைக் கிணறுகள் போட்டுக் கொண்டு, பூமிக்கு அடியில் இருக்கும் நீரை மேலே பம்ப் செட்டுகளில் இறைத்துக் கொள்கிறார்கள். இவைகளைப் போடத் தேவைப்படும் நீண்ட குழாய்கள், மின்சாரப் பம்புகள், கையால் அடிக்கும் பம்புகள் போன்ற எல்லாவற்றையும் நம்ம காட்டுப்பாதை வழியாகத்தான் கொண்டு போகிறார்கள்" என்றார் கழுகார்.

"அப்போ, அடுத்தமுறை அவர்கள் காட்டுப்பாதையில் போகும்போது, யானைக் கூட்டத்தை வைத்து அவர்களை மடக்கி, இங்கே கொண்டு வாருங்கள். அவர்களை வைத்தே நமக்கும் இரண்டு மூன்று ஆழ்துளைக் கிணறு போட்டுத் தரச் சொல்லலாம்" என்றார் சிங்கராஜா.

அன்று மாலையே காட்டுப் பாதையில் ஆழ்துளைக் கிணறு போடக் கூடிய தளவாடங்களைக் கொண்டு சென்ற ஒரு வேனை யானைகள் வழிமறித்தன. டிரைவர் ஓடியே போய்விட்டார். பிளம்பர் பூபதியும் அவருடைய மகன் சிறுவன் பாபுவும் அகப்பட்டுக் கொண்டனர். வேனோடு அவர்களை உந்தித் தள்ளிக் கொண்டு சிங்கராஜாவிடம் சேர்த்தன யானைகள். இருவரும் நடுநடுங்கினர்.

"பயப்படாதீர்கள். உங்களுக்கு நாங்கள் எந்தவிதமான சிறுதீங்கும் கூடச் செய்ய மாட்டோம். இது சத்தியம்" என்றார் சிங்கராஜா.

சிங்கராஜா இதைச் சொன்ன பிறகுதான் அப்பாவுக்கும் மகனுக்கும் உயிர் திரும்பியது. நடுக்கம் நின்றது.



"நீங்கள் பூமியில் ஆழ்துளைக் கிணறு போடுகிறவர்கள்தானே?" என்று கேட்டார் சிங்கராஜா.

"ஆமாம் சிங்கராஜா. இப்பொழுது வேனில் இருப்பவை எல்லாம்கூட ஆழ்துளைக் கிணறு போடத் தேவையானவை தான். மலைமேல் அலுவலர்கள் குடியிருக்கும் காலனியில் பயங்கரமான தண்ணீர் பஞ்சம். அவர்களுக்குக் குடிதண்ணீர் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான், நான்கு ஆழ் துளைக் கிணறுகளைப் போடப் போய்க் கொண்டிருக்கிறோம்" என்றார் பிளம்பர் பூபதி.

"நீங்கள் எனக்கு ஓர் உதவி பண்ண வேண்டும். காட்டு விலங்குகளான நாங்களும் குடி தண்ணீர்கூட இல்லாது துன்பப் படுகிறோம். எங்களுக்கும் இங்கே இரண்டு ஆழ்துளைக் கிணறுகளைப் போட்டுத் தர வேண்டும். இதற்கு ஆகும் செலவைத் தந்து விடுகிறேன்," என்றார் சிங்கராஜா.

"கண்டிப்பாகச் செய்து தருகிறேன் மகாராஜா" என்றார் பூபதி. உடனே பணியில் இறங்கினார். தந்தைக்கு உதவியாக பாபுவும் வேலை செய்தான்.

ஒருவாரம் ஓடியது. பூபதிக்கும் பாபுவுக்கும் தேவைப்பட்ட எல்லா உதவிகளையும் காட்டு விலங்குகள் செய்தன. அதோடு அவர்களுக்குத் தேவையான உணவையும் கொண்டு வந்து கொடுத்தன. பணி முடிந்தது.

"மகாராஜா, இங்கே நான்கு கிணறுகளை அமைத்திருக்கிறேன். இவைகள் இயங்க மின்சார இணைப்புத் தர வேண்டுமே. அதற்கான ஏற்பாடுகளை நாங்கள் கீழே போய்த்தான் பண்ணமுடியும்" என்றார் பூபதி.

சிங்கராஜாவும் மற்ற விலங்கு பறவைகளும் பிரியாவிடை கொடுக்க, பூபதி பாபுவை அழைத்துக் கொண்டு கிளம்பினார்.


"அப்பா எந்த கேம்பில் இருந்து மின்சாரம் எடுத்து இவைகளுக்கு இணைப்புக் கொடுக்கப் போகிறீர்கள்" என்று கேட்டான் பாபு.

"இணைப்பெல்லாம் ஏற்கனவே கொடுத்தாகிவிட்டது. நான்கு கிணறுகளுக்கும் தனித் தனியாக ஆட்டோ மோட்டார் போட்டிருக்கிறேன். ஆறுமணி நேரம் இயங்கிவிட்டு, இரண்டு மணி நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு மறுபடி ஆறு மணி நேரம் இயங்கி- இப்படியே நாள் முழுக்க இவை இயங்கும்."

"விலங்குகள் வாழக் காரணமாக இருக்கும் மரங்களையும், காட்டுப் பகுதிகளையும் அழித்து, அவை வாழ இடமில்லாது திண்டாடும்படி பெருந்தீங்கு புரிகிறோம். காட்டுப் பகுதிகளில் அருவிகளையும் ஆறுகளையும் திருப்பி, நமக்கு வசதியாக அணைகளையும் நீர்த்தேக்கங்களையும் கட்டி அவைகளுக்குக் குடிநீர் கூடக் கிடைக்காதபடி பாவம் பண்ணுகிறோம். இதற்கெல்லாம் பரிகாரம் பண்ணுவது போல் இப்போ நீங்கள் அமைத்துக் தந்திருக்கும் ஆழ்துளைக் கிணறுகள் அவைகளின் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்து அவைகளை வாழ வைக்கும்" என்றான் பாபு.

பூபதி சிரித்தார்.

"பாபு, அலுவலர்கள் கேம்ப்பிலும் மற்ற இடங்களிலும் ஆழ்துளைக் கிணறுகள் போட்டால் இருபது அடியிலேயே மணல்



''ராமு, இதுல இந்தியா எங்க இருக்குனு காட்டு.''

''உயிரே போனாலும் என் தாய் நாட்டைக் காட்டிக் கொடுக்க மாட்டேன் சார்.''

— கே. சுதர்ஷன்

வந்து விடுகிறது. இல்லை, அறுபது அடி துளைத்தால்கூட நீர் கிடைப் பதில்லை. ஆனால், இங்கே முப்பது அடி ஆழத்திலேயே பயங்கரமான விசையுடன் தண்ணீர் கிடைக்கிறது. என்றைக்குமே நீருக்குப் பஞ்சம் இல்லை. இத்தனை நீர்வசதி கொண்ட இடம் கிடைப்பது அரிது''– என்று நிறுத்தினார் பூபதி.

''அப்பா, நீங்கள் சொல்வதைப் பார்த்தால்...?''

''நாம் அமைத்திருக்கும் நான்கு ஆட்டோ பம்ப் செட்டுகளும் சிங்கராஜாவின் காட்டுக்குடி மக்களின் தேவைக்குப் பயன் படாது. நம்முடைய கேம்பில் இருக்கும் அலுவலர்களுக்குதான் பயன்படும். பம்ப் செட்டுகளின் நீர், கனமான பெரிய குழாய்கள் வழியாக அருவிபோல் நீரை கேம்பில் கொண்டு வந்து கொட்டும்.''

''அப்பா, இது துரோகமில்லையா? ஏற்கனவே மனித குலம் செய்துள்ள கொடுமைகளால் காட்டு விலங்குகள் தங்கள் வாழும் இடத்தை இழந்து, எண்ணிக்கையில் குறைந்து அழியும் நிலையில் இருக்கின்றன. ஏதோ இந்த வரை அவை உயிர் வாழத் தேவையான குடிநீர் வசதியையாவது நம்மால் செய்து தர முடிந்துள்ளதே என்பதை நினைத்து மகிழ்ச்சியும் பெருமையும் அடைந்தேன். ஆனால் நீங்கள், 'நானும் சுய நலம் மிக்க மனிதன் தான்' என்பதைக் காட்டி விட்டீர்கள்,'' என்றான் பாபு.

அவன் செய்த வாதம் எதனாலும் பிளம்பர் பூபதியின் முடிவை மாற்ற முடிய வில்லை.

அந்தக் காட்டுப் பாதையில் வந்தால் காட்டு விலங்குகள் கையில் சிக்கி, தனக்கு முடிவு நிச்சயம் என்பதை நன்கு புரிந்து கொண்ட பூபதி அந்தப் பக்கம் பயணம் செய்வதையே தவிர்த்து வந்தார்.

நாட்கள் ஓடின. நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒரு தவிர்க்க முடியாத வேலை. அப்பொழுதும்கூட அந்தக் காட்டு வழியில் வராமல் பூபதி வேனில் வேறு வழியில் கேம்ப்புக்குக் கிளம்பினார். பாதி வழியில் வேன் ஒரு பள்ளத்தில் இறங்கி, பூபதி பாதாளத்தில் தூக்கி எறியப்பட்டார். அவர் விழுந்த இடம் சிங்கராஜாவின் எல்லைக்கு உட்பட்ட பகுதி!

காயம்பட்ட நிலையில் கிடந்த பூபதியை யானையார் கவனித்து விட்டார். அப்படியே துதிக்கையால் அலக்காகச் சுழற்றிக் கொண்டு வந்து சிங்கராஜாவின் அவையில் கிடத்தினார்.

பூபதி நடுநடுங்கினார். ''தண்ணீர் தண்ணீர் என்று தாகத்தால் தவித்தார்.

''மகாராஜா, நமக்குக் குடிநீர் தரப் போவதாகக் கூறி ஏமாற்றிவிட்ட நம்பிக்கைத் துரோகி பிளம்பர் பூபதி இவர்தான். எனக்கு வந்த ஆத்திரத்தில் இவரைப் பார்த்ததும், நாமே இவரைக் காலில் போட்டு மிதித்து விடலாமா என்று எண்ணினேன். இருந்தாலும் நீங்கள் விசாரணை நடத்தி உங்கள் கையால் அந்தத் தண்டனையை வழங்குவதுதான்

''முதலாம் பானிபட்டுப் போர் ஔரங்கசீப்பிற்கும் ஜான்ஸிராணிக்கும் இடையே நடந்ததுன்னு எழுதியிருக்கிறியே. ஏன்? சரியா படிக்கலியா.''

''இளைய தலைமுறையினரான நாங்கதான் இனிமே புதிய சரித்திரத்தை உருவாக்கணும்னு அன்னிக்கு சொன்னீங்களே சார்.''

கே. சுதர்சன்



பொருத்தம் என்று தூக்கிக் கொண்டு வந்தேன்'' என்றார் யானையார்.

''என்னை மன்னியுங்கள். ஒன்றும் செய்து விடாதீர்கள். தண்ணீர் கொடுங்கள். தாகம் தொண்டையை வறட்டுகிறது'' என்று அழுதார் பூபதி.

''இந்த நம்பிக்கைத் துரோகிக்குக் கடுமையான தண்டனை தர வேண்டும். குடிக்க ஒரு சொட்டுத் தண்ணீர் கூடத் தரக் கூடாது'' என்றன எல்லா விலங்குகளும்.


''மனிதனின் பெருகிவரும் சுயநலத்தால் நம் காட்டு விலங்கினங்கள் அழிந்து வருவது எனக்கும் தெரியும். நம் பகுதியில் கிடைக்கும் நீரைக் கூட இவர் ஏமாற்றித் தங்களுக்கு எடுத்து கொண்டு நம்மைத் தவிக்க விட்ட கொடுமையையும் நான் இன்னும் மறக்கவில்லை. ஆனால், இவருடைய உயிருக்கு எந்த ஆபத்தும் வராது என்று நான் சத்திய வாக்குத் தந்துள்ளதை எண்ணிப் பாருங்கள். நம்பிக்கைத் துரோகத்திற்காக இவரைக் கொன்று விட்டால், உங்கள் மன்னனாகிய நான், இவருக்கு அளித்த சத்தியம் என்ன ஆவது? பிறகு, இவரைப் போன்ற மனிதர்களுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்? இவருக்கு என்ன தண்டனை அளிப்பது என்பதை நீங்களே முடிவு பண்ணிக் கூறுங்கள்'' என்றார் சிங்கராஜா.

பூபதி நடுங்கினார். தண்ணீருக்காக அலறினார்.

யானையார் எங்கேயோ ஓடினார். திரும்பி வந்தபோது அவர் துதிக் கையில் ஒரு சின்ன டம்ளர் இருந்தது. அதில் தண்ணீர்! யானையார் டம்ளரை பூபதியிடம் நீட்டினார். பூபதி ஒரே மடக்கில் நீரைக் குடித்தார்.

''சிங்கராஜா, எங்கள் பெருமைக்கு உரிய மன்னராகிய உங்கள் சத்தியத்தைக் காக்க இவர் செய்த நம்பிக்கைத் துரோகத்தை மறந்து இவர் தாகத்தைத் தணித்து விட்டேன். குடிநீரின் அவசியத்தையும், அது கிடைக்காவிட்டால் தாகத்தின் கொடுமை என்பது எப்படி இருக்கும் என்பதையும் இவர் அனுபவித்து விட்டார். இந்தத் தண்டனை போதுமானது. இவரை உயிருடன் அனுப்பி வைக்க அனுமதியுங்கள்'' என்று மண்டியிட்டு வணங்கினார் யானையார்.

பூபதி, முகத்தை மூடிக் கொண்டு அழுதார். என்ன காரணம் என்பது உங்களுக்குப் புரிகிறதா?



எல்லாம் எலி மயம்!

எலியைக் கொல்ல வேண்டியே
எங்கள் அன்புத் தந்தையும்
குண்டு வெள்ளைப் பூனையைக்
கொண்டு வந்தார் காலையில்

கொழு கொழுவெனப் பூனையும்
கொஞ்ச நாளில் வளர்ந்தது;
அடுக்களையில் புகுந்ததும்
அட்டகாசம் செய்தது.

எலிக்கு எமன் பூனையாம்
எல்லோருமே சொல்வது;
எங்கள் வீட்டுப் பூனைக்கோ
எலியைக் கண்டால் எமபயம்!

பூனை வரும் முன்னரோ
எலிகள் அதிகம் இல்லையே!
பூனை வந்த பிறகுதான்
இல்லம் முழுதும் எலிமயம்!

— புதுவை அமலன்



கேட்கட்டுமா டாக்டர்?

● *சீர்காழி வி. கௌரி.*

? எலும்பு முறிவுக்கு உடனடியாக செய்ய வேண்டிய முதலுதவி என்ன?

! எலும்பு முறிந்தவரைப் படுக்க வையுங்கள். அடிபட்ட இடத்தில் சட்டைத் துணி கிழிந்திருந்தால் அதை அகற்றி விடுங்கள். வெளிக்காயம் இருப்பின் நீரில் நனைத்த சுத்தமான துணியால் துடைத்துக் கட்டுப் போடுங்கள். காயத்திலிருந்து ரத்தம் கசிந்தால், துணியை பல மடிப்புகளாக மடித்து, அதை காயத்தின் மீது வைத்து, அழுத்தமாகக் கட்டுப் போடுங்கள். பிறகு எலும்பு முறிவுள்ள பாகம் அசையாதபடி இருக்க, அடிபட்ட பாகத்தின் இருபக்கங்களிலும் அடிஸ்கேல் வைத்தோ அல்லது மூங்கில் பத்தைகளை வைத்தோ முறிந்த பாகத்தைக் கட்டுங்கள். கை எலும்பு முறிந்திருந்தால் முழங்கையை 'ட' வடிவில் மார்பைச் சேர்த்து மடக்கி, கழுத்திற்கும் கைக்கும் சேர்த்து சிறிய தொட்டில் போல துணிக்கட்டு போடுங்கள். கால் எலும்பு முறிந்திருந்தால் அந்த நபரைப் படுக்க வைத்து, இரண்டு கால்களையும் சேர்த்துக் கட்டி விடுங்கள். பிறகு மருத்துவரை அழைத்து வருவதற்கோ அல்லது அடிபட்ட நபரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்கோ உடனடியாக ஏற்பாடு செய்யுங்கள். மற்ற சிகிச்சைகளை மருத்துவர் பார்த்துக் கொள்வார்.

● *ஆர். சந்திர முரளி, ராயபுரம்.*

? இருபது வயதாகும் எனக்கு மார்பு நுனியைச் சுற்றி 1 செ.மீ. அகலத்தில் வீங்கியது போல் காணப்படுகிறது. இதைப் போக்க வழி கூறுங்கள், டாக்டர்?

! இந்தப் பிரச்னையை 'ஆண் மார்புப் பெருக்கம்' (Gynaecomastia) என்பார்கள். இது பொதுவாக எல்லா இளைஞர்களுக்கும் தற்காலிகமாகத் தோன்றி மறைவதுதான். இயக்குநீர்களின் (Hormones) சமச்சீரின்மை காரணமாக இது வருகிறது. நாளாக ஆக இது தானாகவே மறைந்து விடும். சிகிச்சை எதுவும் தேவையில்லை; பயப்பட ஒன்றுமில்லை. மாறாக, இந்த மார்புக்கட்டி வளர்ச்சி அடைந்தாலோ அல்லது வலி எடுத்தாலோ மருத்துவரிடம் நேரில் காண்பித்து அறுவை சிகிச்சை மூலம் அகற்றி விடலாம். பிரச்னை தீரும்.

● *பி. அமர்நாத், ஆலங்குளம்.*

? என் நடுவிரலிலும், ஆள்காட்டி விரலிலும் நகம் கருப்பாக உள்ளது. இது ஏன் வந்தது? எப்படிப் போக்குவது?

! நகத்தில் அடிபட்டு அதைக் கவனிக்காமல் விட்டு விட்டால் நகத்தின் அடியில் ரத்தம் உறைந்து, நகம் கருப்பாகத் தோன்றும். மற்றொரு காரணம், நகத்தில் காளான் கிருமிகள் (Fungus) தாக்குவது.





நெறி கட்டுதல்

டாக்டர் கு. கணேசன்

என்றால் என்ன?



முதலில் சொன்ன காரணமென்றால், நகத்தை அகற்றி விடுவது நல்லது. மறுபடியும் புது நகம் வெள்ளையாக முளைத்து விடும். இரண்டாவது சொன்ன காரணமென்றால், காளான் கொல்லி மருந்து ஒன்றை மருத்துவர் யோசனைப்படி, சுமார் 3 வாரங்களுக்குத் தொடர்ந்து நகத்தில் பூச வேண்டும். அத்துடன் காளான் கொல்லி மாத்திரைகளையும் அதே கால அளவுக்குச் சாப்பிட வேண்டும். வைட்டமின் மாத்திரைகளும் இதற்கு உதவும். நகம் நிறம் மாறும்.

● *ஆர். உமாபதி, ஆலங்காயம்.*

? எக்ஸிமர் லேசரைப் பயன்படுத்தி 'P.R.K.' என்ற நவீனக் கண் அறுவை சிகிச்சை செய்து கொள்ள எவ்வளவு ரூபாய் செலவு ஆகும்?

! சுமார், ரூபாய் பத்தாயிரம் வரை செலவாகும்.

● *எம். செந்தில் குமார், சந்தை புதுப்பாளையம், டி. தெய்வமணி, அம்பேத்கார் நகர், மற்றும் பலர்.*

? படிப்பவை மனத்தில் நிற்க மறுக்கிறது. ஞாபகமறதி உள்ளது. இதைப் போக்க என்ன செய்வது?

! இந்தக் கேள்விக்குப் பல முறை பதில் கூறியுள்ளேன். இருப்பினும், இப்போது பரீட்சை நேர மாதலால் மீண்டும் இங்கு பதில் கூறுகிறேன். நீங்கள் எதைப் படித்தாலும் அதை முழுமையாகப் புரிந்து படிக்க வேண்டும். முழு ஈடுபாட்டுடன், ஆர்வத்தோடு அதைப் படிக்க வேண்டும். கவனத்தைச் சிதற விடாமல் பாடத்தில் மனம் ஒன்றிப் படிக்க வேண்டும். மீண்டும் மீண்டும் அதைப் படிக்க வேண்டும். பெரிய பாடம் என்றால் அதை சிறு சிறு பகுதிகளாகப் பிரித்துப் படிக்க வேண்டும். அப்போதுதான் அது மனத்தில் பதியும். வாய்விட்டு உரக்கப் படிக்கலாம். இதன் காரணமாக, படிக்கின்ற செய்திகள் செவிகள் வழியாகவும் மூளைக்குச் சென்று பதியும். படித்தவை மறக்காமல் இருக்கவும், மனத்தில் அவை ஆழமாகப் பதியவும், அவற்றைப் பிறரிடம் ஒப்பித்துப் பழக வேண்டும். அல்லது எழுதிப் பார்ப்பது சிறந்தது. இந்தப் பழக்கம் உங்களுக்குத் தேர்வு நேரத்தில் தன்னம்பிக்கையை உண்டாக்கும்; நினைவாற்றலை வளர்க்க உதவும்.



● *மோ. பத்மநாபன், காட்டுமன்னார்கோவில்.*

? நெறி கட்டுதல் என்றால் என்ன டாக்டர்? இது மனிதனுக்கு எந்த வகையில் உதவி செய்கிறது?

! நெறி கட்டுதல் என்பது நிணநீர்ச் சுரப்பிகளின் வீக்கத்தைக் குறிக்கும். பொதுவாக இது உடம்பில் நோய்த் தொற்று ஏற்படும் போது தோன்றும். நோய்க் கிருமிகளை எதிர்த்துப் போராட ரத்த வெள்ளையணுக்களை அதிகப் படுத்துவதற்கு நிணநீர்ச் சுரப்பி வீங்குகிறது. நம் உடம்பில் எந்தப் பகுதியில் நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது என்பதைத் தெரிந்து கொள்வதற்கு இந்த 'நெறி கட்டுதல்' உதவுகிறது.



எங்கள் ஊரில் நடந்தது!

குடிசைத் தொழில்

எங்களுக்கு சமூக அறிவியல் வகுப்பு. ஆசிரியர் "தொழில்" என்ற பாடம் நடத்தினார். உங்களுக்குத் தெரிந்த குடிசைத் தொழில் சிலவற்றைச் சொல்லுங்கள்," என்று ஆசிரியர் ஒவ்வொருவராகக் கேட்டார். அனைவரும் ஆளுக்கொன்று



தெரிந்ததைச் சொன்னோம். ஒரு குறும்புக்கார மாணவன் எழுந்து "எரு முட்டை தட்டுதல்" என்று சொன்னானே பார்க்கலாம். வகுப்பே சிரிப்பில் அதிர்ந்தது.

விழுப்புரம், ந. துரை.

கண்ணை மூடி உடை!

என் தம்பி சமையலுக்குத் தேங்காயைத்தான்தான் உடைப்பேன் என அம்மாவிடம் பிடிவாதம் செய்தான். என்ன சொல்லியும் அவன் கேட்கவில்லை. கடைசியில் அம்மா "கண்ணை மூடிக் கொண்டு உடை. அப்படி உடைத்தால்தான் தேங்காய் நன்றாக இரண்டு துண்டாக உடையும்" என்றார். தம்பி உடைத்தான். தேங்காய் சிதறி உடைந்தது பல துண்டாக உடைந்த தேங்காயைக்



கொண்டு வந்து அம்மாவிடம் கொடுத்த தம்பி "நீங்கள் சொன்ன மாதிரி என் கண்ணை மூடிக் கொண்டு தான் உடைத்தேன். இருந்தும் இப்படியாகி விட்டதே!" என்றான். தேங் காயின் கண்களை மூடிக் கொள்ளச் சொன்னால், தன் கண்களை மூடிக் கொண்ட அவன் செய்கை எல்லோரையும் சிரிக்க வைத்தது.

தூத்துக்குடி, என். கோகுல்.

தண்டனை!

நானும் அம்மாவும் ஒரு உறவினர் வீட்டிற்கு இரண்டு நாட்கள் சென்று இருந்து விட்டு வந்தோம். திரும்பியதும் அம்மா அப்பாவிடம் "சென்ற இடத்தில் சமையல் ஒரே தண்டனை! வாயிலேயே வைக்க முடியவில்லை" என்று கூறினார். இதை நான் கேட்டுக் கொண்டிருந்தேன்.



பிறகு சில மாதங்கள் கழித்து அந்த உறவினர்கள் எங்கள் வீட்டுக்கு வந்தனர். பேச்சோடு பேச்சாக "நீங்கள் வந்திருந்த போது எங்க வீட்டு சமையல் எப்படி? என்றனர். "வாயிலேயே வைக்க முடியலே! தண்டனைதான்" என்றேன் நான்! திகைத்த அவர்கள், "என்னடா சொல்றே!" என திரும்பக் கேட்க, நானோ அப்பாவியாக, "எங்க அம்மா கூட அப்பாகிட்டே, அப்படித்தான் சொல்லிக் கொண்டிருந்தா..." எனக் கூறினேன். அருகிலிருந்த என் அம்மா நெளிந்து பிறகு எப்படியோ சமாளித்து பேச்சை மாற்றினார். எனக்கு, அவர்கள் போன பிறகு என்ன கிடைத்திருக்கும் என்பதை நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள். காதில் கேட்பதையெல்லாம் அப்படியே வெளியே சொல்லக் கூடாது என்பதை அன்றுதான் புரிந்து கொண்டேன்.

திருச்சி - 14. இரா. திலீப்

களத்தில்

இரண்டு வயது அக்கா பையன் வந்திருந்த போது நாங்கள் கேரம் விளை



யாடிக் கொண்டிருந்தோம். தன்னையும் விளையாட்டில் சேர்த்துக் கொள்ளுமாறு அவன் அடம்பிடித்தான். என்ன சொல்லியும் கேட்கவில்லை. எனவே, அவனை சேர்த்துக் கொண்டோம். கொஞ்ச நேரத்திற்குள்ளேயே அவனுக்குப் போர் அடித்து விட்டது. போர்டுக்குள் ஏறி உட்கார்ந்து கொண்டு காயின்களை அடிக்க ஆரம்பித்தான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அக்கா, நீங்களெல்லாம் என்னடா விளையாடறீங்க? இவன் தான் களத்தில் இறங்கி விளையாடறான்" என்று கூறவும் எல்லோரும் சிரித்துவிட்டோம். விஷயம் புரியாவிட்டாலும் கூட என் அக்கா பையனும் எங்கள் சிரிப்பில் கலந்து கொண்டான்.

கீழ்நத்தம், சு.கௌரி

லக்கி பென்

பள்ளி மைதானத்தை விட்டுக்



கடைசியாக கிளம்பியபோது; பேனா ஒன்று கீழே கிடந்தது. 'லக்கி' பென் எனக் கூறி நானே வைத்துக் கொண்டேன். இரவு அப்பாவிடம் கூறியபோது, அதை மறுநாள் உரிய நபரிடம் சேர்த்துவிடு. தொலைத்தவன் எப்படித் திண்டாடி மனம் வருந்துகிறானோ என்றார். ஆனால், நான் அப்படிச் செய்யவில்லை. இரண்டு நாள் கழித்து மைதானத்தில் மற்றொரு பேனா கிடைத்தது. அதையும் கூட நானே வைத்துக் கொண்டேன். அடுத்த நாள் என் பென்சில் பாக்ஸுடன் தண்ணீர் சாப்பிடச் சென்றேன். அருகில் இருந்த இடத்தில் பாக்ஸை வைத்து விட்டுத் தண்ணீர் குடித்தேன். மறந்துவிட்டுத் திரும்பி வந்து பார்த்தபோது என் பாக்ஸைக் காணோம். யாரோ அபேஸ் செய்து விட்டனர். அந்த பாக்ஸில் என் பேனாவுடன் இரண்டு லக்கி பேனாக்களும் இருந்தன. என் மனம் பதை பதைத்தது. இப்படித்தானே பேனாவைத் தொலைத்தவர்களும் இருப்பார்கள் என்று எண்ணிப் பார்த்தேன். என் தவறு புரிந்தது. ஏமாற்றாதே... ஏமாறாதே...! இது என் விஷயத்தில் உண்மையாகி விட்டது...

திருச்சி-14.வி.ஆர்.கிருத்திகா

ஆறுமுகம்



எங்கள் பள்ளிக்கு கல்வி அதிகாரி வந்திருந்தார். அவர் ஒவ்வொரு வகுப்பாக வந்து மாணவர்களின் திறமையைக் கேள்விகள் கேட்டு சோதித்துப் பார்த்தார். எங்கள் வகுப்பிற்கும் வந்தார். ஒரு மாணவனிடம் "What is Your Name?' என்று ரொம்ப சுலபமான கேள்வியைக் கேட்டார். "ஆறுமுகம்" என்றான் மாணவன். "ஆங்கிலத்தில்தானே கேட்டேன்? ஆங்கிலத்திலேயே சொல்லேன்" என்றார் அதிகாரி. உடனே அவன் "My Name is Six Face" என்றானே பார்க்கலாம். ஒரே சிரிப்... அதிகாரியும் கூடச் சிரித்து விட்டார்.

அனந்தபுரம், இராம. ஜெயகாந்தன்.

ஒரு வயதுப் பாட்டி!

ஞாயிற்றுக் கிழமை. நண்பர்கள் எல்லாம் ஒன்று கூடி கதை, ஜோக் சொல்லி மகிழ்ந்தோம். அப்போது ராமு என்ற



பையன் கதை சொல்ல ஆரம்பித்தான். ஒரு ஊரில் ஒரு வயதான பாட்டி இருந்தாங்க" என்று சொல்ல ஆரம்பித்ததும் இன்னொரு நண்பன் இடைமறித்து, "டேய் உன் கதை ஆரம்பமே தப்பு. ஒரு வயதுப் பாட்டி எங்காவது இருப்பாங்களா?" என்றதும் கூடியிருந்த நண்பர்கள் சிரிசிரியென்று சிரித்தனர். ராமு கூடத்தான்.

வந்தவாசி, பா.ஜெயக்குமார்.

மரியாதை

அப்பாவின் நண்பர் ஒருவர் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அப்பா, ஒரு தகவலைச் சொல்லியிருந்தார். அப்பாவின் நண்பருக்கு பத்து வயதுச் சிறுவன் இருந்தான். அவர் அவனை வாங்க, போங்க என்று அழைத்தார். எனக்கோ வியப்பு. அவரிடம் விபரம் கேட்டேன். அவர் சொன்னார்




"சிறு வயதாக இருந்தாலும், நாம்ப வாங்க, போங்க என்று மரியாதையாக அழைத்தால்தான், அவர்களுக்கும் பெரியவர்களிடம் மரியாதையாகப் பேசத் தெரியும்" என்றார். எத்தனை பயனுள்ள பழக்கம்! இதை எல்லோருமே செயல்படுத்தினால் என்ன?

குமாரப்பாளையம், 'தேவி' கணேஷ்

உதவும் உள்ளங்கள்

நாங்கள் குடும்பத்துடன் மருதமலை கோவிலுக்குச் சென்றோம். இதில் எனது தாய், தந்தை, தங்கை மாமா மற்றும் அக்காக்கள், ஆக ஏழு பேர் மருதமலை முருகனைத் தரிசனம் செய்து விட்டு



மலையில் இருந்து இறங்குவதற்குக் கோவில் வேனுக்காகக் காத்திருந்தோம். அப்போது உல்லாசப் பயணவேனில் வந்து சாமிதரிசனம் முடிந்து புறப்பட இருந்த வட இந்தியாவைச் சேர்ந்த 5 பெரியவர்கள், தங்கள் வேனில் மலையிலிருந்து கீழே இலவசமாக அழைத்துச் செல்வதாகக் கூறி உதவினர். அடிவாரம் வந்ததும் தாங்கள் அருகில் உள்ள பஞ்ச முக ஆஞ்சநேயர் கோயில் செல்வதாகவும் நாங்கள் விரும்பினால் தங்களுடன் வரலாம் என்றனர். நாங்களும் அவர்களுடன் ஆஞ்சநேயர் கோவில் சென்றோம். பின்னர் கோவை வரை அழைத்து வந்து வழியனுப்பினர். பிறகு நாங்களும் நன்றி கூறி விடைபெற்று ஊர் திரும்பினோம். எதற்கு எடுத்தாலும் பைசா, காசுக் கணக்குப் பார்க்கும் இந்தக் காலத்தில், தங்கள் வேனில் தாங்களாகவே முன்வந்து இலவசமாக ஏற்றி வந்து உதவிய நல்ல உள்ளங்களை மறக்க முடியவில்லை.

கோவை-23, எம். விவேக்குமார்.

காலை நீட்டு!


பள்ளியில் ஓவிய வகுப்பு. ஆசிரியர் பலகையில் மயிலின் படத்தை அழகாக வரைந்து விட்டு, எங்களையும் வரையச் சொன்னார். என் நண்பன், தான் வரைந்த மயிலின் படத்தை ஆசிரியரிடம் காட்டினான். ஆசிரியர் அதைப் பார்த்துவிட்டு, "காலைக் கொஞ்சம் நீட்டு" என்றார். படம் சரியில்லை என்று அடிப்பதற்காகத் தான் காலை நீட்டச் சொல்கிறார் என்று எண்ணிய அவன், தன் காலை நீட்டினான். "உன் காலையா நீட்டச் சொன்னேன்? மயிலின் காலை நீட்டு" என்று ஆசிரியர் கூறியதும் எல்லோரும் சிரித்தோம், நண்பன் உட்பட.

துத்திப்பட்டு, பி.பரசுராமன்



பெட் தீர்ந்து போச்சு!

நாங்கள் வெளியூர் போய்விட்டு, வீடு வந்து சேர்ந்த பிறகு, எல்லோரும் ஒன்றாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அக்காவின் மூன்று வயது பேத்தியும் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். குழந்தை பிரயாணத்தில் மிகவும் களைத்துப் போய் இருந்தாள். குழந்தை அருகில் சாப்பிட்டுக் கொண்டிருந்த தாத்தா, அக்காவைப் பார்த்து, "ஏம்மா, குழந்தைக்கு 'பெட்' போடவில்லையா?" என்று கேட்டார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த அந்தச் சிறுமி "தாத்தா, பிரட் அப்போதே தீர்ந்து போச்சே? எல்லோரும் தின்னோமே? உங்களுக்குக் கூடக் கொடுத்தோமே?" என்று கூறினாள். பெட்டை (BED), பிரட் (BREAD) என்று தவறாக புரிந்து கொண்ட, குழந்தையின் பேச்சை அனைவரும் ரசித்தோம்.



சேலம்,
ஆர். சம்பத்குமாரன்.

ஈற்று வாக்கியக் கதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை



பந்தயம்!

நம்பியும் ராஜேஷூம் நெருங்கிய நண்பர்கள். கல்லூரித் தோழர்கள். ஆரம்பப் பள்ளியில் இருந்தே இருவரும் ஒன்றாகப் படித்து வருபவர்கள். ஒரே தெருவில் வசிப்பவர்கள். ஒன்றாக ஒரே அலுவலகத்தில் பணிபுரிபவர்கள். இருவரும் தூங்கும் நேரம் தவிர மற்ற நேரங்களில் ஒன்றாக இருப்பவர்கள். இருவருமே தீவிரமான கிரிக்கெட் அபிமானிகள். தொலைக்காட்சிப் பெட்டியில் ஒளி பரப்பப்படும் எல்லா கிரிக்கெட் போட்டிகளையும் கண்டு களிப்பார்கள். ஒவ்வொரு ஆட்டக்காரரின் ஆட்டத்தையும், சரிவையும் அலசுவார்கள். அவர்களுக்குக் கடிதம் எழுதித் தங்கள் கருத்தையும் தெரிவிப்பார்கள். அந்த அளவுக்குக் கிரிக்கெட் ரசிகர்கள்.

இந்திய ஸ்ரீலங்கா கிரிக்கெட் டெஸ்ட் நடந்ததை இவர்கள் பார்க்காமல் இருப்பார்களா? கையிலேயே பாக்கெட் டிரான் ஸிஸ்டரோடு கல்லூரிக்கும் போனார்கள். இடைவேளையில் நேரடி வர்ணனையைக் கேட்டு மகிழ்ந்தார்கள்.

பேச்சுவாக்கில் இருவரும் ஒரு பந்தயம் போட்டுக் கொண்டார்கள். இலங்கை அணி தோற்றால் ராஜேஷ் பாதி மீசையை இழப்பதாகவும் இந்திய அணி தோற்றால் நம்பி பாதி மீசையை இழப்பதாகவும் பந்தயம். நண்பன் ஒருவனை சாட்சி வைத்துக் கொண்டு பந்தயம் போட்டார்கள்.


டெஸ்ட் மேட்சின் கடைசி நாள். இறுதியில் ஒரு சில பந்துகளே மீதமுள்ள நிலையில் இலங்கை அணி வெற்றி பெற நிறைய ஓட்டங்கள் தேவைப்படும் நிலை. வெற்றி வாய்ப்பு இந்திய அணிக்கே.

ராஜேஷ் சட்டென அறைக்குள் சென்றான். அவன் திரும்பி வந்தபோது அவன் முகத்தில் பாதி மீசையே இருந்தது! நம்பி மகிழ்ச்சியுடன் சிரித்தான். "தோற்கப்போவது நிச்சயம்னு முதலி லேயே மீசையை எடுத்துவிட்டாயா" என்றான் வெற்றிக் களிப்புடன்.

ராஜேஷ் "எப்படியும் இலங்கை தோற்கப் போகிறது. பந்தயப்படி பாதி மீசை போகப் போகிறது. இப்போதே பாதி மீசையை எடுத்து விட்டால், தோல்வி உறுதியான பின்பு, மீதி பாதி மீசையை எடுத்து விடலாமே? முழு மீசையும் போய் விடுமே? இதனால் வெளியில் அவமானப்படத் தேவையில்லையே?" என்றான் ராஜேஷ் சிரித்தபடி.

நம்பி திகைத்துப் போய் நின்றான்.

— த. சண்முகராஜன்





வாழிய புத்தாண்டு!



சித்திரை மாதம்! தமிழ்மாதம்!
செந்தமிழ் ஆண்டின் முதல்மாதம்!
முத்தமிழ்த் தாயின் புத்தாண்டு!
முழங்கிடும் "தாது" எனும்ஆண்டு!

பூங்குயில் கூவும் இசைபாடும்!
பொதிகையின் தென்றல் அசைபோடும்!
ஓங்கிடும் கோடை வெயில்கூடும்!
ஊட்டியைக் காண மனம்நாடும்!


சித்திரைத் திருவிழா! மதுரையிலே!
சேவிப்போம்! அழகரைக் குதிரையிலே!
புத்தாண்டின் பேரின்பம் அகத்தினிலே!
புன்னகை தவழ்ந்திடும் முகத்தினிலே!

படிப்புக்கும் பள்ளிக்கும் விடுமுறைதான்!
பாலர்கள் யாவர்க்கும் குதூகலம்தான்!
துடிப்புக்கும் மகிழ்ச்சிக்கும் சுதந்திரம்தான்!
துள்ளித்தான் ஆடலாம் தினம்தினம்தான்!

வாழிய! நம்தமிழ்ப் புத்தாண்டு!
வாழ்த்தியே பாடுவோம்! பல்லாண்டு!

- நெல்லை ஆ. கணபதி





அப்பா அம்மாவுக்கு உதவுங்கள்!



பெரும்பாலான குடும்பங்களில் அப்பா, அம்மா இருவருமே வேலைக்குச் செல்பவர்களாக இருக்கிறார்கள். உங்க வீட்டிலும் அப்படித்தானே? வீட்டுப் பொறுப்பையும், உங்கள் தேவைகளையும் இருவருமே பங்கு போட்டுக் கொண்டு கவனிக்கிறார்கள் இல்லையா?

இப்படி உங்களுக்காகவே தங்களை வருத்திக் கொள்ளும் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? ரேங்க் வாங்கி அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தருவோம் என்கிறீர்களா? இதைக் கண்டிப்பாகச் செய்வீர்கள். ஆனால், இப்போதே நீங்கள் செய்யக் கூடிய உதவிகூட இருக்கிறதே!

எப்படி என்கிறீர்களா? வீட்டைப் பெருக்கித் துடைப்பது, முந்தின நாளே காய்கறிகளை அலம்பி முடிந்தால் நறுக்கி வைப்பது, உலர்ந்த துணிகளை மடித்து வைப்பது, சிதறிக் கிடக்கும் பொருள்களை ஒழுங்கு படுத்தி வைப்பது, அப்பாவின் (சில வீடுகளில் அம்மாவுடையதும் கூட) சைக்கிள், ஸ்கூட்டரைத் துடைத்து வைப்பது, உங்கள் பூட்சுக்கு நீங்களே பாலீஷ் போட்டுக் கொள்வது இப்படி எத்தனையோ சின்னச் சின்னப் பொறுப்புகளை நீங்கள் செய்யலாமே? சில வீடுகளில் தண்ணீர் பிடிப்பது பெரிய வேலை. பிற்பகலில் குழாயில் தண்ணீர் வரும். நீங்கள் அந்த நேரத்தில் வீட்டில் இருந்தால் அதைச் செய்யலாம். ஒரு வாரத் துணிகளை ஞாயிற்றுக் கிழமைகளில் தோய்க்கும்படி இருக்கும். அப்பொழுது உதவலாம். வெயிலில் காய வைக்க வேண்டியவைகளைச் செய்யலாம். அரவை நிலையத்திற்குப் போவது, மாவு மிஷினுக்குப் போவது ஒட்டடை அடிப்பது இப்படி எத்தனையோ! யோசித்துப் பார்த்தால் உங்களுக்கே தோன்றும்.



அப்பாவும் அம்மாவும் காரியங்களை எப்படிச் செய்கிறார்கள் என்பதைக் கூர்ந்து கவனியுங்கள். அவர்களுடைய மேற்பார்வையிலேயே விடுமுறை நாட்களில் நீங்களே இதைத் தனியாகச் செய்யக் கற்றுக் கொள்ளுங்கள். மேல் படிப்புப் படிக்க, வெளியூர்க்குப் போய்த் தங்கும்படி இருந்து, ஹாஸ்டலிலும் இடம் கிடைக்கவில்லை என்றால் என்ன பண்ணுவீர்கள்? நான்கைந்து நண்பர்களைச் சேர்த்து வாடகைக்கு வீடு எடுத்து, நீங்களே சமைத்துக் கொள்ளலாமே? அதற்கு சமைக்கத் தெரிந்திருந்தால்தானே முடியும்? அவசியம் நேரும்போது திடீரென்று சமைக்க வந்து விடுமா? இப்பொழுதே பழகிக் கொள்ள முயன்றால் அப்பா அம்மாவுக்கும் கூட இப்போது உதவியாக இருக்குமே? வீட்டு வேலைகளும், சமைப்பதும் பெண்களின் பொறுப்புத்தான் என்ற எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள். தம்பி தங்கைகள் இருவருக்குமே இது இன்றியமையாதது. ஒரு குடும்பத்திற்குப் பெரிய செல்வம் என்பது, அதன் பண வசதியைப் பொறுத்து அல்ல. கஷ்டத்தை உணர்ந்து பெற்றோரின் பொறுப்புகளில் பங்கு கொள்ளும் பிள்ளைகளைக் கொண்ட குடும்பமே செல்வம் மிக்க குடும்பம்.

அடுத்த வாரத்தில் உங்களுக்கு எத்தனை நாள் பள்ளி விடுமுறை, அன்று பள்ளி வேலைகளை முடித்துவிட்டு வீட்டுப் பொறுப்புகளில் எவைகளைச் செய்யலாம் என்பதை இந்த வாரமே திட்டம் போட்டுக் கொள்ளுங்கள். அளவு தெரியாமல் இழுத்து விட்டுக் கொண்டு திண்டாடாதீர்கள். பெற்றோரிடம் ஆலோசனை கேட்டு அதன்படி செய்யுங்கள். படங்களைத் துடைத்து வைப்பது, சட்டைக்குப் பொத்தான் தைப்பது போல். அவை எத்தனை அற்பமான, சிறிய வேலையாக இருந்தாலும் சரி, அது உங்கள் பெற்றோரின் பொறுப்புச் சுமையைக் கண்டிப்பாகக் குறைக்கும். 'முதல் ரேங்க்' வாங்குவது மட்டுமே பெற்றோர்க்குப் பெருமைதருவது அல்ல. "என் பிள்ளைங்க வீட்டுப் பொறுப்புத் தெரிஞ்சவங்க" என்று கூறுவதும் கூட அவர்களுக்கு அளவில்லாத பெருமையையும் மகிழ்ச்சியையும் அளிக்கும்.

அட்டையில் அம்மாவுக்கு உதவுவது சிறுமி ஷில்பா ராம்ஜியும், மாஸ்டர் எஸ். ஆதித்யாவும்.

வண்ணப்படம் : ஸ்ரீஹரி.



பூவழகியின் பாட்டு!

சாட்பீட் கீத் வகுப்பில் அவர்களுடன் படிக்கும் நந்தகுமார் வீட்டில் புதுமனை புகுவிழா. தாம்பரம் தாண்டி கந்தபுரம் என்ற இடத்தில் புதிதாக வீடு கட்டி கிரகப்பிரவேசம் பண்ணுகிறார்கள்.

நந்தகுமாரின் அப்பா லாரி சர்வீஸ் வைத்திருந்தார். லாரிகளைத் தவிர இருபது ஆட்டோ ரிக்ஷாக்கள், இரண்டு ஜவுளிக் கடை, ஒரு மருந்துக்கடை, அச்சகம் எல்லாம் வைத்துத் திறமையாக நடத்தி பணம் கொழித்தார் நந்தகுமாரின் தந்தை புண்யகோடி. நந்தகுமாருக்கு ஒரே தங்கை. ராஜாத்தி என்று பெயர். அவளும் அதே பள்ளியில் ஐந்தாவது படித்து வந்தாள.

நந்தகுமாரும், ராஜாத்தியும் பள்ளிக்குக் காரில்தான் வருவார்கள். ஆனால் செல்வச் செருக்கு என்பது சிறிதும் இல்லாதவர்களாக இருந்தார்கள். வழியில் நண்பர்கள் யாரைப் பார்த்தாலும் காரில் ஏற்றிக் கொண்டு வருவார்கள். சாட்பீட் கீத் செய்யும் பொதுப் பணிகளில் இருவருக்குமே தனி ஈடுபாடு. எந்த உதவி தேவையானாலும் கைகொடுப்பார்கள். அவர்கள் பெற்றோரும் பொதுப் பணிகளுக்கு அள்ளி அள்ளிக் கொடுப்பவர்கள். பள்ளியில் உள்ள நூலகக் கட்டடம் கூட அவர்கள் அளித்த நன்கொடை தான்.

நந்தகுமாரும், ராஜாத்தியும் விழாவுக்கு எல்லோரையும் அழைக்கவில்லை. காரணம், விழா நாளன்று பள்ளி இருந்தது. அழைப்பிதழ் தந்தால், போகாவிட்டால் தவறாக எண்ணி விடுவார்களே என்ற எண்ணத்தில் மிகவும் கஷ்டப்பட்டு எல்லோரும் வருவதற்கு முயற்சிப்பார்கள். அதைத் தவிர்க்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில், தலைமை ஆசிரியருக்கும் வகுப் பாசிரியருக்கும், சாட்பீட்கீத்துக்கு மட்டும் அழைப்பைக் கொடுத்திருந்தார்கள். கோடை விடுமுறையில் ஒருநாள் எல்லோரையும் அழைத்துத் தங்கவைத்து, விருந்து தருவதாக ஏற்பாடு. அதனால், சாட்பீட்கீத் மட்டுமே புதுமனை



சின்னபாபு



புகுவிழாவுக்குக் கிளம்பினார்கள்.

என்ன பரிசளிப்பது? நந்தகுமாரின் குடும்பத்தின் நிலைக்கு ஏற்றபடி பரிசளிப்பது என்பது அவர்களுக்கு இயலாத காரியம். அன்பின் அடையாளமாக எந்தப் பரிசைக் கொடுத்தாலும் நந்தகுமார் மகிழ்ச்சியுடன் பெருமையாக ஏற்கக் கூடியவன்.

"பூச்செண்டு சிறுவர் மாத இதழுக்கு ஆயுள் சந்தா கட்டி விடலாம்" என்றான் கிதா.

"ஏற்கெனவே அவன் ஆயுள் சந்தாதாரர் தான்'' என்றான் சாதிக்.

''அப்போ கேரம் போர்டு?''

''கேரம் போர்டு, கிரிக்கெட் செட், காமிரா, ஸ்டாம்ப் ஆல்பம், பேனா செட் எல்லாம் அவன் கிட்டே இருக்கு. அவன் கிட்டே இல்லாதது எதுவுமே இல்லே" என்றான் பீட்டர்.

''நந்தகுமார் அடிக்கடி பாக்கெட் டேப்ரெக்கார்டரை கனிடம் இரவல் வாங்குவான். அதனால் அவனிடம் அது இல்லை என்று நினைக்கிறேன். அதையே நாம்ப மூணு பேருமா சேர்ந்து வாங்கிக் கொடுத்துடலாமே?'' என்றான் சாதிக்.

"எங்க அப்பாவுக்குத் தெரிஞ்ச ஒருத்தர் பர்மா பஜாரில் எலக்ட்ரானிக்ஸ் பொருள் கடை வைச்சிருக்கார். எனக்கும் நன்றாகத் தெரியும். கொஞ்சம் சலுகையும் கிடைக்கும்" என்றான் கிதா.

சனிக்கிழமை பிற்பகல் சாட்பீட்கித் பர்மா பஜாருக்குப் படையெடுத்தனர். முன்னூறு ரூபாய்க்கு பேரம் படிந்தது. கைக்கு அடக்கமான சின்ன; அழகான டேப் ரிக்கார்டர்.

"இது எப்படி வேலை செய்யுதுன்னு பார்க்கணுமே?" என்றான் கிதா.

பேட்டரியைப் போட்டு 'ஆன்' பண்ணிவிட்டு 'சாட்' ஏதாவது பேசு என்றான் பீட்டர்.

"நீதான் அந்தக் கட்டபொம்மனா?" என்ற புகழ்பெற்ற வீரபாண்டியக் கட்டபொம்மன் வசனத்தைப் பேசினான் சாதிக். இவர்களைச் சுற்றிக் கூட்டம் கூடி விட்டது.

"கீத், நீ ஏதாவது பாடு" என்றான் சாதிக். கீதா பாரதியாரின் 'ஒளிபடைத்த கண்ணினாய் வா வா' பாடலைப் பாட, பீட்டரும் சேர்ந்து கொண்டான்.

"அக்கா அக்கா, நானும் பாடறேனே?" என்று கூட்டத்தில் இருந்து ஒரு சிறுமி வந்தாள். கிழிச்சல் பாவாடை சட்டை. வறண்டு கலைந்த தலை. பாசி மணி மாலை.

"என் பொண்ணுதாம்மா. இதுவும் ஒரு பாட்டுப் பாடட்டும்மா" என்று சிறுமியை முன்னே தள்ளிக் கொண்டு வந்தான் ஒரு முரட்டுக் காட்டான். அவன் தோளில் நீண்ட சாட்டை. அருகே அவன் மனைவி, தலையில் கூடை. கைகளில் பறை. இடுப்பில் கட்டப்பட்ட தூளி மாட்டலில் கைக்குழந்தை. கல்லுளி மங்கன் குடும்பம்.

"உன் பேர் என்ன? உனக்கு என்ன பாட்டுத் தெரியும்?" என்று கேட்டான் கீதா.

"என் பெயர் பூவழகி அக்கா. ஆடிப் பாடிக்காக கேட்கும் பாட்டையே பாடறேன். நல்லா இருக்கும்."

எல்லோரும் சிரித்தனர். பூவழகி ஆடிக் கொண்டே பாடினாள். அவள் அம்மா பறை தட்டினாள்.

"மச்சானைப் பார்த்திங்களா?"

மலைப் பாம்பு வயித்துக்குள்ளே!"

எல்லோரும் வயிறு வலி எடுக்கும் வரை சிரித்து, அடக்க முடியாமல் அடக்கிக் கொண்டனர். இந்த இரண்டு அடிகளையே நீட்டி, குறைத்து, மெதுவாக, வேகமாகப் பாடி ஆடினாள் பூவழகி. டேப் முடிந்து 'கிளிக்' சத்தத்துடன் நின்று விட்டது.

"இதை நாங்க கேட்கலாமாம்மா?" என்று கேட்டார் பூவழகியின் அப்பா கல்லுளிமங்கன்.

ஏழைத் தந்தையின் கோரிக்கை. கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும் என்று மனத்தில் எண்ணினாலும், கீதாவுக்கு அவசரம். சாட்பீட் வேறு துரிதப்படுத்தினார்.

"ஐயா, எங்களுக்கு இப்போ அவசரமா போகணும். நீங்க எங்கிருக்கீங்கன்னு சொல்லுங்க. கண்டிப்பாக் கொண்டு வந்து போட்டுக் காட்டறேன். அதோட இப்போ ரிக்கார்ட் பண்ணின பூவழகியின் பாட்டை இன்னொரு டேப்பில் காப்பி பண்ணி, அதையும் எங்க அன்பளிப்பாக் கொண்டு வந்து தரேன்" என்றாள் கீதா.

"நாங்க நாடோடிங்கம்மா. மாதா மாதம்



இடம் மாத்திக்கிட்டே போவோம். இந்த மாதம் முழுக்க, சைதாப்பேட்டை அடையார் பாலத்துக்குக் கீழே இருக்கும் அங்காள பரமேஸ்வரி கோவிலுக்கு அருகே இருப்போங்க."

"பகல் நேரத்துல இருக்க மாட்டோம்மா. ராவைக்கி ஒன்பது மணிக்கு மேலதான் இருப்போம். நான் தானம் கொட்டி எம் பொண்ணு பாடினதைக் கேட்கும்படி பண்ணினா இந்த ஏழைங்க மனசு குளிரும்மா" என்றாள் பூவழகியின் அம்மா.

கிரகப்பிரவேசம் முடிந்தது. நந்தகுமாருக்கு டேப்ரிக்கார்டரைப் பார்த்ததும் மகிழ்ச்சி தாங்கவில்லை. "பயனுள்ள பரிசு!" என்று வாய்திறந்து கூறி மகிழ்ந்தான்.

ஒரு வாரம் ஓடியது. சாட்பீட்கீத் மூவரும், திருவண்ணாமலையில் நடந்த சாரணர் கேம்ப்புக்குப் போய் விட்டு அன்றுதான் திரும்பியிருந்தனர்.

"நந்தகுமாரின் தங்கை ராஜாத்தியை யாரோ கடத்திக் கொண்டு போய் விட்டார்கள்" என்று இடி போன்ற செய்தியை அம்மா கூறியதும் கீதா அப்படியே சைக்கிளில் கிளம்பி விட்டாள். அங்கே அவளுக்கு முன்னால் சாட்பீட் இருந்தனர்.

"நாங்கள் இன்னும் புது வீட்டுக்குப் போகவில்லை. போன வாரம் திங்கட்கிழமை மாலை ராஜாத்தி தனியாக கபாலீஸ்வரர் கோவிலுக்குப் போயிருக்கிறாள் அடிக்கடி போகிறவள்தானே? காரில்தான் போயிருக்கிறாள். உள்ளே போனவள் திரும்பி வரவே இல்லை. தேர் நிலை வாசலில் காரை வைத்துக் கொண்டு காத்திருந்த டிரைவர், ஒன்பது மணி வரை ராஜாத்தி திரும்பி வராததைக் கவனித்து, உள்ளே போய்த் தேடியிருக்கிறான். எங்கும் இல்லை. தெப்பக்குள வாசல் வழியாக யாரோ கடத்திக் கொண்டு போயிருக்கிறார்கள். நேற்று வீட்டு வாசலில் ஒரு டேப் இருந்தது. போட்டுப் பார்த்தோம். லட்ச ரூபாயை பழைய ஐம்பது ரூபாய் நோட்டுக்களாக மாற்றி நீலவண்ணப் பையில் போட்டு இரவு பதினோரு மணிக்கு மேல் கபாலீஸ்வரர் கோவில் மேற்கு பக்கக் குளக்கரைப் படியில் வரும் திங்கட்கிழமைக்குள் வைக்க வேண்டும். தவறினால் தனது உயிருக்கே ஆபத்து என்று ராஜாத்தியே அந்த டேப்பில் அழுது கொண்டு கூறியிருக்கிறாள்" என்று விளக்கினான் நந்தகுமார்.

"அந்த டேப்பை நாங்க கேட்கலாமா?"

"அதை நான்கு காப்பி எடுத்திருக்கிறோம். போலீசில் மூன்று. இதோ உங்களுக்கு ஒன்று. ஒரிஜினல் எங்களிடம் இருக்கு" என்று டேப்பைக் கொடுத்தான் நந்தகுமார்.

"இதில் உங்கள் திறமையைக் காட்டி, என் தங்கையை மீண்டும் உயிருடன் காண உதவினால், எங்கப்பா எதுவும் செய்யக் காத்திருக்கிறார்" என்றான் நந்த குமார் கண்ணீருடன்.

டேப்புடன் பீட்டர் வீட்டுக்கு மூவரும் விரைந்தனர். டேப்ரிக்கார்டரில் டேப்பைப் போட்டு விட்டு மூவரும் கவனமாகக் கேட்டனர். தொன்னூறு நிமிடங்கள் ஒலிக்கும் அந்த ஒலிநாடாவில் ராஜாத்தியின் பேச்சு மூன்றே மூன்று நிமிடங்கள் தான் கேட்டது. மீதி டேப் முழுக்க எதுவுமே இல்லை. "அப்பா" என்று தீனமான குரலில் தொடங்கிய ராஜாத்தியின் பேச்சு, "நான் இங்கே அடைபட்டுக் கிடக்கிறேன் அப்பா" என்ற விசும்பலுடன் தொடர்ந்து லட்ச ரூபாய் பணத்தை ஐம்பது ரூபாய் நோட்டுக்களாக நீலப் பையில் போட்டு என்று நிபந்தனைகளையெல்லாம் விளக்கி முடிந்தது.

பேச்சில் வேறு எந்தச் செய்தியும்

அன்பை வளர்ப்போம்!



பொன்னைச் சிலபேர் மதிப்பாளர் கள்;
பொருளைச் சிலபேர் மதிப்பார்கள்;
உண்மை அன்பு ஒன்றைத்தான்
உயிர்க்கும் மேலென நான் மதிப்பேன்!

துப்பும் கிடைக்கவில்லை. இரண்டு மூன்று முறை போட்டுக் கேட்டார்கள். பயன் இல்லை. கீதா, டேப்பை மிக அதிக அளவு சத்தத்துடன் போட்டுக் கேட்டாள்.

என்னவோ ஒரு பாட்டு, கிணுங் ஓசை மிக மிக இலேசாகக் கேட்பது போல் தோன்றியது. தன் சந்தேகத்தை சாட்பீட்டி டம் கூறிவிட்டு மறுபடி மிகச் சத்தமாக டேப்பைப் போட்டாள்.

அந்த இசை இப்பொழுது மிக இலேசாகக் கேட்டது. மாறி மாறி மூவரும் போட்டு ஆவலுடன் கேட்டார்கள். எப்பொழுதோ எங்கோ கேட்ட திரைப்படப் பாடல் போல அந்த இசை இருந்தது.

"கீதா, கண்டுபிடித்து விட்டேன்! இது அந்தக் கல்லுளிமங்கன் பெண் பூவழகி பாடிய பாட்டு" என்று கூறினான் சாட்.

மறுபடி போட்டுக் கேட்டனர்.

இப்பொழுது பாட்டுடன், பறைகொட்டும் சத்தமும் இலேசாகக் கேட்டது!

"இது பூவழகியின் மச்சானைப் பார்த்திங்களாவேதான்" என்றாள் கீதா.

"அப்போ அந்த கிணுங் சத்தம்?"

"டெலிபோன் மணியாக இருக்குமோ? இரண்டு கிணுங் சத்தம் இருக்கே?"

"ஒரே நேரத்தில் இரண்டுவிதமான கிளிங் கேட்க வாய்ப்பு இருக்கா?"

"ஒரே வீட்டில் இரண்டு தொலைபேசி இருக்கலாம் இல்லையா? இரண்டும் ஒரே நேரத்தில் கிணுக்கலாம் இல்லையா?"

சாட்பீட் இருவரும், சைதாப்பேட்டைக்குப் போய் கல்லுளிமங்கன் குடும்பத்தினரை அழைத்து வந்தனர். டேப்பைப் போட்டுக் காட்டினர்.

"என் பாட்டேதான் அக்கா!" என்று வியந்த பூவழகி, "என்னக்கா இத்தனை இலேசாக் கேட்குது?" என்று கேட்டாள்.

"இது வேற. நான் பர்மாபஜாரில் ரெக்கார்டு பண்ணினது இல்லே பூவழகி" என்றாள் கீதா.

"இந்த வாரம் முழுக்க நீங்க எங்கெங்கே போனீங்கன்னு சொல்லுங்க?" என்றான் சாட்.

'ஒரே ஒருநாள்தான் புதன் கிழமை போனோம். அடுத்த நாளில் இருந்து என் மனைவிக்கு நல்ல ஜுரம். எங்குமே போகலே. பூவழகி மட்டும் சைதாப்பேட்டையிலேயே பறை இல்லாம போய் பாட்டுப் பாடி ஆடிக்கிட்டு சம்பாதிச்சு வந்தது."

"புதன்கிழமை எங்கெல்லாம் போனீங்க?"

"சிந்தாதிரிப்பேட்டைலதான். அது கூட நாலு இடத்துலதான் வித்தை காட்டினேன். என்னமோ ஊர்வலமாம். போலீஸ் கெடுபிடி தாங்கலே."

மூன்று பேரும் கூட்டிக் கழித்து அலசினார்கள். சிந்தாதிரிப்பேட்டை, புதன் கிழமை, நான்கே இடங்கள், இரண்டு டெலிபோன் உள்ள இடம். இதில்தான் ராஜாத்தி சிறைப்பட்டிருக்கிறாள்!

போலீசுக்குத் தகவல் பறந்தது. இழையைக் கண்டுபிடித்துக் கொடுத்து விட்ட பிறகு, சிக்கலைப் பிரிப்பது கடினமாக இருக்கவில்லை. கள்ளக் கடத்தலுக்குப் பேர் போன ஒரு கயவனின் கோடௌனில் இருந்து, ராஜாத்தி மீட்கப் பட்டாள்.

"கபாலீசுவரர் கோவிலில் தரிசனத்தை முடித்துக் கொண்டு திரும்பும் போது, "உங்க அப்பா, தெப்பக் குளத்துக்கு அருகே காத்திருக்கிறார்" என்று பூக் காரியை அனுப்பி, என்னைக் கடத்தி வந் தார்கள்" என்றாள் ராஜாத்தி.

பரிசாக நந்தகுமாரின் தந்தை அளிக்க வந்த பத்தாயிரம் ரூபாயையும் சாட்பீட்கீத் பள்ளிக்குத் தந்து விடக் கூறிவிட்டார்கள். அடுத்த வாரம் பள்ளியில் மாணவர் சார்பில் பாராட்டு விழா!


நீங்கள் எல்லாம் இல்லாமலா?

எதனால் அன்பை மதிக்கின்றேன்
என்பதை இங்கே சொல்கிறேன்.
இதனைப் புரிந்து கொண்டாலே
எல்லா நன்மை கூடிவரும்!

வெளிச்சம் வந்தால் இருள் ஓடும்;
வெப்பம் வந்தால் குளிர் ஓடும்;
உண்மை அன்பு உள்ளிருந்தால்
உறுத்தும் துன்பம் ஓடாதோ?


கலகம், போர்கள் ஒழிந்துவிட,
கருணை, கனிவு விளைந்து வர,
உலகம் முழுக்க வயல் ஆக்கி
உண்மை அன்பை வளர்ப்போமே!

— சிந்து வருண்





தேன்மொழி வாழ்க!
அமைப்பு : ரே
ஓவியம் :
தேன்மொழி ஜமீன்தார் மகள்.
வழக்கப்படி ஒருநாள் காலை —
இட்டிலியும் பாலும் வைச்சிருக்கேன். எழுந்து சாப்பிடுங்கம்மா.
வைச்சிட்டுப் போ. நான் சாப்பிட்டுக் கறேன்.
சரிம்மா.
தேன்மொழி, பல் விளக்கி —
—விட்டுத் திரும்புகிறாள்.
அட புறா!


பாவம் அடிபட்டிருக்கு!
மருந்து தடவி—
பாலை, மூக்கை உயர்த்தி அண்ணாந்து குடிக்கிறதே!
பூனை கண்ணில் படாம கூடைக்குள் வைப்போம்.
சில நாட்களில் —
இப்போ குணமாயிடுத்து கவனமா பறந்து போ.
பறக்க விடுகிறாள்.
ஒரு நாள் —
பலமா அடி!
ஓங்கி அடி!


யாரை அடிக்கிறாங்க?
நல்ல பாம்பை.
பெரிய கருநாகம்.
அடிக்காதீங்க. பாம்புகள் வயல் எலிகளைத் தின்று மனிதனுக்கு நல்லது செய்யுது.
ஒரு பானையை தரையில் வைத்து —
நாகராஜா, பானைக்குள் போய் விடு. காட்டிலிருந்து எதுக்கு ஊருக்குள் வந்தே?



இதை காட்டுல் உடைத்து விடு.
ஒரு நாள் திருவிழாவுக்குப்
இத்தனை விறகு வெட்டிகள் எங்கே போகிறார்கள்!
போய் விட்டுத் திரும்பும் போது -
உங்க காரியமாத் தாம்மா.
என் காரியமாவா!
புதுசா ஊஞ்சலும், பல்லக்கும் கேட்டீங்களாமே?
அதுக்கு மரம் வெட்டப் போறோம்.
அதுக்காக மரங்களை வெட்டறுமா? வேண்டவே வேண்டாம். மரங்களை வெட்டாதீங்க.


நடுக் காட்டில் —
ஐயோ ! ஒற்றை யானை !
ஓடுங்க !
பல்லக்கை வைத்து விட்டு ஓடுகின்றனர்
நம் வாழ்க்கை யானையால் முடியப் போகிறது !
அருகே வரும் யானை
காலைத் தூக்கிக் காட்டுகிறது.
காலில் காயம் !
மேலாக்கையைப் பறித்து கசக்கிக்
எத்தனை பொறுமையா காட்டுது !
கட்டுகிறாள்.


பக்கத்து நாட்டு அரசர் –
படையெடுத்து வருகிறார்
ஜமீன்தாரையும் தேன்மொழியை
யும் சிறைப் படுத்தினர்.
வெற்றி பெற்ற அரசனின்
அடிமைக்கு இத்தனை அழகா!
வேலை வாங்கியே இவளை ஒழிப்போம்.
பெண்கள் பொறாமைப் பட்டனர்.
வேண்டுமென்றே நவதானியங்
களை வயலில் தூவிவிட்டு –


நாளைக்குள், தூவின நவதானியங்களை மூட்டை கட்டிக் கொண்டு வா.
கொண்டு வந்தால் விடுதலை. இல்லை, இன்னும் அதிக வேலை.
தேன்மொழி அழுகிறாள் –
தானியங்களை எப்படி எடுக்க முடியும்?
ஜன்னலில் சத்தம்!
அட புறா!
உன்னால் உயிர் பிழைத்த நான் கண்டிப்பாக உதவுவேன்.
கவலையை விடு.


காலையில் கண் விழித்தபோது—
நண்பர்களுடன் இரவு முழுக்க கொத்தி நவதானியங்களை மூட்டை கட்டி இருக்கிறேன்.
நன்றி புறாவே!
என்னது! வயலில் தூவின நவதானியங்களைப் பொறுக்கி மூட்டை கட்டி விட்டாளா!
அதிசயமா இருக்கே!
இந்த வேலையையும் செய்து முடி. அப்பத்தான் விடுதலை.
சொல்லுங்க இளவரசி?
இந்தப் பானையால தண்ணீர் இழுத்து, இந்தப் பெரிய தொட்டியை நிரப்பு.


நாங்க காலையில குளிக்க தொட்டி நிறையத் தண்ணி இருக்கணும்!
இந்த ஓட்டைப் பானையாலா?
ஆமாம்.
ஓட்டைப் பானையால் எப்படி நீர் இழுக்க முடியும்?
ஏன் அழறே?
தேன்மொழி விளக்க—
நீ உதவினதை மறக்கலே. நான் நீர் நிரப்பறேன்.



இனியாவது உனக்கு விடுதலை கிடைக்குதான்னு பார்க்கலாம்.
நன்றி யானையாரே!
காலையில்
தொட்டி நிறையத் தண்ணி நிரப்பிட்டாளா?
என்னவோ மாயம் பண்ணு கிறாள்!
நாங்க இப்போ சொல்ற வேலையையும் பண்ணி முடி.
அப்பத்தான் உனக்கு விடுதலை.
என்ன செய்யணும்மா?



நாளைக்கி பூஜை செய்யறோம்.
விதம் விதமா ஆயிரத்தெட்டு பூக்கள், காலைக்குள் கொண்டு வர வேணும்.
கொண்டு வந்தா உனக்கும் விடுதலை.
உன் தந்தைக்கும் விடுதலை.
காலைக்குள் விதம் விதமா ஆயிரத்தெட்டு மலர்கள்! நடக்கக் கூடிய காரியமா?
ஜன்னலில் சத்தம் —
அட பறவைகள்!
உன்னால் காக்கப் பட்டவை.
புரியலையே?!
புது ஊஞ்சலும் பல்லக்கும் நீ வேண்டாம்னு சொன்னதால்...
வெட்டாம தப்பிச்ச மரங்களில் வசிப்பவர்கள் நாங்கள்.





எங்க நன்றியைக் காட்ட வேண்டாமா?
நீ அமைதியாகத் தூங்கு. ஆயிரத் தெட்டு மலர்களைக் கொண்டுவருவது எங்க பொறுப்பு.
காலையில் —
அதிசயமா இருக்கே!
மலர் மலைகளா வந்து குவிஞ்சிருக்கே!
கண்டிப்பா தனியக்காரியாத் தான் இருக்கணும்
இந்தாடி. கடைசியா இன்னொரு வேலை.
சொல்லுங்க இளவரசி?
நாளைக்கு பூஜை முடியும்.
ஆயிரம் பேர் சாப்பிடப் போறாங்க.
சமையல் பண்ண விறகு வெட்டிக் குவிச்சிருக்காங்க.



அவைகளை கட்டுக் கட்டா இங்கே கொண்டு வரணும்.
இதைச் செய்துமுடி. உனக்கும் உன் தங்கைக்கும் விடுதலை.
விறகுக் கட்டைச் சுமக்க என்னால் முடியுமா?
தேன்மொழி?
பாம்பா!


உன்னால் உயிர் காக்கப்பட்ட பாம்பு ராஜா.
இவளை விடு. என் மலைப் பாம்பு படையை அனுப்பி நான் முடிக்கிறேன்.
காலையில்
எல்லா விறகுக் கட்டுகளும் வந்துடிச்சே!
ஐயோ பாம்பு!
பாம்பு!


கையில சுற்றிக்கிச்சு!
என் கையிலும் தான்!


யாராவது வந்து காப்பாத்துங்களேன்.



யாராவது வந்தால் கையைக் கடித்து விடுவோம். மரணம் நிச்சயம்.



ஐயோ வேண்டாம். உங்களுக்கு என்ன வேண்டும்?
தேன்மொழி எல்லா உயிர்களையும் நேசிப்பவள். விடுதலை தந்து எடுத்துக்கொண்ட ஆவியையும் திரும்பத் தரவேண்டும் சத்தியம் செய்.
அப்படியே, இது சத்தியம்!
பாம்புராஜா, உனக்கு எப்படி நன்றி கூறுவது என்று தெரியவில்லை.
எல்லா உயிர்களையும் நேசிக்கும் உன் உயர்ந்த பண்புக்குக் கிடைத்த வெற்றி இது தேன்மொழி.
மூலம் : ஆப்பிரிக்கப் பழங்கதை.


என்ன




குறள்? - போட்டி










இங்கே மொத்தம் 16 படங்கள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் சொற்களின் ஒரு பகுதிக்கான எழுத்துக்களைத் தருகின்றன. இவைகளைக் கவனமாக எழுதிக் கொண்டு கடைசியில் கவனமாகப் பாருங்கள். இந்தச் சொற்களை மாற்றி மாற்றிச் சரியானபடி அமைத்தால், உங்களுக்கு மிகவும் பழக்கமான, நன்கு தெரிந்த ஒரு திருக்குறள் வரும். படிக்கும் போதும், பார்க்கும் போதும் மலைப்பாகத் தோன்றினாலும், இது மிகமிக எளிதான போட்டி. இந்தப் போட்டியை முன்னிட்டாவது ஒரு திருக்குறளை அறிந்து கொள்ளுங்களேன்? கண்டுபிடித்த குறளை ஓர் அஞ்சலட்டையில் எழுதி முகவரிக் கூப்பனையும் ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்பி வையுங்கள். ஒருவருக்கு மேல் சரியான விடை எழுதினால், குலுக்கல் முறையிலேயே பரிசு முடிவு செய்யப்படும். முகவரிக் கூப்பனில்லாமல் வருபவை ஏற்கப்பட மாட்டா. வெளிநாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தரவேண்டும். முடிவு தேதி 30.4.96. தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு 'கோகுலம்' பொறுப்பல்ல. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர், கோகுலம்
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.



சார் தபால்

♦ காகத்தைப் பற்றித் தலைமுறை தலைமுறையாகப் பேசி நம்பப்பட்டு வரும் பல தகவல்களை, அறிவியல் அடிப்படையில் தவறு என்பதைக் காட்டியுள்ள கௌரவ ஆசிரியரின் பணி மகத்தானது. இதுவல்லவா புரட்சி!- பொன்னமராவதி வா. நடேசன்தம்பி, புகலூர் வி. சுப்பையா, தாராமங்கலம் மு. நாகேஸ்வரன், புத்திராம்பட்டு, கோவி. அஞ்சுகம், சங்கரன் கோவில் இரா. சுரேஷ் குமார் நண்பர்கள், மேலப்பாதி என்.ராஜா, தேவனாங்குறிச்சி பா. வடிவேல், ஏழுகிணது பாலாஜி, பவித்ர மாணிக்கம் டி.இளங்கோவன், கருத்தம்பட்டி இரா. அருண்பிரகாஷ், கபிஸ்தலம் எஸ்.வினோத்பாபு, பவித்ரமாணிக்கம் டி. முருகேசன் மற்றும் பலர்.

♦ மார்ச் இதழில் வெளியான "நூறு மார்க் வாங்கியும்..." என்ற ஜோக்கை நான்தான் கோகுலத்திற்கு அனுப்பினேன். அது வேறு யார் பெயரிலோ வெளிவந்துள்ளதே?- மணிமங்கலம் து. பார்வதிபுத்ரன்.

(இந்த ஜோக் சேர்க்கப்பட்ட பிறகு, உங்களையும் சேர்த்து 4 பேர் இதே ஜோக்கை அனுப்பியிருந்தார்கள். சேர்க்கவில்லை என்றால், இதை வெளியிட்டே இருக்க மாட்டோம்!- ஆசிரியர்.)

♦ சிரிக்க வைத்த சின்னபாபுவுக்கு அசத்தவும் தெரியும் என்பதைக் காட்டி விடுகிறாரே! சாட் பீட் சித்தைத்தான் கூறுகிறேன். வேறு எந்தச் சிறுவர் பத்திரிகையும் செய்யாத சாதனை இது!- அண்ணாமலை நகர் தா.சங்கரபாண்டி, இலுப்பூர் தா. முருகேசன், சிறுவயல் கோ. கணபதிமூர்த்தி, வாசப் பாளையம் பூ. பெரியநாயகி, சின்னசேலம் ஆர். பிரசன்னா மற்றும் நண்பர்கள், தென்னமாரி சுப. சிவராஜா, கருமத்தம்பட்டி இரா. அருண்பிரகாஷ், கபிஸ்தலம் எஸ். வினோத்பாபு.

♦ பறவை இட்ட சாபம்- சித்திரம் அருமையா, கதையம்சம் அருமையா என்று மயங்கித் திகைத்தோம். அருமையோ அருமை!- வாழப்பட்டி து.வடிவேல், அறந்தாங்கி கா. வள்ளிநாயகம், கபிஸ்தலம் எஸ். வினோத் பாபு, பொட்டலூரணி க. சங்கரநாராயணன், இராஜ கவுண்டன் பாளையம் அழ.மாரிமுத்து, விருத்தாசலம் வி. பிரபாகர், பவித்ரமாணிக்கம் டி.மனோகரன், மேலப்பாதி எஸ். நாகராஜன்.

♦ ஆழியின் 'சிம்பன்சி', கலைக் களஞ்சியம் தான்! விருத்தாசலம் வா. பட்டாபி, நாகலாபுரம் இரா. தம்பையா, கபிஸ்தலம் என்.வினோத் பாபு, கபிஸ் தலம் ஆர்.கலிவரதன், கருமத்தம்பட்டி அ. இராஜப்பன், புத்திராம்பட்டு கோ. மதிவாணன், பொட்டலூரணி க. சங்கரநாராயணன், விருத்தாசலம் வி. பிரபாகர். மேலப்பாதி என். ராஜி, திருவனந்தபுரம் தி.க. பாலசுப்ரமணியன்.


♦ நடுவர்கள் தேர்வு நன்மை பயக்கும் தேர்வு : எதிர்கால எழுத்தாளர்களுக்கு ஆர்வமூட்டும் பரிசுக் கதை அருமை! குடும்ப சூழ்நிலையை மகன் உணர்வது மனதைத் தொட்டது! - தேரெழுந்தூர் எஸ். மணிகண்டன், விருத்தாசலம் வி. பிரபாகர் ஆர். பிரசன்னா.

♦ 'ஒரே பெயரில் எழுதாதே' படித்தேன். வியந்தேன். குழந்தைகள் மனதை எத்தனை அருமையாகப் புரிந்து கொண்டுள்ளார்! அதனால் தான் அவருக்குக் 'குழந்தைக் கவிஞர்' என்று பெயர் வந்ததோ என்னவோ? -கபிஸ்தலம் எஸ். வினோத்பாபு, மேலப்பாதி எஸ். நாகராஜன், திருமங்கலம் கா.பஞ்சநாதன், பெரம்பூர் வா.சுசிலா மற்றும் பலர்.

♦ கேளுங்கள் சொல்லப்படும் பகுதியில் I.I.SC. INDIAN INSTITUTE OF SCIENCE என்பதை I.S.S. என்று குறிப் பிட்டுள்ளீர்கள். தமிழ் கோகுலம் படிப்பவர்களுக்கும் நல்ல ஆங்கிலச் சொற்களையே எழுதலாம். திருத்தம் தயவு செய்து வெளியிடவும்.
ஒகூர் திவ்ய லட்சுமி, மற்றும் பலர்.

♦ காப்பி அடித்துப் பாஸ் செய்கிறவர்களுக்கு '10வது போகப் போறேன்' நல்ல சூடு! இனியாவது திருந்த வாய்ப்பு அளிக்கும்.
- சின்னசேலம் ஆர். பிரசன்ன குமார், தில்லையாடி பா. முருகேசன், மாமண்டூர் சா. தண்ணீர்மலை, திருத்தணி வா. பிரபாகர், ஏலப்பன், புதுகை சா. வேணுகோபால், புத்திராம்பட்டு கோ. மதிவாணன்.

9. புவனா அறிவாளா?



இரண்டு நிமிடங்களுக்குள்ளாக மின் இணைப்பு மீண்டும் வந்து, விளக்குகள் எரிந்து, மறுபடி ஒளி வெள்ளம் வீசத் துவங்கியது. முரடர்கள் இருவரும் நின்றிருந்த இடம் காலியாக இருந்தது!

''மின்தடை ஏற்பட்ட இரண்டு நிமிஷ இடைவேளையை எத்தனை துடிப்பாக இருந்து பயன்படுத்திக் கொண்டு தப்பிவிட்டார்கள்! எமகாதகர்களாக இருப்பார்கள் போலிருக்கே!'' என்று வியந்து கொண்டார் டாக்டர்.

''அவர்களுடைய சுறுசுறுப்பைப் பாராட்டியே ஆக வேண்டும்'' என்று ரவியும் புகழ்ந்தார்.

புவனா தேடிய புதையல்

"என்ன சார் நீங்க! ஊர்க் கதையை எல்லாம் பேசிப் பொழுதைக் கழித்து குற்றவாளிங்களைத் தப்ப விட்டுவிட்டு, இப்போ இரண்டு பேரையும் புகழுறீங்களே! நாங்க என்ன மேலதிகாரிகளுக்குப் பதில் கூற வேண்டும்?" என்று சிடுசிடுத்தார் காவல் அதிகாரி.

"சார், கவலை வேண்டாம். இவர்கள் மூலம் நாங்கள் ஒரு புதிய செய்தியை அறிந்து கொண்டோம். இனி அது உண்மைதானா என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். உங்களுக்குப் பிரச்னையாக இருக்கும் என்றால், நாங்கள் 'புவனாவைக் காணோம்' என்று எழுதிக் கொடுத்த புகாரைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறோம்'' என்றார் டாக்டர்.

"அவர்கள் இருவரும் கிடைக்கவில்லை

மதி ஒளி


என்றால் பார்க்கலாம். கண்ட்ரோல் அறைக்கு ஏற்கெனவே செய்தியைக் கூறிவிட்டேன். அதனால் கண்டுபிடித்து விடுவார்கள் என்று நினைக்கிறேன்'' என்று கூறிய அதிகாரி, "இப்போதைக்கு, புவனா கிடைத்துவிட்டான். எங்களிடம் ஒப்படைக்கப்பட்டான் என்று எழுதிக் கொடுத்துவிட்டு புவனாவைக் கூட்டிக் கொண்டு பத்திரமாகக் கிளம்புங்கள்'' என்றார்.

ரவி, அதிகாரி சொன்னபடி பரபரவென்று எழுதி டாக்டரிடம் கொடுத்தார். படித்துப் பார்த்துவிட்டு டாக்டர் கையெழுத்திட, ரவியும் கையெழுத்திட்டு, அதிகாரியிடம் தந்தார். இதற்குள் ஓய்வு அறையிலிருந்து தீபாவையும் புவனாவையும் அழைத்துக் கொண்டு வந்தாள் டாக்டரின் மனைவி.


''முரடர்கள் புவனாவைப் பற்றிக் கூறியது எதையும் இவர்களிடம் கூற வேண்டாம். ரமாவையும் ஈஸ்வரையும் சந்தித்துப் பேசி, அவை உண்மைதானா என்பதை உறுதி செய்து கொண்ட பிறகு புவனாவிடம் தெரிவிக்கலாமா வேண்டாமா என்பதை முடிவு செய்வோம்'' என்றார் டாக்டர்.

''நானும் அப்படித்தான் நினைத்தேன்'' என்றார் ரவி.

"இன்றைக்குச் சுற்றிப் பார்த்தது போதும். புவனாவும் தலைவலிக்கிறது என்கிறான். ஓட்டலுக்குத் திரும்பிவிடலாம். நாளை காலை மறுபடி வந்து பார்க்கலாம்'' என்றாள் டாக்டரின் மனைவி.



அதிகாரிக்கு புவனா நன்றி கூறினான். எல்லோருடைய நன்றியையும் வாங்கிக் கொண்டு அதிகாரி விடைகொடுத்தார். இரண்டு ஆட்டோவை வைத்துக்



கொண்டு ஓட்டலுக்குத் திரும்பினர். பேசிக் கொண்டே சாப்பிட்டனர். டாக்டரின் மனைவி தீபாவையும் புவனாவையும் அழைத்துக் கொண்டு அறையைத் தாளிட்டுக் கொண்டு படுத்துக் கொண்டாள்.

டாக்டரும் ரவியும் கீழே வரவேற்பு அறைக்கு வந்தனர். எஸ்.டி.டி. போட்டு ஈஸ்வருடன் தொடர்பு கொண்டார் ரவி.

"இப்போ எனக்கு உடம்பு தேவலை ரவி. சுளுக்கு போயே போய்விட்டது. நானும் ரமாவும் கூட அங்கே வந்து மாறுதலுக்காக உங்களுடன் இரண்டு நாட்கள் இருக்க விரும்புகிறோம். பம்பாய்க்கு விமானத்தில் வந்து, அங்கிருந்து மறுபடி விமானத்தைப் பிடித்து ஜெய்ப்பூர் வந்து, காரில் ராம்தம்பூருக்கே வந்துவிடுகிறோம்" என்றார் ஈஸ்வர்.

'என்னென்ன புதிய பிரச்னைகள் உருவாகப் போகிறதோ' என்ற பதைபதைப்புடன் ரவியும் டாக்டரும் அவர்கள் இருவரது வரவையும் எதிர்பார்த்தனர். பெற்றோர் வரப்போவது புவனாவுக்கு அளவில்லாத மகிழ்ச்சி.

சொன்னபடியே மறுநாள் பிற்பகலுக்குள் ஈஸ்வரும் ரமாவும் வந்துவிட்டனர். அடுத்த நாள் ஊர் சுற்றக் கிளம்பலாம் என்று முடிவு செய்தனர். டாக்டர், ஒரு மாறுதலுக்காகத் தன் மனைவியையும் தீபா, புவனாவையும் அழைத்துக் கொண்டு சினிமாவுக்குக் கிளம்பினார். ரவி வேண்டுமென்றே ஈஸ்வர், ரமாவை நிறுத்திக் கொண்டார்.

"என்னடா ரவி! இத்தனை தூரம் அவசரம் அவசரமா

நாங்க பறந்து வந்ததே தீபா, புவனா, டாக்டர், அவர் மனைவி எல்லோருடனும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தானே? என் னென்னவோ நொண்டிச்சாக்கு சொல்லி எங்களைப் போக விடாமல் தடுத்துட்டியே?'' என்று அலுத்துக் கொண்டாள் புவனாவின் அம்மா ரமா.

"ஆமாம் ரவி, எனக்கும் இந்தக் குறை இருக்கு" என்றார் புவனாவின் தந்தை ஈஸ்வர்.

"காரணமாகத்தான் நான் உங்கள் இருவரையும் நிறுத்தினேன்" என்று கூறிய ரவி, "அக்கா, மாமா, உங்க இருவரிடமும் நான் ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். அதற்கு உண்மையான பதிலை நீங்கள் கூறவேண்டும்'' என்றார்.

இருவரும் வியப்புடன் ரவியை நோக்கினர்.

"எதைப் பற்றி ரவி?''

"ம்... புவனாவைப் பற்றி அக்கா. புவனா உண்மையாகவே உங்க மகள்தானா?''

"ரவி...! என்னடா இந்த மாதிரி ஒரு கேள்வியைக் கேட்கிறே?'' என்று இடி விழுந்த மாதிரி அலறினாள் ரமா.


"அக்கா, என்னுடைய கேள்வி உங்களுக்கும் மாமாவுக்கும் அதிர்ச்சியாக இருக்கும். ஆனால், உண்மை என்ன என்பதை நீங்கள் எனக்குக் கூறித்தான் ஆகவேண்டும்'' என்றார் ரவி உறுதியாக.

"இந்தச் சந்தேகம் உனக்கு எப்படி ஏற்பட்டது? எதனால் ஏற்பட்டது?" என்று கேட்டார் ஈஸ்வர்.

''காரணத்தைக் கடைசியில் நானே விளக்குகிறேன் மாமா. இது உண்மையா இல்லையா என்பதை மட்டும் கூறுங்கள். அதுபோதும்'' என்றார் ரவி.

சிறிதுநேரம் வரை கண்ணீர்விட்டபடி கலங்கிய ரமாவும் ஈஸ்வரும் மனத்தைத் தேற்றிக் கொண்டனர். முதலில் ஈஸ்வர் தான் ஆரம்பித்தார்.

''பிரபலமான இலங்கை வங்கியில் உயர் அதிகாரியாக ஸ்ரீலங்காவின் மட்டக்களப்பில் பல ஆண்டுகள் நான் இருந்தது உனக்குத் தெரியும். பல ஆண்டுகள் வரை எங்களுக்குக் குழந்தைகள் இல்லை. ஒரு முறை உங்க அக்காவுக்குக் குழந்தை பிறந்தது. ஆனால் பிறந்ததுமே அது மூச்சை நிறுத்திவிட்டது. உங்க அக்கா ஏக்கத்தில் உருக்குலைந்து போனாள். இதற்கு நடுவில் ஸ்ரீலங்காவில் மூண்ட உள்நாட்டுக் கலவ



ரம் காரணமாக நாங்கள் தமிழ்நாட்டுக்குக் கிளம்பினோம். மதுரைக்கு வந்தோம். மதுரையிலேயே தங்கிவிட முடிவெடுத்தோம்.''

"ஓர் அனாதைக் குழந்தையை எடுத்து வளர்ப்பது என்று முடிவு பண்ணினோம். மதுரையில் இருந்த ஓர் அனாதை ஆசிரமத்துக்குப் போய்ப் பார்த்தோம். புவனா அங்கே இருந்தாள். அவளை எங்கள் இருவருக்கும் மிகவும் பிடித்தது. பெற்றோர்கள், உற்றார், உறவினர் யாருமே இல்லாத, எதுவுமே நினைப்பு இல்லாதவளாக அவள் இருந்தாள். அவளை எடுத்து வந்து வளர்த்தோம்'' என்றாள் ரமா.

"அவளுக்குத் தான் ஓர் அனாதை என்பதோ, நாங்கள் வளர்ப்புப் பெற்றோர் என்பதோ தெரியவே தெரியாது. நாங்கள்தான் அவளது உண்மைப் பெற்றோர் என்று நம்பி வருகிறாள். ஊரும் உலகமும் கூட அப்படித்தான் நம்பி வருகிறது."

"எனக்குக் கூடத் தெரியாதே அக்கா!''

"ஆமாம். அப்போ நீ ஏதோ ஆராய்ச்சிக்காக வடஇந்தியாவிலேயே இருந்து விட்டே. எங்களுக்கு அது ரொம்ப வசதியாப் போச்சு'' என்றார் ஈஸ்வர்.

"கடைசிவரை புவனா எங்களுடைய வளர்ப்பு மகள் என்கிற உண்மை யாருக்



குமே தெரியாமல் இருக்க வேண்டும் என்று எண்ணினோம். அந்த இரகசியம் இப்போ உடைஞ்சு போச்சு," என்று வருத்தம் தாளாமல் கூறிய ரமா, "ஆமாம் ரவி, இந்தச் சந்தேகம் உனக்குத் திடீர்னு எப்படி ஏற்பட்டது? இந்தச் சந்தேகம் புவனாவுக்கும் கூட ஏற்பட்டிருக்கிறதா?" என்று பதைபதைப்பு மாறாமல் கேட்டாள்.

"இல்லை அக்கா. எனக்கும் டாக்டருக்கும் மட்டுமே இதெல்லாம் தெரியும். இதை நாங்கள் தெரிந்து கொண்ட போது நல்ல காலமாக புவனா, தீபா, டாக்டரின் மனைவி அங்கு இல்லை," என்று ரமாவுக்கு ஆறுதல் கூறிய ரவி, தனக்கு புவனாவின் மனநிலை குறித்து ஏற்பட்ட சந்தேகம், டாக்டருடன் அதைப் பகிர்ந்து கொண்டது, தங்களுடைய ஊகங்கள், ராம்தம்பூருக்கு அவனைக் கொண்டுவரப் போட்ட திட்டங்கள், அவள் முரடர்களால் கடத்தப்பட்டு மீண்டது, முரடர்கள் புவனாவைப் பற்றிய உண்மையைக் கூறியது என்று எதையும் மறைக்காமல் தெளிவாகக் கூறினார். இனி மறைப்பது நல்லதல்லவே?

"என்னமோ சினிமாவில் வருவதுபோல் இருக்கு!" என்று வியந்து கொண்ட ஈஸ்வர், இத்தனை நடந்தும், புவனாவுக்குத் தன்னைப் பற்றிய உண்மைகள் தெரியவில்லை என்பது மனதுக்கு இதமாக இருக்கிறது," என்றார்.

"ஆமாம். நாங்கள் தன்னுடைய சொந்தப் பெற்றோர் இல்லை என்பது தெரிந்து, அவளுக்கு எங்கள் மேல் உள்ள அன்பும் பாசமும் குறைந்துவிட்டால் எங்களால் அதை மட்டும் தாங்கவே முடியாது ரவி. இந்த வரை அவளுக்கு இது தெரியாமல் இருக்கிறதே, அதுவே எங்களுக்குப் பெரிய ஆறுதல்," என்று கண்ணீர் விட்டாள் புவனாவின் அம்மா ரமா.

அழைப்பு மணி ஒலித்தது. யாரோ வந்திருக்கிறார்கள். 'யாராக இருக்கும்?' என்று எண்ணிக் கொண்டே கதவைத் திறந்தார் ரவி.

அங்கே... அங்கே... புவனா மட்டும் நின்று கொண்டிருந்தாள்!

டாக்டர், அவர் மனைவி, தீபா மூவரும் என்னவானார்கள்? இவள் மட்டும் எப்படித் தனியாக வந்தாள்? எப்போது வந்தாளோ? எத்தனை நேரமாக நின்று கொண்டிருக்கிறாளோ? நாங்கள் பேசியதை எல்லாம் கேட்டுக் கொண்டிருப்பாளோ?

எல்லோரும் திகைத்து நின்றார்கள்.

(தொடரும்)


HOW WELL DO YOU KNOW YOUR PARENTS?
FIND OUT WITH
APRIL ISSUE ON SALE!
GOKULAM
The monthly magazine for children
96 PAGES FOR JUST Rs. 5!
47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Madras - 600 097.



படிக்காத பாடம்!

கமலவேலன்

காட்சி –1

வீடு. காலை நேரம்.

தோன்றுவோர்: இசக்கி, அவன் அப்பா, அம்மா, கண்ணப்பன்.

(இசக்கி நேர்முகத்தேர்வுக்காகத் தயார் செய்து கொண்டிருக்கிறான். பேப்பர் பையன் கண்ணப்பன் பேப்பர் போடுகிறான்)

கண்ணப்பன்: பேப்பர்!

இசக்கி : (பேப்பரை எடுத்துக் கொண்டே) தினம் தினம் நானும் பேப்பர் பார்க்கிறேன். நமக்கு ஏத்தபடி ஒரு வேலையும் கிடைச்சபாடில்லை. பேப்பர் வாங்கறது அதிகப்படி செலவு. அப்பா கிட்டே சொல்லி நிறுத்திட வேண்டியது தான்.

கண்ணப்பன்: (திடுக்கிட்டு) இசக்கி, இசக்கி, நம்ம பிழைப்புல கையை வச்சிடா தேப்பா...

இசக்கி: கண்ணப்பா.. எங்கப்பாவுக்கு இருந்த வேலை, விபத்துனால போயிடுச்சு. வேலை தேடியாக வேண்டிய நிலையில் நான் இருக்கேன். காசு கொடுத்துப் பேப்பர் வாங்கறது எனக்குக் கட்டுபடி ஆகுமா?

கண்ணப்பன்: இசக்கி, நான் வேணும்னா ஒண்ணு செய்யறேன். தினமும், சாயங்காலம், முதல் நாள் பேப்பரைத் தரேன். நீங்க படிச்சுட்டு அடுத்த நாள் கொடுத்துடுங்க!

இசக்கி: அப்ப... அதுக்குப் பாதி காசு தந்துடவா?

கண்ணப்பன்: காசெல்லாம் வேண்டாம். சீக்கிரமே உனக்கு வேலை கிடைச்சாலே போதும். சரி. இந்த நேரத்துல நிறையப் பேரு என்னை எதிர்பார்த்துக் காத்திருப்பாங்க. வர்றேன். (போகிறான்)

(இசக்கியின் அப்பா தாங்கித் தாங்கி நடந்தபடி வருகிறார்)

அப்பா: இசக்கி, இன்னிக்கு ஒரு இண்டர்வியு இருக்குதே? சர்டிபிகேட், எல்லாம் இண்டர்வியுக்கு சரிபார்த்து எடுத்து வச்சுக்க. எனக்குக் கால் போகாம இருந்தா நீ படிப்பை இப்படிப் பாதியில் நிறுத்திவிட்டு வேலைதேட வேண்டிய அவசியமே இல்லை.

இசக்கி: பிளஸ் டூவைத் தானே முடிக்க முடியாம நின்னுட்டேன்? பத்தாவதுவரை படிச்சதுக்காகவாவது ஏதாவது வேலை கிடைக்கும்பா. அதோட, பத்தாவதுல நான் தங்கப் பதக்கம் வாங்கினவம்பா. அதுனால கண்டிப்பா வேலை கிடைக்கும். நீங்க மனம் தளராதீங்கப்பா. சர்டிபிகேட் எல்லாம் ரெடியா வைச்சிருக்கேன்.

கண்ணப்பன்: (வெளியில்) கோலப் பொடி.... கலர்க் கோலப்பொடி!

அம்மா: இசக்கி... அந்தக் கோலப் பொடியைக் கூப்பிடு. கலர்க் கோலப் பொடி தீர்ந்து போச்சு! (திரும்பி) கோலப் பொடி... தம்பி கோலப்பொடி...

(கண்ணப்பன் கூடையுடன் வருகிறான்.)

இசக்கி: (திகைத்து) டேய் கண்ணப்பா! மறுபடியும் நீயா? இப்பத்தானே பேப்பர் போட்டுட்டுப் போனே? அதுக்குள்ள கோலப்பொடி விற்க வந்துட்டே?

கண்ணப்பன்: பேப்பர் போட்டு முடிச்சாச்சு... மணி ஆறாயிடுச்சு. அடுத்த

'ரவுண்டு' கோலப்பொடி விக்கறதுதான் என் வழக்கம்.

இசக்கி: பயங்கரமான கறுகறுப்பான வன் நீப்பா!

கண்ணப்பன்: அசந்து உட்கார்ந் துட்டோம்னா இந்த உலகம் நம்மளை விட்டுட்டு வேகமாப் போயிடும் இசக்கி. (திரும்பி) அம்மா... எந்தக் கலர் பொடி வேணுங்கம்மா?

அம்மா: எல்லாக் கலர்லயும் ஒரு பொட்டலம் கொடு.

காட்சி—2

வீதி, பகல் பொழுது.

தோன்றுவோர்: இசக்கி சங்கர், ஆல்பர்ட், கண்ணப்பன்.





ஆல்பர்ட்: இசக்கி, எங்கே உன்னைக் காணோமேன்னு நினைச்சேன். வந்துட்டே!

இசக்கி: என்ன பண்றது ஆல்பர்ட்! உனக்கு உங்கப்பா திடீர்னு காலமாகி, குடும்பப் பொறுப்பைச் சுமக்க வேண்டிய நிலை வந்து வேலை தேட ஆரம்பிச்சிருக்கே. எனக்கு எங்கப்பா, தொழில் சாலையில் விபத்துக்கு இலக்காகி காலை இழந்துட்டார். குடும்பத்தைக் காப்பாத்தும் பொறுப்பு எனக்கு வந்து நானும் வேலை தேடிக் கிளம்பிட்டேன். நம்ப ரெண்டு பேரும் கலந்துக்காத 'இன்டர்வியு'இல்லே. பதில் சொல்லாத கேள்வி இல்லே. ஆனா... வேலை தான் கிடைச்ச பாடில்லே!

ஆல்பர்ட்: என்னைக் கேட்டால் நாம பிளஸ் டுவுல சேராம எதாவது தொழில் கத்துக்கிட்டிருக்கலாம்.

இசக்கி: அதை இப்போ நினைச்சு என்னடா புண்ணியம்?

ஆல்பர்ட்: சரி, இன்னிக்கு நாம போற... கம்பெனியில, இன்டர்வியுவுல யார் வேணுமானாலும் கேள்வி கேட்பாங்களாம்... எப்படி வேணுமானாலும் கேள்வி கேட்பாங்களாம்!

இசக்கி: அதைப் பத்தி எனக்குக் கவலையே இல்லை. 'காமிக்ஸ்லிருந்து' கோலம் வரைக்கும் கரைச்சுக் குடிச்சு வச்சிருக்கேன்.

ஆல்பர்ட்: என்னுடைய வாழ்த்துக்கள்.

இசக்கி: நன்றி ஆல்பர்ட். உனக்கும் என் வாழ்த்துக்கள்.

(கண்ணப்பன் வருகிறான்)

கண்ணப்பன்: (வந்து கொண்டே) பழைய பேப்பர் விலைக்கு வாங்கறது. பேப்பர் இருக்கா...? பேப்பர்? பழைய பேப்பரேய்யா...?

இசக்கி: என்ன! மறுபடியும் கண்ணப்பனா! இந்தத் தொழில் எத்தனை நாளா?

கண்ணப்பன்: காலையில பேப்பர் போடறவேலை. அப்புறம் கோலப்பொடி 'டயம்' கிடைக்கறப்போ.. பழைய பேப்பர் வியாபாரம். கிலோவுக்கு ரெண்டு ரூபாய் கிடைக்கும். சரி...சரி... ரெண்டு பேரும் இன்டர்வியூவுக்குப் போய்க்கிட்டுயிருக்கிங்க... வாழ்த்துக்கள்... நான் வர்றேன்... (போகிறான்)

இசக்கி: இந்தக் கண்ணப்பன்கூட நம்பளோட எட்டாவது வரை படிச்சவன் தான். இவன் பண்ணாத வியாபாரமே இல்லே. தெருத் தெருவா என்னென்னவோ... வியாபாரம் பண்ணிக்கிட்டு அலையறான்.

ஆல்பர்ட்: இசக்கி, போதும். கண்ணப்பன்... பொன்னப்பன்... கதையெல்லாம் இப்போ நமக்குத் தேவையில்லாதது! வா.. போகலாம்.

காட்சி–3

(வீடு. மாலை நேரம்)


தோன்றுவோர்: இசக்கி அப்பா அம்மா, ஆல்பர்ட்... கண்ணப்பன் வருகிறான்.

கண்ணப்பன்: என்ன இசக்கி ரொம்பக் கவலையாயிருக்கே?

இசக்கி: கண்ணப்பா... நான் ராசியில்லாத ஆளு! நான் உப்பு விற்கப்போனால் மழை பெய்யறது. மாவு விற்கப் போனா. காத்தடிக்குது!

கண்ணப்பன்: ராசிங்கறதெல்லாம் நம்ப கையிலதான் இருக்கு. வெயில் காலத்துல ஐஸ்கிரீம் விற்கணும்; மழைக்காலத்துல சுக்குக்காப்பி விற்கணும். "We have to adjust with that moment in the situation"

இசக்கி: (வியப்புடன்) கண்ணப்பா.. உனக்கு ஆங்கிலம் தெரியுமா?



தயில மரம்

தயில மரத்தின் தோப்பே - அது
தழைக்கும் நல்ல வாய்ப்பே.
வெய்யிலைத் தாங்கக் கற்கும் - பெரு
வீரன் போல நிற்கும்!
தலையசைக்கும் சீராய் - மரங்கள்
தாமே நிற்கும் நேராய்!
இலைகள் அசைய வீசும் - காற்றில்
இழையும் தயில வாசம்!
உறையும் தயில மரமே - நின்று
ஓங்கும் அழகு பெறுமே!
தரையடித் தண்ணீரை - உறிஞ்சும்
தயில மரத்தின் சாரை!
பக்கவயல்களுக்கும் - நீர்
பற்றாக் குறையிருக்கும்
தக்க செய்தி புரிக - தம்பி
தயில மரத்தை யறிக!

- மின்னூர் சீனிவாசன்

கண்ணப்பன் : நான் தான் எட்டாவ தோட நிறுத்திட்டேனே? எங்க குடும்பம் ரொம்பப் பெரிசு! உழைச்சால்தான் சாப்பிட முடியும்கற நிலைமை. ஆனால், அதுக்காக அரசாங்க வேலையைத்தேடி நாம அலையக் கூடாது. வேலையை நம்ப கைக்குள்ள சிறைப்படுத்தி நாம்ப சொன்ன படி அதைக் கேட்க வைக்கணும்னு முடிவு பண்ணினேன். அதோட சொந்தக் கால்ல தான் நிக்கணும்னு உறுதி எடுத்தேன். முதலீடுக்கு வழி இல்லை. அதுதான்.... இப்படிக் கிடைக்கிற பொருளை வாங்கி... விற்க ஆரம்பிச்சேன்! பேப்பர் விற்பேன். பழைய பேப்பர் வாங்குவேன். விளம்பர நோட்டீஸ் தருவேன், போஸ்டர் ஒட்டு வேன், டேங்க் கிளீன் பண்ணுவேன், ரேஷன் வாங்குவேன், டெலிபோன் பில் கட்டுவேன், ரயில்-பஸ் ரிசர்வேஷன் பண்ணுவேன். எல்லாம் காசு வாங்கிக் கிட்டுத்தான். ஆனால் எல்லாம் திருடாம பொய் சொல்லாம, உழைக்கிற வேலை.

இசக்கி: (தழுதழுத்த குரலில்) கண்ணப்பா... நான் பத்தாவது பாஸ் பண்ணினவன். ஆனா உனக்கு இருக்குற தன்னம்பிக்கையில பாதிகூட எங்கிட்டே இல்லியே! நீ ஒரு இலட்சியவாதிங்கறதைப் புரிஞ்சுக்கிட்டேன்!

அப்பா: கண்ணப்பா... நீ பேசினதை எல்லாம் கேட்டுக்கிட்டுதான் இருந்தேன். இளைய சமுதாயத்திற்கு நீ ஒரு எடுத் துக்காட்டு! படிப்பு இல்லேங்கற ஒரு குறைதான்.

கண்ணப்பன்: அஞ்சல் வழிக் கல்வியில பத்தாவதை முடிச்சுட்டு இப்போ பிளஸ்டூ எழுதப் போறேன் சார். இருபத்தி நாலுமணி நேரமும் உழைச்சு சம்பாதிச்சு வாழ்க்கையை... வர்ற வருமானத்துக்குள்ளே சிக்கனமா... ஓட்டிக் கிட்டு இருக்கிறேன்! என் இரண்டு கைகளையும் நான் தூங்கற நேரம் தவிர ஓய்வாகவே இருக்க விட்டதில்லை. உழைப்புத்தான்.

அம்மா: தம்பி உன்னோட... முயற்சி, உழைப்பு... இதையெல்லாம் எப்படிப் பாராட்டுறதுன்னே தெரியலே.

கண்ணப்பன்: சார், வந்த காரியத்தை மறந்துட்டேனே. என்னோட வருமானத் துல தினமும் ஐந்துரூபாய் சேர்த்து வச்சேன்! அந்தத் தொகையைக் கொண்டு பள்ளிக்கூடத்துக்கு எதிர்த்தாப்போல ஒரு பெட்டிக் கடை ஆரம்பிக்கப்போறேன்! அவசியம் நீங்க எல்லாரும் ஆசி வழங் கணும்... (வணங்குகிறான்)

இசக்கி: கண்ணப்பா, என்னோட கல்வி எனக்குக் கற்றுத் தராத தன்நம்பிக் கையை இப்போ நீ கற்றுக் கொடுத்திட்டே!


(ஆல்பர்ட் வருதல்)


ஆல்பர்ட்: இசக்கி... கண்ணப்பன்... சொந்தமா கடை திறக்கப் போற செய்தியை நானும் கேள்விப்பட்டேன். எனது வாழ்த்துக்கள். எங்களோட கண் களையும் திறந்துட்டே! இது நாங்கள் படிக் காத பாடம். அதற்கும் நன்றி.

தந்தங்கள்

ஆழி


யானைகளில் இரண்டு பிரிவுகள் உள்ளன. ஒன்று ஆசிய யானை, மற்றொன்று ஆப்பிரிக்க யானை. ஆசிய யானைகளில், ஆண் யானைக்கு மட்டும் தந்தங்கள் உண்டு; பெண் யானைக்குக் கிடையாது. யானைத்தந்தம் சுமார் 1.5 மீட்டர் நீளம் இருக்கும். ஒரு ஜோடி தந்தங்களின் எடை சுமார் 34 கிலோ இருக்கும். ஆனாலும் ஒர் ஆசிய யானையின் தந்தங்கள் ஒவ்வொன்றும் 2.7 மீ. நீளமும் இரண்டின் எடை 70 கிலோவும் இருந்ததாகப் பதிவாகி இருக்கிறது.







ஆப்பிரிக்க யானைகளில், ஆண் யானைக்கும் பெண்யானைக்கும் தந்தங்கள் உண்டு. ஆப்பிரிக்க யானையின் தந்தங்கள் மிகப் பெரியவை. சுமார் 2 மீ. நீளம் இருக்கும். ஒரு ஜோடி எடை சுமார் 60 கிலோ இருக்கும். ஆனால், லண்டன் 'பிரிட்டிஷ் மியூசியத்தில் உள்ள ஒரு ஜோடி தந்தங்கள் ஒவ்வொன்றின் நீளம் 3.5 மீட்டர்கள். அடிப்பாகத்தின் சுற்றளவு 45 செ.மீ. இரண்டின் எடை 140 கிலோ!

ஆசிய யானைகளில், இலங்கை யானை என்று ஒரு பிரிவு இருக்கிறது. இதில் ஆண் யானைக்கும் தந்தம் கிடையாது, பெண் யானைக்கும் தந்தம் கிடையாது.







யானைக் குட்டிக்குத் தந்தம் முளைப்பது அதன் 3 முதல் 5 வயதுக்குள்தான்.



தந்தங்கள் சிறிது மஞ்சள் கலந்த வெள்ளை நிறமாக இருக்கும். ஆனால், ஆப்பிரிக்க யானைகளில் ஒரு சிலவற்றிற்குக் கறுப்பு நிறத் தந்தங்கள் உள்ளன. இவை மிகவும் அரிதானவை.



யானையின் மண்டையோடு மிகவும் இலேசானது. மண்டை எலும்புகள் உள் பக்கம் கூடாகவும், காற்று நிரம்பியதாகவும் இருக்கும். மண்டையோடு கனமாக இருந்தால் இவ்வளவு எடையுள்ள தந்தங்களை அதனால் தூக்கவே முடியாது!



சுமார் 8000 ஆண்டுகளுக்கு முன்பு வரை வாழ்ந்த 'மம்மத்' என்னும் யானைக்கும் தந்தங்கள் இருந்தன. இந்த 'மம்மத்' 4.5 மீட்டர் உயரம் இருந்தது. அதன் தந்தம் மேல் நோக்கிச் சுருண்டு இருக்கும். உடல் முழுவதும் உரோமங்கள் அடர்ந்து இருந்த இந்த மம்மத் இனம் அழிந்து விட்டது.





மம்மத் யானையின் தந்தம் ஒன்று இப்போது லண்டன் பிரிட்டிஷ் மியூசியத்தில் இருக்கிறது. நீளம் 4.5 மீட்டர். இது சைபீரியாவில் கிடைத்தது.



மம்மத் யானையின் ஒரு ஜோடித் தந்தங்களைச் சீனாவில் இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒரு ஜோடியின் எடை 300 கிலோ!


நீர்யானையின் கீழ்த்தாடையில், மேல் நோக்கிய இரண்டு சிறிய தந்தங்கள் இருக்கின்றன. இவை பற்களின் கூடுதலான வளர்ச்சிதான். அளவில் சிறியவையாக இருந்தாலும் யானையின் தந்தங்களைப் போலவே இவையும் விலைமதிப்புடையவையே.






வட துருவத்தில் உள்ள வால்ரஸ் என்னும் விலங்கிற்கும் தந்தங்கள் இருக்கின்றன. மேல் தாடையிலிருந்து கீழ் நோக்கி வளர்ந்தவை. சுமார் 1 மீட்டர் நீளமும் 4 கிலோ எடையும் இருக்கும். வால்ரஸ் இந்தத் தந்தங்களைப் பனிப் பாறைகளில் ஊன்றி மேலேறுகிறது; சிப்பி, நத்தை முதலியவற்றின் ஓடுகளைத் திறக்கிறது. வால்ரஸில் ஆணுக்கும் பெண்ணுக்கும் தந்தங்கள் இருக்கின்றன.

கஸ்தூரிமான் இமயமலைப் பகுதியில் காணப்படும். சுமார் 50 செ.மீ. உயரம் இருக்கும். கஸ்தூரி மான்களில் ஆணுக்கு மட்டுமே தந்தங்கள் உள்ளன. கீழ்நோக்கி வளர்ந்தவை 8 செ.மீ. நீளமுள்ள பற்கள் இவை.




கஸ்தூரி மானின் தந்தங்கள், பூமியில் புதைந்திருக்கும் கிழங்குகளைத் தோண்டித் தின்னவும் எதிரிகளுடன் சண்டையிடவும் உதவுகின்றன.






காட்டுப் பன்றிகளுக்கும் தந்தங்கள் உண்டு. இந்தத் தந்தங்களால் எதிரிகளைத் தாக்கும். ஆனால், பன்றியின் தந்தங்களுக்குப் பணமதிப்பு இல்லை.


'செலிப்ஸ்' என்னும் காட்டுப் பன்றியின் மூக்குப் பக்கம், மேலே குத்திட்டு வளர்ந்த கூர்மையான 4 தந்தங்கள் உள்ளன. மண்டை ஓட்டைப் பொத்துக்கொண்டு வளர்ந்தவை. முதல் ஜோடித் தந்தங்கள் மேல்தாடையில் முளைத்தவை. இரண்டாவது ஜோடித் தந்தங்கள் கீழ்த்தாடையில் முளைத்தவை. இந்தத் தந்தங்கள் சுமார் 30 செ.மீ. நீளம் வளரும்.



இரண்டு தந்தங்கள் உள்ள காட்டுப் பன்றிகள் அதிகம் இருக்கின்றன.



வட துருவப் பிரதேசங்களில் 'நார்வல்' என்னும் திமிங்கிலங்கள் இருக்கின்றன. 5 மீட்டர் நீளம் உள்ள திமிங்கிலங்களுக்கு 3 மீட்டர் நீளம் உள்ள ஒற்றைத் தந்தம் இருக்கும். இது திமிங்கிலத்தின் மேல் தாடையில், இடப் பக்கத்தில் வளர்ந்த ஒரு பல் தான். இது கூர்மையாகத் திருகிக் கொண்டு வளர்ந்திருக்கும். எதிரிகளைத் தாக்க இது பயன்படுகிறது. ஆண் நார்வல் திமிங்கிலத்திற்கு மட்டுமே இந்தத் தந்தம் உண்டு.



ஆண் நார்வல் திமிங்கிலக்குட்டிகளுக்குச் சில பற்கள் முளைக்கின்றன. ஆனால், திமிங்கிலம் வளர வளர, இந்த ஒரு பல்லைத் தவிர மற்றவை விழுந்து விடுகின்றன. இந்தத் திமிங்கிலத்தின் தந்தத்திற்கு உலக அளவில் மிகுந்த விலை மதிப்பு உண்டு.








தந்தத்தில் சிறந்த கலை நுட்பம் உள்ள சிற்பங்கள், பியானோ கட்டைகள், பில்லியர்ஸ் பந்துகள் முதலிய பொருள்கள் செய்யப்படுகின்றன. இந்தப் பொருள்கள் மதிப்பு மிக்கவை.

சின்ன விஷயம்!



அலுத்துக் கொண்டான் குமரன்.

"போம்மா... நான் போக முடியாது. போயும் போயும் செருப்பைப் போய் எடுத்துக்கிட்டு வரச் சொல்றியே?"

"ஏம்ப்பா. செருப்பை எடுத்து வரக் கூடாதா? அது தீண்டத் தகாத பொருளா?"

"அதில்லேம்மா... காலேஜில பிரின்சிபாலா இருக்கற அவரோட வீட்டுக்குப் போய் அதைக் கேட்க எனக்குத் தயக்கமா இருக்கு."

நடந்த விஷயம் இதுதான். குமரனும் அவனுடைய தாயும் வாடகைக்கு வீடு பார்க்கப் போனார்கள். அன்றைக்குக் கடைசியாக ஒரு வீட்டைப் பார்த்தார்கள். வீடு பிடித்திருந்தது. வசதியாக இருந்தது. வீட்டின் ஒரு பகுதி அவர்களுக்குப் போதும். வீட்டுக்குத் திரும்பி யோசித்தார்கள். வீடு நன்றாகத்தான் இருந்தது. அவர்கள் தரக்கூடிய வாடகைதான். இருந்தாலும் அது குமரனின் பள்ளியிலிருந்து சற்றுத் தொலைவில் தள்ளியிருந்தது. அதனால் வேறு வீடு பார்க்க முடிவு செய்தார்கள். அப்போதுதான் செருப்பை அந்த வீட்டிலேயே விட்டுவிட்டு வந்ததை அம்மா உணர்ந்தாள். அதை எடுத்து வரத்தான், அம்மா குமரனை ஏவினாள். அவன் இல்லாத காரணத்தையெல்லாம் கூறி சண்டித்தனம் செய்து கொண்டிருந்தான்.

"இதில் தயங்க எதுவும் இல்லை குமரா. நீ போய்க் கேட்டதுமே அவர்கள் கொடுத்திடுவாங்க. போய்யா... புதுச் செருப்பு."

"எப்படிம்மா புதுச் செருப்பு? அதை வாங்கித்தான் ஒரு வாரம் ஆயிடுச்சே? போகட்டும் விட்டுடு."

"நீ நாளைக்கு 'ஷூ' போட்டுக்கிட்டு பள்ளிக்குப் போயிடுவே. என் பாட்டை நினைச்சுப்பார். காய்கறிக்கடை மளிகைக் கடைக்குப் போகணும்.... மத்தியானத்துக்கு மேல போய் வாடகைக்கு வேற வீடு இருக்கான்னு பார்க்கணும்."

"ஒரு நடை சிரமத்தைப் பார்க்காமல் நீயே போய் வாங்கிட்டு வந்திடும்மா...."

"வெறுங்காலோட அவ்வளவு தூரம் என்னை நடக்கச் சொல்றியா? நீ மனசு வைச்சா மிதி வண்டியிலே போயிட்டு உடனே வந்திடலாமே?"

"நீ ஏம்மா நடந்து போகணும்? ஆட்டோவிலே போ...."

"பதினைஞ்சும் பதினைஞ்சும் முப்பது ஆகும். அதுக்கு புதுச் செருப்பே வாங்கிடுவேனே?"

"அதையேதான் நானும் சொல்றேன்."

பூதலூர் முத்து

"அப்பா இருந்தவரைக்கும் கஷ்டம் தெரியாம ஓட்டிட்டோம். இப்போ சின்னச் சின்ன செலவா இருந்தாலும் கவனமா இருக்கணும். கஞ்சத்தனம் தேவையில்லே. ஆனா நம்ம வரவுக்கேத்தபடி செலவு இருக்கணும். 'விரலுக்கேத்த வீக்கம்'னு பெரியவங்க சொல்லியிருக்காங்க. அதிலே நிறைய அர்த்தம் இருக்கு..."

அறிவுரை என்றாலே குமரனுக்கு அலர்ஜி.

"அப்போ ஒன்று பண்ணுவோம்மா. நீ பேசாம இரு. இன்னும் ரெண்டு நாள் பரீட்சை... அது முடிஞ்சதும் நானே போயிட்டு வர்றேன்."

குமரனின் தங்கை கீதா கேட்டாள். "அப்படின்னா அம்மா இந்த ரெண்டு நாளும் கல்லில்.. முள்ளில... அகத்தத்தில் நடக்கணும்கறியா? இந்த அரைமணி நேரம் உன் பரீட்சைக்கு இடைஞ்சலா?"


"நீ ஏன் கேட்க மாட்டே? உனக்கு என்ன தெரியும் என் நிலை? பரீட்சை முடிகிறவரை வெளி வேலை எதையும் வைச்சுக்கக் கூடாதுன்னு எங்க பள்ளியிலே சொல்லியிருக்காங்க."

"அப்போ இது வெளிவேலையா?"

"என்னைப் பொறுத்தவரை இது வீட்டு வேலையா இருந்தாலும் வெளியே போக வேண்டிய வேலையாச்சே? - சிரித்துக் கொண்டே போய் விட்டான் குமரன்.

அன்று மாலை,

" அம்மா " என்ற குரலோடு வீட்டுக்குத் திரும்பி குமரன்



புத்தகப் பையைக் கீழே தள்ளினான்.

"என்னப்பா?" அம்மாவின் குரலில் சோர்வு தெரிந்தது. படுக்கையில் இருந்து எழுந்து உட்கார்ந்தான்.

"அம்மா, வீடு வீடுன்னு நீ அலைய வேண்டாம். இன்னும் ஒரு மாசத்திலே தானே இந்த வீட்டைக் காலி செய்யணும்? அதுக்குள்ள பார்த்திடலாம். பரீட்சை முடிஞ்சதும்..."

'நீதானே? நல்லா பார்ப்பையே! உன்னைப் பத்தி எனக்கா தெரியாது? விட்டுட்டு வந்த செருப்பை எடுத்து வரக் கெஞ்சினேன். கேட்கலையே? இன்னமும் செருப்பு இல்லாமதானே நடக்கிறேன்? நீ போய் அலைஞ்சு திரிஞ்சு பார்க்கப் போறியா?' என்று கேட்க நினைத்தாள் அம்மா. ஆனல் கேட்கவில்லை. தன் மனம் புண்பட அவன் நடந்தாலும், அதைக் குத்திக் காட்டிப் பேசினால் அவன் மனம் புண்படுமே என்று அந்தத் தாயுள்ளம் நினைத்தது.

குமரன் விட்ட இடத்தில் தொடர்ந்தான்.

"அம்மா... உன் செருப்பைப் பத்திக் கவலைப்படாதே. நான் ஒரு ஏற்பாடு செய்திருக்கேன்."

"என்னப்பா ஏற்பாடு?" - வியப்போடு கேட்டாள் அம்மா.


"எங்க பள்ளி ஊழியரிடம் அந்த இடத்தைச் சொல்லி 'செருப்பை எடுத்து வா'ன்னு சொல்லியிருக்கேன். அஞ்சு ரூபா கொடுத்தா போதும்..."


அது சீதாவின் காதில் விழுந்தது.

"கோலப்புத்தகம் வாங்க அஞ்சு ரூபா குறையுது... அப்புறமா வாங்கலாம்னு அம்மா சொன்னாங்க. உனக்கு அஞ்சு ரூபாய்ன்னா சாதாரணமா இருக்கா?"

"அம்மா தர வேண்டாம். என்னோட காசிலே கொடுக்கறேன்."

"அப்படியா? அப்படியே எனக்கும் ஒரு





"ஏன சிங்கராஜா குஷியா இருக்காரு?"

"போஸ்ட்-கார்டுல புலி உருவத்தை எடுத்திட்டாங்களே!"

- சோமசேகர்

அஞ்சு ரூபா கொடுத்திடு..." என்றாள் கீதா, சிரித்துக் கொண்டே.

அப்போது வாசலில் ஸ்கூட்டர் வந்து நின்றது. கீதா எட்டிப் பார்த்தாள்.

"அம்மா.... யாரோ பெரிய ஆபீசர் மாதிரி இருக்கு!"

அம்மா எழுந்து வந்தாள்.

வந்தவரைப் பார்த்து வணக்கம் தெரிவித்து வரவேற்றாள்; உட்காரச் சொன்னாள். அவரும் வணக்கம் தெரிவித்தார். அமர்ந்தார்.

"யாராக இருக்கும்?" என்று குமரன் ஆர்வத்தோடு பார்த்தான்.

"குமரா... ஐயாவுக்கு வணக்கம் சொல். இவங்கதாம்ப்பா அந்த காலேஜ் பிரின்சிபால்... நாம் வீடு பார்க்கப் போனோமே அந்த வீட்டுக்குச் சொந்தக்காரர்."

குமரன் அன்றைக்கு அவரைப் பார்க்கவில்லை. மாடியறையில் இருந்த அவரை அம்மாதான் பார்த்துவிட்டு வந்தாள்.

அடுத்த ஆண்டு குமரன் கல்லூரிக்குப் போக வேண்டும். மனிதர் எப்படிப்பட்டவரோ என்ற சிந்தனையில் இருந்தான்.

அவர் ஸ்கூட்டரிலிருந்து ஓர் அட்டைப் பெட்டியை எடுத்து வந்தார்.

"அம்மா... அன்றைக்கு நீங்க வீடு பார்க்க வந்தப்போ உங்க செருப்பை மறதியா எங்க வீட்டிலேயே விட்டுட்டு வந்திட்டீங்க. யாராவது வருவாங்கன்னு பார்த்தேன். வரலே.... எங்க வீட்டுல விட்டதே மறந்திருக்குமோ, வேறு எங்கேயாது விட்டுட்டோம்னு நினைச்சு குழப்பமா இருக்கிங்களோன்னு அதை நானே எடுத்து வந்திட்டேன். இந்தாங்க."

பெட்டியைக் கொடுத்தார்.

அம்மா மெய்சிலிர்த்துப் போனாள். குமரன் வியப்பில் ஆழ்ந்து போனான். கீதாவின் உள்ளத்தில் இனம் புரியாத மலர்ச்சி. அனைவருக்கும் ஒரு மாமனிதரைச் சந்தித்த உணர்ச்சி!

வீடு பார்க்கச் சென்ற அன்றைக்கே அவர் ஒரு வித்தியாசமான மனிதராக நடந்து கொண்டார்.

"அம்மா, உங்க முகவரியைக் கொடுங்க.. வாடகைக்கு வேற ஏதாவது வீடு இருந்தாலும் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்" என்றார். அப்போதுதான் அம்மா முகவரியைக் கொடுத்தாள்.

"ஐயா... இந்தச் சின்ன விஷயத்துக்காக நீங்களே இப்படி சிரமப்பட்டு எடுத்து வந்திருக்க வேண்டாமே?" - அம்மாவின் குரலில் பணிவு மிளிர்ந்தது.

கீதா கொண்டு வந்த தேநீரை முக மலர்ச்சியோடு ஏற்றுக் கொண்டார் அவர்.

"ஒரு நாற்பது ரூபா செருப்பு எனக்குச் சின்ன விஷயமா இருக்கலாம். ஆனா அது உங்களுக்குப் பெரிய விஷயம். எனக்குச் சொந்தமில்லாத பொருள்னு நான் கவலைப் படாம இருக்கலாம். ஆனா உங்களுக்குச் சொந்தமான அதை இழந்திருக்கும் போது, உங்களுக்கு எவ்வளவு வருத்தமா இருக்கும்? நீங்க வருத்தப்படுவீங்களேன்னு நான் கவலைப் படும்போது இதே சின்ன விஷயம் பெரிய விஷயமாயிடுது இல்லையா? இது போல சின்னச் சின்ன விஷயங்கள்ல நாம எப்படி நடந்துக்கறோம்கறதைப் பொறுத்துத்தான் நம்ம மன வளர்ச்சி இருக்கும். சின்னக் குண்டூசி கூட பத்துத் தாளை இணைச்சு ஒரு உதவியைச் செய்யுதே? நாம உண்மையாகவே மனத்தளவில் பெரிய மனுஷங்கன்னா, சின்னச் சின்ன விஷயங்கள்ல கூட அக்கறை காட்டணும்... மற்றவர்களுக்கு உதவி செய்யணும்... வர்றேம்மா..."

அவருடைய அணுகுமுறை குமரனின் இதயத்தில் ஆழமாகப் பதிந்து அவனுடைய சிந்தனையில் புதிய கதவுகளைத் திறந்து விட்டது. பெரியவர் என்றால் உண்மையில் யார் பெரியவர் என்பதை அவருடைய செயல் பளிச்சென்ற மின்னல் கீற்றாக அவனுக்கு விளக்கிவிட்டது.

"அம்மா நான் ரொம்பச் சின்னவன்...." குமரனின் கண்கள் கலங்கின.

"இவர் மாதிரி நாலு பேரைச் சந்திச்சா எல்லாருமே பெரியவங்களா ஆகலாம்ப்பா..."

அவனை ஆதரவாக அணைத்துக் கொண்டாள் அம்மா. கீதாவும் கலந்து கொண்டாள். தூரத்தில் ஸ்கூட்டர் சீரான ஒலியோடு விரைந்தது.


கடிப்பது எந்த எறும்பு?

ரேவதி

மின்சாரத் தடங்கல். மிக்ஸியால் பயனில்லை என்பதால், அமுதா சட்னி அரைக்க அம்மிக்கு அருகே வந்தாள். அம்மியை அலம்பத் தூக்கியதுதான் தாமதம். அம்மியின் கீழேயிருந்து நூற்றுக்கணக்கிலான எறும்புகள், மொலுமொலுவென்று அவளுண்டைய கைகால்களில் ஏறிக் குறுகுறுத்தன.

"அம்மா! அப்பா!" என்று அமுதா கைகால்களைத் தட்டிக் கொண்டு குதித்தாள். அத்தனையும் பிள்ளையார் எறும்புகள்:

பள்ளிக்குக் கிளம்பும்போதுதான், முந்தின நாள் டிபன் பாக்ஸைத் தேய்க்கப் போடவில்லை என்பது அமுதாவின் நினைவுக்கு வந்தது. பையில் இருந்து எடுத்தாள். உப்புமாவுக்குத் தொட்டுக் கொள்ள வெல்லம் கொண்டு போயிருந்தாள். வெல்லத்திற்கு எறும்பு வராமல் இருக்குமா? மொய்த்துக் கிடந்தன. அத்தனையும் தலைபெருத்த சிவப்பு எறும்புகள். அமுதாவின் விரல்களைத் தேள் கொட்டுவதைப் போல் 'நறுக்'கென்று கடித்தன.



அமுதா அலறிக் கொண்டே கை கால்களை உதறினாள். கடித்த இடங்களை அவள் சொறிந்து கொள்ள, அந்த இடங்கள் தடித்துச் சிவப்பேறின.

"என்ன ஆச்சு அமுதா?" என்று கேட்டுக் கொண்டே வந்தார் அப்பா. அமுதா விளக்கினாள்.

"அம்மிக்குக் கீழே இருந்தவை கறுப்பு பிள்ளையார் எறும்புகள். பிள்ளையார் எறும்பு கடிக்காது."

"அப்போ சிவப்பு எறும்புகள் மட்டும் பயங்கரமா கடிச்சு கடுக்க வைக்குதே! ரெண்டும் எறும்புதானே?" என்றாள் அமுதா.

"எறும்புகளில் 5200 வகை இருக்கும்மா. அதில், பிள்ளையார் எறும்பு வகை மட்டும் தான் கடிக்காது. மற்றவை எல்லாமே கடிக்கும். கௌவிப் பிடிக்கக்கூடிய தாடைகள் இவைகளுக்கு உண்டு. அதோடு கௌவிப் பிடிச்சதும் இவை தங்கள் உடலின் அடிப் பாகத்தில் இருந்து ஒரு அமில திரவத்தைப் பீச்சுகின்றன. இதுதான், கடித்த இடத்தில் ஏற்படும் கடுப்புக்குக் காரணம்."

"எறும்புகள் இல்லாத இடமே இல்லை போல் இருக்கேப்பா?"

"ஆமாம். அதோட மண்ணுக்கு இயற்கை உரம் கிடைக்கச் செய்வதில் எறும்புகளுக்குப் பெரும் பங்கு உண்டு. பறவைகள் தின்றது போக விலங்குகளின் உடலை, இவையும் அழுக வைத்து துணுக்குகளாக்கி மக்கி மண்ணோடு கலக்க உதவுகின்றன. அதோடு, கூட்டு வாழ்க்கைக்கு எடுத்துக் காட்டு என்று காகத்தைத் தவறாகப் புகழ்கிறோமே... அந்தக் கூட்டு வாழ்க்கைக்கு உண்மையான எடுத்துக் காட்டு எறும்புகள்தான்."

"அதிசயமா இருக்கே!"

"எறும்புகள் உலகம் தனியான; வித்தியாசமான உலகம். இதில், தலைவியான ராணி எறும்புகளுக்குத்தான் பெருமை. ராஜா ஓரம் கட்டப்பட்டு விடுவார்.

ராணிக்கு முட்டை இட்டுத் தள்ளிக் கொண்டே இருப்பதுதான் வேலை. வேலைக்கார எறும்புகள், ராணி இடும் முட்டைகளைக் கொண்டு போய்ப் பாது காப்பாக வைத்து பொரிக்க வைக்கும்; ராணியின் தேவைகளை கவனிக்கும்; புதிய உணவு இருப்புகளைத் தேடிக் கண்டு பிடித்து அவைகளைப் புற்றுக்குள் கொண்டு வரும்; புதிய புற்றுகளைக் கட்டும். இவை தவிர போர் வீரர்கள் என்று ஓர் அணி உண்டு. இவை, புற்றுக்கு எவ்வித ஆபத்தும் வராமல் பாதுகாக்கும். புற்றின் எந்த ஒரு பகுதிக்காவது சேதம் ஏற்பட்டால் உடனே செப்ப னிட்டு மீண்டும் கட்டி விடும்."

அமுதா ஓடிப் போய் பூதக் கண்ணா டியை எடுத்து வந்தாள். சுவரில் ஜன்னலுக்குக் கீழே ஓடிய எறும்பு வரி சையைக் கவனித்தாள். போக ஒரு வரிசை, திரும்ப ஒரு வரிசை. ஆக இரண்டு வரிசை எறும்புகளும் ஒன்றின் மேல் ஒன்று மோதிக் கொள்ளாமல், வரிசையும் கலை யாமல் போகின்ற அழகைக் கண்டு வியந் தாள்.

"அப்பா, கொஞ்சம் கூட வரிசை பிச காமல், எத்தனை அழகாகப் போறது! இது எப்படி முடிகிறது?"



"எறும்புகளுக்கு, பல கூட்டுக் கண்களால் ஆன இரண்டு பெரிய கண்கள் முன்பக்கத்தில் துருத்திக் கொண்டிருக்கும். இருந்தும் இவை பார்வைக் குறைவு உள்ளவை. ஆனால் மிகவும் கூர்மையான மோப்ப சக்தி உண்டு. அதோடு பெண்களெல்லாம் பெருமைப் படக்கூடிய ஒரு சிறப்பு எறும்பு உலகுக்கு உண்டு. அது என்ன தெரியுமா?" என்று கேட்டு நிறுத்திய அப்பா, "ராஜா எறும்பையும் ஒருசில வெள்ளை எறும்புகளையும் தவிர, மீதி எல்லா எறும்புகளுமே பெண்கள்தான். முட்டைகளைப் பாதுகாத்து குஞ்சு பொரிக்க வைத்து வளர்த்தல், ராணி எறும்புகளின் தேவைகளைக் கவனித்தல், புதிய எறும்புக் காலனி அமைத்து பாதை போட்டு புற்று வைத்தல், விரிவாக்கல், உணவு தேடுதல், கொண்டு வருதல், பாதுகாத்தல், எறும்பு உலகைப் பாதுகாத்து அபாயங்களைத் தவிர்த்தல் என்று எல்லாப் பணிகளையும் செய்பவை முழுக்க முழுக்கப் பெண் எறும்புகளே!" என்றார்.


"அப்போ என்னைக் கடித்தது?"

"சந்தேகம் என்ன? பெண் எறும்பேதான். ஆண் எறும்புகளை நாம் பார்க்கும் வாய்ப்பே இல்லை."

"சில எறும்புகளுக்கு இறக்கை இருக்கே அப்பா? அவை தனி வகையா?"

"இல்லை இல்லை. ராணி எறும்பு ஆயிரக்கணக்கில் முட்டை இட்டபடி இருக்கும். அது பலவீனப்பட்டுப் போனாலோ, இல்லே புற்றுக் காலனி பராமரிக்க முடியாத அளவுக்குப் பெருகிப் போனாலோ, புதுக் காலனி அமைக்க முடிவு பண்ணணும். இதற்கு ஏற்றபடி ராணி எறும்பு ஹார்மோன்களை அதிகமாகச் சுரந்து சில முட்டைகளை இடும். இவைகளில் இருந்து வெளிவரும் எறும்புகள் சிறகுகளுடன் இருக்கும். இவைதான் ராணி, ராஜா எறும்புகள். இவை பறந்து போய், குடும்பம் நடத்தி, புது காலனியை அமைக்கும். ராணி நூற்றுக் கணக்கில் முட்டை இடும். இதே மாதிரியான சுற்று முறை (cyclying)தான். குடும்பம் நடத்தியதும் சிறகுகள் உதிர்ந்து விடும்."

"அப்போ எறும்புப் புற்றில் உள்ள காலனியைக் கவனிக்கும் ஆயிரக்கணக்



அறிவியல் உண்மைகள்

★ எறும்புகளில் இதுவரை கண்டறியப்பட்டுள்ளவை 8000. (இதே போல் இன்னொரு பங்கு அறியப்பட வேண்டியவை உள்ளன.) இவைகளில் 5000க்கு மேற்பட்டவை ஆப்பிரிக்காவில் உள்ளன. ஆப்பிரிக்காவை எறும்புகளின் சுரங்கம் எனலாம்.

★ பூச்சி இனங்களில் அறிவுமிக்கது எறும்பு தான். முட்டை, லார்வா, பியூப்பா, முதிர் பருவம் என்று நான்கு நிலைகள்.

★ ராஜா சுத்த சோம்பேறி. முட்டை இட ராணிக்கு உதவுவதுதான் இதன் வேலை. ராணி இலட்சக்கணக்கில் முட்டைகளை இட்டுத் தள்ளும். இவை எல்லாம் மலட்டுத்தன்மை கொண்ட பெண் எறும்புகள். எல்லாப் பணிகளையும் இவையே செய்யும்.

★ வெள்ளை எறும்புகளில், ராணியைத் தவிர எல்லாமே ஆண் எறும்புகள். இவை நம் கண்களில் அதிகம்படுவதில்லை.

★ வரிசை பிசகாமல் ஓட இவைகளில் சுரக்கும் சுரப்பிகள் உதவுகின்றன. உணர் கொம்புகளால் பேசிக் கொள்கின்றன.

★ இரண்டு கூட்டுக் கண்கள் இருந்தும் பார்வைக் குறைவு. ஆனால் கூரிய மோப்ப சக்தி..

★ ஒற்றுமைக்குப் பெயர் போனவை எறும்புகள். இரவில் கூட உறங்குவது இல்லை என்கிறார்கள் ஓர் அறிஞர் அணி. ஆனால் இதை எல்லா அறிஞர்களும் ஏற்கவில்லை.

★ சுறுசுறுப்பானவை. தங்கள் பணியைத் தடைசெய்யும் எதையும் இவை தாடைகளை அழுத்தி, அமிலத்தன்மை கொண்ட கடுக்கும் நீரைச் செலுத்தி 'சுரீர்' என்ற வலி உணர்வைக் கொடுக்கும். ஆப்பிரிக்காவில் உள்ள சில வகை எறும்புகள் கடித்தால் மரணம் கூட ஏற்படும்.

★ பிள்ளையார் எறும்புகள் 'சாரி வரிசை வைக்காது. ஒரே இடத்தில் பெருகி மொய்த்துக் கிடக்கும். தொட்டதும் மொலு மொலுவென்று ஏறி, குறுகுறுப்பை உண்டாக்கும். கடிக்காது. இவைகளின் அதி சுறுசுறுப்புக்குக் காரணம், இவைகளில் சுரக்கும் அதிக உணர்வு ஹார்மோன்களே. பிள்ளையாருக்கும் இவைகளுக்கும் சம்பந்தம் இல்லை!

★ புதிய முடிவுகளுக்கும், மறுப்புகளுக்கும் அதிக இடமளிப்பது எறும்பு உலக ஆராய்ச்சி! இது இன்னமும் தொடர்கிறது!

கான பெண் எறும்புகள் முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்காதா?"

"புத்திசாலித்தனமான கேள்விம்மா. எறும்புக் காலனியில் உள்ள இலட்சக் கணக்கான எறும்புகளில், ராஜாவையும் ராணியையும் தவிர மற்றவை மலட்டுத் தன்மை உடையவை. அதாவது முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும் சக்தி அற்ற பெண் எறும்புகள்."

டிபன் பாக்ஸில் சாதத்தைக் கொண்டு வந்த அம்மா, "கட்டெறும்பை வாயால ஊதி விட்டால் மறுபடி சரியாக அதே இடத்துக்கு வருதே! அது எப்படி?" என்று கேட்டாள்.

"எல்லா வகை எறும்புகளுக்கும் உடலின் அடிப்பாகத்தில் சுரப்பிகள் உண்டு. வரிசை பிசகாமல் இவை போவதற்கு இந்தச் சுரப்பிகளில் இருந்து சொரியும் நீரே காரணம். ஏதாவது ஒரு தடை, அல்லது எதிர்ப்பு வரும் போது இவற்றின் சுரக்கும் அளவு இயற்கையாகவே அதிகரிக்கும். கட்டெறும்பை ஊதிப் பின்னுக்குத் தள்ளியதும், அது பின்னுக்கு நகரும் போதே இதன் சுரப்பி நீர் கால்களின் வழியே தரையில் விழுந்து விடுகிறது. அதைப் பார்த்துக் கொண்டே, ஊதித் தள்ளப்பட்ட இடத்திற்கு இவை உடனே வந்து விடுகின்றன" என்றார் அப்பா.

"சில நேரம் இரண்டு எறும்புகள் எதிர் எதிரே நின்று முட்டிக் கொள்கின்றதே அப்பா. அது ஏன்?"

"எறும்புகளுக்கு, தலைக்கு முன்னால் மீசை போன்ற உணர்கொம்புகள் இருக்கின்றன. இல்லையா? இவைகளை அசைத்து எறும்புகள் ஒன்றுக்கொன்று பேசிக் கொள்கின்றன, தந்தி மொழி 'மோர்ஸ்' மாதிரி என்று வைத்துக் கொள்ளேன்."


திடீரென்று குனிந்து காலைப் பிடித்துக் கொண்ட அமுதா, "ஐயோ! கால்ல எறும்பு கடிக்குது" என்று துடித்தாள்.

"எறும்பு கடிக்கிறான்னு சொல்லும்மா" என்றார் அப்பா.

வலியை மறந்து அமுதாவும் சிரித்தாள்.




* பேருந்து என்பதைக் குறிக்கும் 'பஸ்' என்ற ஆங்கிலச் சொல் இந்திதானே? – வெ. சின்னசாமி, கோபி. 2.




இந்திச் சொல்லான 'பஸ்', போதும் என்பதைக் குறிக்கும். பேருந்து என்று பொருள்படும் 'பஸ்'ஸுக்கும் இதற்கும் தொடர்பே இல்லை. பேருந்து 'பஸ்'ஸுக்கான ஆங்கில மூலம், ஆம்னிபஸ் (OMNI BUS) என்ற லேட்டின் சொல்லாகும். இதன் திரிபே 'பஸ்' என்ற ஆங்கிலச் சொல்லாக வடிவெடுத்துள்ளது.

* முதல் மோட்டார் கார் பந்தயம் எந்த நாட்டில் நடந்தது? – வாத. தலீத் முகம்மது, மேட்டுப்பாளையம்.



முதலாவது மோட்டார் கார் பந்தயம் 1985ஆம் ஆண்டு பாரீசில் நடைபெற்றது. பந்தயம் பாரீசுக்கும் போர்டியாக்ஸ் (BORDEAUX) என்ற நகருக்கும் இடையே.

* எல்லா நாகப் பாம்புகளின் படத்திலும் ஒரே மாதிரியான வளைந்த நாமம்தான் இருக்குமா? – சி. யோகானந்த், பில்லூர்.



நாகங்களில் பல வகைகள் உள்ளன. எல்லா நாகப் பாம்புகளின் படங்களிலும் இந்த வளைந்த நாமம் இருக்கும். ஆனால் அதன் கீழ் உள்ள கோட்டில்தான் சில மாற்றம் உண்டு.

* நம்ம ஊர் சபரிமலை ஐயப்பன் கோவிலுக்குப் பெண்கள் போகக் கூடாது என்கிறார்களே, இதே போல் மற்ற மதத்தினர் பெண்களுக்குத் தடை விதித்துள்ள புண்ணியத்தலம் ஏதாவது இருக்கிறதா? – தா. தெய்வானை, தூத்துக்குடி.

சபரிமலைக்குக் கூட 7 வயதுக்கு உட்பட்ட, 55 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் அனுமதிக்கப்படுகின்றனர். மாசிடோனியாவில் ஏதோஸ் என்ற ஒரு புனிதமான குன்று உள்ளது. புனித கன்னி மேரியே இந்த மலையில் தங்கியிருந்ததாகக் கருதப்படுவதால், கன்னிப் பெண்களை மட்டும் இதில் யாத்திரை செய்ய அனுமதிப்பதில்லையாம்!


* இப்பொழுது நாம் பயன்படுத்தும்

வேகுவம் ஃபிளாஸ்க்கைக் கண்டுபிடித்தவர் யார்? ஜுலே வியோஸ் (JULES VIOLLE) என்று என் புத்தகத்தில் இருக்கிறது. என் நண்பன் வைத்துள்ள புத்தகத்தில் சர் ஜேம்ஸ் டேவர் என்று இருக்கிறது. எது சரி? – ஜேசுதாசன் எட்மண்ட், பாளை.



வேக்குவம் ஃபிளாஸ்கை வடிவமைத்த பெருமைக்கு உரியவர் பிரான்சைச் சேர்ந்த JULES VIOLLE. ஆண்டு 1882. இந்த ஃபிளாஸ்க்கை அவர் தன் ஆராய்ச்சிக் கூடத்தின் தேவைக்காக வடிவமைத்தார். இதில் பாதரசப் பூச்சு கூட இருக்கவில்லை. இரண்டு கண்ணாடிச் சுவர்களுக்கு இடையே வெற்றிடம் வைத்துத் தயாரிக்கப்பட்டது அது. அதற்கு மேல் அதில் எதுவும் இருக்கவில்லை. அவர் அதை மேம்படுத்தி நவீனமாக்கவும் முயற்சிக்கவும் இல்லை. எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு SIR JAMES DAWAR தான் 1890-ல் நாம் இப்பொழுது காணும் மெர்குரி தடப்பட்ட வேக்குவம் பிளாஸ்கைச் செய்தார். பதிவுசெய்யப்பட்டு 1902 ஆம் ஆண்டு இந்த பிளாஸ்க் REINHOLD BURGER கம்பெனியில் விற்பனைக்கு வழங்கப்பட்டது. இந்த பர்ஜர் கம்பெனி வைத்த பெயரே தெர்மாஸ் ஃபிளாஸ்க். எனவே, ஃபிளாஸ்கை அறிமுகப்படுத்திய பெருமைக்கு JULES VIOLLE என்றும், சிரமைத்து வடிவமைத்த பெருமை JAMES DEWAR என்றும் கொள்ளலாம்.


• காந்தப் புலன் என்பது எல்லாக் கிரகங்களிலும் கண்டிப்பாக இருக்கிறதா? – தா. சபாபதி, சத்தியமங்கலம்.





சுக்கிரனைத் தவிர சூரியமண்டலத்தில் உள்ள எல்லாக் கிரகங்களுக்கும் காந்த மண்டலம் உள்

• பதினெட்டு வயதானவர்களுக்கு இந்தியாவில் ஓட்டுரிமை இருப்பதைப் போல், இதைவிடக் குறைந்த வயதுள்ளவர்களுக்கு எந்த நாட்டிலாவது ஓட்டுரிமை இருக்கிறதா? – தா. ஸ்டெல்லா, சிவகங்கை.




பிரேசில் நாட்டில் 16 வயது நிறைந்தவர்களுக்கு ஓட்டுரிமை உண்டு.

• எல்லாக் கோள்களில் இருந்து பார்த்தாலும் வானம் நீலமாகத்தான் தெரியுமா? – மோ. பெரியசாமி, பொன்மலை.




அப்படி இல்லை. செவ்வாய்க் கோளில் இருந்து பார்த்தால் ஆரஞ்சு வண்ண வானத்தை சில நேரங்களில் காணலாம்.

• சிறுவர்களுக்கு என்று தனியான நிகழ்ச்சிகள் வானொலி ஒலிபரப்பில் எப்பொழுது சேர்க்கப்பட்டது? – சா. அடைக்கலம், கோட்டையூர்.



BUDA PESTH-ல் 1893 ஜூன் மாதம் தொடங்கப்பட்ட தனியார் ஒலிபரப்பு நிகழ்ச்சிகளில் குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகளும் சேர்க்கப்பட்டன. இதன் பெயர் TELEFON HIRMONDO. இதில்தான் விளம்பரதாரர்களின் ஆதரவுடன் முதல் குழந்தைகளுக்கான நிகழ்ச்சி ஒலிபரப் பப்பட்டது. இதில் ஆடல், பாடல், கதை கூறல் எல்லாம் இருந்தன.


• பாம்புக்கு எத்தனை நுரையீரல்கள் உண்டு? – வா. தியாகராசன், விழுப்புரம்.



பாம்புக்கு நம்மைப் போல் இரண்டு நுரையீரல்கள் கிடையாது. ஒரே ஒரு நுரையீரல்தான்.

• ரேடியோ அலைகளின் வேகம் எவ்வளவு? – தூ. மார்டின், விருதுநகர்.


ROAIO WAVES எனப்படும் ரேடியோ அலைகளின் வேகம் ஒரு செகண்டுக்கு 300,000 கி.மீ.! இதைவிட வேகமான ஒலி அலைகளைக் கண்டுபிடிக்கும் சாத்தியக் கூறு ..கள் இருப்பதாக அறிவியல் அறிஞர்கள் கூறுகிறார்கள்.



• ஐரோப்பாவுக்கு, அந்தப் பெயர் எப்படிச் சூ..ட்டப்பட்டது? – சி. பாண்டி முத்து, திரு. ..கலம்.


EUROPA என்ற இளவரசியின் பெயரை வைத்து சூட்டப்பட்டதே இந்த ஐரோப்பா கண்டம்.

• நாய்களுக்கு நிறவேற்றுமை தெரியாது என்பது உண்மைதானா? – வா. துரைக்கண்ணு, திருத்துறைப்பூண்டி.



ஆமாம். நாய்கள் நிறக் குருடு! (COLOUR BLIND) அதோடு அவை கிட்டப் பார்வைக் குறை உள்ளவையும் கூட! ஆனால் மோப்ப சக்தியும் நன்றி உணர்வும் வியப்பில் ஆழ்த்துபவை ஆயிற்றே?

• தேயிலையில் ஏதாவது சத்து இருக்கிறதா? – கரு. சுகந்தி, திருச்சி – 2.




தேயிலையில் வைட்டமின் ஏ சத்து இருக்கிறது.

• WALL OF TEN THOUSAND என்பது என்ன? அது எங்கே இருக்கிறது? – வெ. குட்டிப் பிள்ளை, மணியாச்சி.

சீனப்பெருஞ்சுவர் என்று நாம் குறிப்பிடும் அந்த உலக அதிசயத்தின் ஒரிஜினல் பெயர்தான் இது!

• தமிழில் எழுதப்பட்ட முதல் வரலாற்று நாவல் எது? இதை யார் எழுதினார்கள்? – கனக. கணேஷ் ராஜா, வள்ளவத்தை.

நாயக்க மன்னர்களின் காலத்தை நிலைக்களமாக வைத்து எழுதப்பட்ட 'மோகனாங்கி' என்ற நாவலே, தமிழில் வெளிவந்த முதல் வரலாற்று நாவல். வெளியான ஆண்டு 1865. இதை எழுதியவர் இலங்கையைச் சேர்ந்த தி. க. சரவணமுத்துப் பிள்ளை என்ற பெரியார். உங்களுக்குப் பெருமைதானே?



தேன் சிட்டு

சிட்டு சிறிய சிட்டு – பூவில்
தேனை உண்ணும் சிட்டு!
பட்டு மேனிச்சிட்டு – எங்கும்
பறந்து திரியும் சிட்டு!

மொட்டு கண்டால் விட்டு – நன்கு
முகிழ்த்த மலரைத் தொட்டு
சொட்டு தேனின் சொட்டுத் –
தேடித்
தொடர்ந்து பறக்கும் சிட்டு!

– - திட்டக்குடி முத்துமுருகன்


• எல்லா கிரகங்களும் சூரியனை ஒரே திசையில்தான் சுற்றி வருகின்றனவா? – தா. பட்டாபி, கடலூர் - 1.

இல்லை. வெள்ளி, யுரானஸ் ஆகிய இரு கோள்கள் மட்டும் சூரியனை எதிர்த் திசையில் சுற்றி வருகின்றன!

• சென்னையில் இயங்கி வந்த குழந்தை எழுத்தாளர் சங்கம், இப்பொழுது சென்னையில் இல்லையா? பாண்டிச்சேரியிலா இயங்கி வருகிறது? – அ.க. நிஜாமுதீன், செஞ்சி - 2.

சென்னையில் உள்ள குழந்தை எழுத்தாளர் சங்கம் இன்னமும் சென்னையில்தான் இயங்கி வருகிறது. திரு. நெ.சி. தெய்வசிகாமணி அவர்களின் மறைவுக்குப் பின் இப்பொழுது 'சௌந்தர்' என்பவர் (ஆசிரியர் : அழகர் சோலை) தலைவராக உள்ளார். அண்மையில் கூட இச் சங்கம் குழந்தைகள் தினத்தை நவம்பர் 29-ஆம் நாள் தமிழக சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் கொண்டாடியது. நாடகத்திற்கான ஏவிஎம் தங்கப் பதக்கம் திரு. பூவை அமுதனுக்கும், வெள்ளிப் பதக்கம் திரு ஜானகி மணாளனுக்கும், அறிவியலுக்கான ஏவி.எம். வெள்ளிப் பதக்கம் புதுவை பரிதி இரா. வெங்கடேசனுக்கும், செல்லப்பன் நினைவுப் பரிசுகள். பூதலூர் முத்துவுக்கும் செல்வி. தா. ஜானகிக்கும், எல்லப்பா ரங்கம்மாள் பரிசு ஆர். பிரபாகர் தவே, சுகுமாரனுக்கும், பார்க்டௌன் பெனிபிண்ட் பண்ட் பரிசு காரைக்கால் சா. நசீமா பானுவுக்கும், புதுவை. தேவி. திருவளவனுக்கும் மெட்டாலிக் காம்ப்பௌண்ட்ஸ் பரிசு கே. சு. சுந்தர பாண்டியன் (தேவகோட்டை), எஸ். ரீனா ஆகியோருக்கும் வழங்கப்பட்டன.

புதுவையில் உள்ளது, புதுவை குழந்தை எழுத்தாளர் சங்கம். புதுவை அரசு ஆண்டு தோறும் வழங்கும் குழந்தை இலக்கியப் பரிசான ரூபாய் ஐயாயிரம் இந்த ஆண்டு, புதுவை குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் செயலாளரான பரிதி. ஆர். வெங்கடேசனுக்குக் கிடைத்துள்ளது. பரிசு பெற்றவர்களில் பலர் கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவர்கள்



தபால்காரர் ஆகப் போறேன்!

சொன்னால் எல்லாரும் சிரிப்பீர்கள். பரவாயில்லை. நம்மைப் பார்த்துச் சிரித்து, மகிழ்ச்சியடையறாங்களே என்று நானும் பெருமைப்படறேன்.

உங்களுக்கு எல்லாம் நண்பர்கள் இருக்காங்க. எனக்கும் சிறுவர், சிறுமின்னு நண்பர்கள் இருக்காங்க. ஆனால் அவர்களை நேசிக்கும் அதே நேரத்தில், நான் இன்னொரு நபரையும் அதிகமாக நேசிக்கிறேன். அவர் யார் தெரியுமா? அவர்தான் தபால் பெட்டி! சிரியுங்களேன்? நான் கோபப்பட மாட்டேன்.

தபால் பெட்டியை அவர் இவர் என்று உயர்திணையாகச் சொல்லலாமா என்று உங்களில் எவராவது கேட்கலாம். இது இலக்கண அளவில் மதிப்பிடுவது அல்ல. அறிவுபூர்வமாகவும் மதிப்பிடக் கூடியது அல்ல. உணர்வுபூர்வமாக மதிப்பிட வேண்டியது.

எங்கள் வீட்டு வாசல் ஜன்னலில் ஒரு சின்ன தபால் பெட்டி கட்டப்பட்டிருக்கு. கொஞ்ச நாட்களுக்கு முன்பாகத்தான் கொண்டு வந்து கட்டிவிட்டுப் போனாங்க. அழகான தபால் பெட்டி. சிவப்பு நிறம். வாயைத் திறந்து வைத்துக் கொண்டு எப்போதும் சிரிக்கிற மாதிரி இருக்கிறது. வயிறை மூடிச் சாத்தி அடைத்து, பூட்டுத் தொங்குகிறது. தினமும் ரெண்டு தடவை வயிறைத் திறந்து தபால்களை எடுத்துட்டுப் போறாங்க. 'காலை மணி 9.30 மாலை மணி 3.15' என்று சின்ன கறுப்புத் தகடுகளில் வெள்ளைப் பெயிண்ட்டால் எழுதி வயிறின் மேல் வச்சுட்டுப் போறாங்க. அந்த நேரத்துக்குள் உங்கள் தபால்களை என்னுள் போட்டு விடுங்கள்னு தபால் பெட்டி சொல்றது. பின்கோடு எண்ணைச் சொல்றது.

இது சின்ன, குட்டித் தபால் பெட்டி. அஞ்சலக வாசல்லே பெரிய தபால்

திருவாழத்தான்



"ஏண்டா, எறும்புக்குப் போய் பால் வைக்கறே?"

"அது பிள்ளையார் எறும்புடா!"

- பா. ஜெயக்குமார்

பெட்டி வச்சிருக்காங்க. கம்பீரமா, ஜவான் போல அது நிக்கறது. தலையிலே தொப்பி மாதிரி வட்டத் தகடு. இந்தக் குட்டி தபால் பெட்டியும் பெரிசா வளர்ந்தால், அப்படித்தான் இருக்கும். வித்தியாசம் என்னன்னா, குட்டி தபால் பெட்டி தூளியில் இரு கைகளையும் மாட்டிக் கொண்டு தொங்கற குழந்தை மாதிரி என் வீட்டு வாசல் ஜன்னலில் இருக்குது. அஞ்சலக வாசல்லே இருக்கும் பெரிய தபால் பெட்டி பெரிய மனிதனாக, வளர்ந்த ஆளாக, ஜவானாக அட்டென்ஷன்லே தன் கால்லேயே நிக்குது.

இன்னொருவித தபால் பெட்டியும் இப்பப் புழக்கத்துக்கு வந்துக்கிட்டு இருக்கு. பதினஞ்சு சென்டிமீட்டர் விட்டத்தோடு கூடிய அரை மீட்டர் நீள குழாயை நிக்க வச்சு அது மேலே குட்டி வீடு போல அது இருக்கு. எனக்கு என்னவோ அந்தத் தபால் பெட்டி பேரில் அத்தனை நட்பு உண்டாகல்லே. இந்த பழங்கால சிவப்புத் தபால் பெட்டிதான் எனக்குப் பிடிச்சிருக்கு.

வாசல்லே நின்னு நான் பார்த்துக்கிட்டு இருப்பேன். ஒவ்வொருவரா, அவரவர்கள் வசதிப்படி வந்து என் வீட்டு வாசல் ஜன்னல்லே கட்டி இருக்கற தபால் பெட்டிலே கடிதங்களைப் போட்டு விட்டுப் போவாங்க. ஆண்கள் வருவார்கள், பெண்கள் வருவார்கள், முதியோர் வருவாங்க, சிறுவர், சிறுமியர் வருவாங்க. ஒரு சமயம் ஒரு சின்னப் பொண்ணு ஒரு கார்டை எடுத்திட்டு வந்தது. அவளாலே எட்டி அந்தக் கார்டைப் பெட்டியுள் போட முடியல்லே. எம்பி எம்பிப் பார்த்தாள். ஊஹூம். நான்தான் போயி, அவள் கையிலிருந்து அந்தக் கார்டை வாங்கி பெட்டிலே போட்டேன். அவள் 'தாங்க்ஸ்' சொன்னாள். ஏதோ என்னால் ஆன உதவி. இப்படி உதவி செய்தால், மனசு ரொம்ப சந்தோஷப்படுது.

யாரும் பக்கத்துலே இல்லாத நேரங்களில் நான் என் வீட்டுத் தபால் பெட்டி கூடப் பேசுவேன். சிரிக்கிறீர்களா? உங்கள் வீட்டு வாசல் ஜன்னலில் இப்படி ஒரு சின்ன தபால் பெட்டி கட்டப்பட்டிருந்தால், நீங்களும் என்னைப் போல அதோடு பேசப் பழகி இருப்பீங்க. இதுலே சிரிக்கறதுக்கு ஏதும் இல்லை.

"இன்னிக்கு எப்படி இருக்கே?" - தபால் பெட்டியிடம் கேட்பேன்.

அது பதில் சொல்லாது. ஆனால் சொல்ற மாதிரி நான் நினைச்சுப்பேன்.

"நல்லாத்தான் இருக்கேன்."

"சாப்பிட்டியா?"

"ஓ...! இதோ வயிறு கனமா இருக்கே?"

"என்ன சாப்பிட்டே?"

"அம்பத்தஞ்சு கார்டு, ஏழு கவர், ரெண்டு புக் போஸ்ட் அவ்வளவுதான்."

"இதையா கனம்னு சொல்றே?"

"சாதாரணமா நான் இருபத்தஞ்சு கார்டு, அஞ்சு கவர், ஒரு புக் போஸ்ட் தான் தாங்குவேன். அதுக்கு மேலேன்னா, ஓவர் லோடுதான்."

"காலைலே என்ன சாப்பிட்டே?"

"காலைலேயா?" - தபால் பெட்டி யோசித்தது. "ஞாபகமில்லை" என்றது.

இப்படித்தான் இருக்கும் எங்கள் உரையாடல்.

இந்தத் தபால் பெட்டிக்கு நூறு கைகள்! வியப்பாக இருக்கிறதா? அத்தனை கைகளுக்கும் பத்து கிலோ மீட்டர் நூறு கிலோ மீட்டர், ஆயிரம் கிலோ மீட்டர் நீளம்! இன்னும் ஆச்சர்யமாக இருக்கிறதா? தான் வாங்கிக் கொள்ளும் தபால் அனைத்தையும் அந்த அந்த ஊர்களில் கொடுத்துவிடும். இந்தச் சின்னத் தபால் பெட்டிக்கு அத்தனை நீளக்

கைகளா என்று இருக்கும் எனக்கு.

என் ஆசிரியை ஒருநாள், "படித்துப் பட்டம் பெற்ற பிறகு நீங்கள் ஒவ்வொருவரும் என்ன வேலைக்குச் செல்ல விரும்புகிறீர்கள்?" என்று ஒரு கேள்வி கேட்டார்.

இஞ்சினீயர் டாக்டர், வக்கீல், பைலட் என்று ஒவ்வொருவரும் ஒவ்வொன்று கூறினார்கள். என் முறை வந்தது. "தபால்காரர் ஆகப் போறேன், மிஸ்!" என்றேன்.

வகுப்பே சிரித்தது. அடக்கினார் ஆசிரியை.

"அவன் சொன்னதுலே சிரிப்புக்கு என்ன இருக்கு? எல்லாரையும் விட அவன்தான் அழகான பதிலைச் சொல்லி இருக்கிறான். தபால்காரர் என்பவர் நம்மிடம் நாள்தோறும் பழகுகிறவர். நமது தாய் தந்தையர், உற்றார், உறவினர், நண்பர்கள், இவர்களிடமிருந்து வரும் கடிதங்களை எல்லாம் நமக்குக் கொண்டு வந்து தருகிறவர். நாம் அவைகளைப் படித்து மகிழ்கிறோம். கடிதங்கள் மூலமாக நம் அப்பா, அம்மா, சொந்தக்காரர்கள், நண்பர்கள் நம்முடன் பேசுகிறார்கள். அப்படி நமக்காகப் பணி செய்யும் தபால்காரர்களை நாம் நேசிக்க வேண்டும். அந்த வேலைக்குச் செல்ல விரும்புகிறேன் என்று சொன்ன ராமு உண்மையிலேயே பண்பு உள்ளவன். அவனைப் பாராட்டும் விதமாக நாம் கைதட்டுவோம்" என்றார் ஆசிரியை.

கை தட்டினார்கள். எனக்கு மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருந்தது. என் வீட்டு ஜன்னலில் கட்டப்பட்டிருக்கும் அந்தச் சின்ன தபால் பெட்டியை நன்றியுடன் நினைத்துக் கொண்டேன். அது தானே எனக்கு இப்படி ஒரு பாராட்டை வாங்கிக் கொடுத்திருக்கு? என்ன மறுபடி சிரிப்பா? உங்களை மாற்றவே முடியாது!



பி.ஆர். பார்த்தசாரதி

தூக்க் தாசன்!


மூவாநூர் கிராமத்தில் மூக்கன் என்ற வண்டியோட்டி இருந்தான். மகா சோம்பேறி. உரித்த வாழைப்பழ சோம்பேறி என்பார்களே, அவர்களையும் கூட மிஞ்சுவான். இலையில் சாதம் போட்டால் "யாராவது பிசைந்து வைத்தால் நல்லது" என்பான். அப்படியாராவது சரியென்று சாதத்தைப் பிசைந்து வைத்தால் "யாராவது ஊட்டி விடுகளேன்?" என்று கேட்பான். அந்த வகையிலான படு சோம்பேறி!


வாரா வாரம் பக்கத்து ஊரில் செவ்வாய்க் கிழமை சந்தை நடக்கும். கிராமத்தில் விளைந்த பயிர்களான கரும்பு - காய்கறிகள், புளி பருப்பு வகைகளை எல்லோரும் சந்தையில் விற்றுவிட வருவார்கள். கிராமத்திலிருந்து பத்து வண்டிகள் போல் சந்தைக்குப் போய்வரும். மூக்கனும் சந்தைக்குப் போவான். ஆனால், போகும் போதும் சரி, திரும்ப வரும் போதும் சரி, தன் வண்டியை கடைசியாகவே ஓட்டி வருவான். காரணம் தூக்கத்தில் உள்ள சுகம்! அவன் சோம்பேறி மட்டும் அல்ல - சரியான ஒன்னாம் நெம்பர் தூங்கு மூஞ்சியும் கூட! கடைசி வண்டியாகப் போனால் மாட்டை ஓட்டவே வேண்டாம். முன்னால் போகும் வண்டிகளோடு மாடும் வண்டியைத் தானாக ஒழுங்காக இழுத்துப் போகும் - தான் நிம்மதியாகத் தூங்கி வரலாம் என்பதே அவன் எண்ணம்.

"வண்டி ஓட்டும் போது விழிப்புணர்ச்சி வேண்டும். கடைசி வண்டியாக இருந்து தூங்கி வருவது ஆபத்தில் முடியும்" என்று பெரியவர்கள் எச்சரித்ததை மூக்கன் பொருட்படுத்தவே இல்லை.

அன்று செவ்வாய் கிழமை. பக்கத்து ஊரான மன்னார்குடியில் வாரச் சந்தை. வழக்கம் போல் மூக்கனின் கிராமத்திலிருந்து பத்து வண்டிகள் சந்தைக்குப் புறப்பட்டன. மூக்கனும் போனான். எப்போதும் போல் மூக்கனதுதான் கடைசி வண்டி. இஷ்டத்துக்கு நன்றாகத் தூங்கிக் கொண்டு வந்தான்.

மூக்கன் உட்பட பத்து வண்டிக்காரர்களும் தாங்கள் கொண்டு போனவற்றை விற்று ஆயிரக்கணக்கான பணத்துடன் ஊர் திரும்பிக் கொண்டிருந்தனர். மணி ஏழு. நன்கு இருட்டி விட்டது. வழக்கம் போல் மூக்கன் வண்டிதான் கடைசி வண்டி.





எல்லா வண்டிகளும் முன்னால் செல்ல மூக்கனின் வண்டியும் கடைசியில் ஆடி ஆடிச் சென்றது. சந்தையில் இருந்து புறபடும் போதே அவன் தூங்க ஆரம்பித்துவிட்டான். போகப் போக வண்டி ஆட்டத்தில் சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தான். அவனுக்குத்தான் இது பழக்கமானதாயிற்றே?

திடீரென்று நாலைந்து முரட்டுக் கரங்கள் மூக்கனின் தோளில் - உடம்பில் தட்டி அவனை எழுப்பின. திடுக்கிட்டு விழித்த மூக்கன் முகமூடி போட்டுக் கொண்டிருந்தவர்களைப் பார்த்து நடு நடுங்கினான். "நீங்கள் யார்?" ஏன் என்னைத் தூக்கத்திலிருந்து எழுப்பினீர்கள்?" என்று கேட்டான்.

"உங்... கத்தாதே" என்று ஒருவன் மூக்கனின் வாயைப் பொத்தினான்.

"உம்.... இன்று சந்தையில் சரக்கு விற்ற எல்லாப் பணத்தையும் எடு" என்று ஒருவன் கத்தியைக் காட்டி மிரட்டினான்.

பயந்து நடுங்கிய மூக்கன், அன்றுதான் சம்பாதித்த ஆயிரத்து ஐநூறு ரூபாயையும் அவர்களிடம் கொடுத்தான்.

அதைப் பெற்றுக் கொண்ட அவர்களின் தலைவன் போல் இருந்தவன், "இவன்தான் எப்பவும் கடைசியா வருவான்கறது எனக்குத் தெரியும். இவன் வண்டிதான் தூக்கப் பிரியன் ஆச்சே? இவனுடைய தூக்க ஆசை வளரட்டும்" என்று கூறிச் சிரித்தான். "தூக்க தாசரே, நல்லாத் தூங்கு" என்று கிண்டல் செய்தபடியே எல்லோரும் ஓட்டம் பிடித்தனர்.

முகமூடிகள் போன பின் மூக்கன் தனக்கு முன்னால் போன வண்டிகள் எங்கே என்று பார்த்தான். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை அவைகளைக் காணோம்.

வண்டியை வேகமாக ஓட்டிச் சென்று மற்ற வண்டிகளைப் பிடித்து - அந்த வண்டி ஓட்டிகளிடம் நடந்ததைச் சொன்னான்.

அவர்களும் சைக்கிள் பிடித்து முகமூடிகளைத் தேடிப் போனார்கள். அரை மணி கழித்து "யாரையும் காணோம் - பணம் போனது போனதுதான்" என்று திரும்பினர்.

அனுபவசாலியான வயதான ஒருவர் சொன்னார் "மூக்கா - இன்று நடந்தது உன் சோம்பேறிதனத்துக்குக் கிடைத்த தண்டனை. இனியாவது கடைசி வண்டியாக வர ஆசைப்படாதே. அப்படி வரும்படி இருந்தால் தூங்காதே...!" என்றார்.

இப்பொழுதெல்லாம் மூக்கன் கடைசி வண்டியாகப் போவதில்லை. அப்படிப் போக நேர்ந்தாலும் தூங்குவதில்லை. இந்தப் பாடத்தைக் கற்றுக் கொள்ள அவன் கொடுத்த காணிக்கை ஆயிரத்து ஐநூறு ரூபாய்!

அந்த மாணவர்கள் மேற்கு மலைத் தொடரின் உச்சியிலுள்ள ஏலத் தோட்டத்தை அடைய மாலை மூன்று மணியாகிவிட்டது.

காலை ஐந்து மணிக்குப் புறப்பட்டு ஏழு மணிக்கு அடிவாரம் வந்து, அங்கிருந்து ஒற்றையடி மலைப் பாதையில் ஏற, மலை வனங்களூடே நடந்து அலுத் துப் போயிருந்தனர்.

கோடை விடுமுறை விட்டதும் தோட்ட உரிமை யாளரின் மகன் ஞானன் தன் நண்பர்களான அமுதன், இளங்கோ, மணி, குமார், அகிலன், செந்தில், கண்ணன் இவர்களையும் ஒரு வாரம் இருந்துவிட்டு மலை வனங்களின் அழகைப் பார்த்து வர லாம் என்று அழைத்து வந்தான். அடி வாரத்தில் மலைவாழ் மக்கள் வாழும் பகுதிக்கு வந்து மேலே வழி காட்டவும் விலங்கு களைக் காணவும் நீலனையும் அவர் கள் கூட்டி வந்தி ருந்தனர்.

க்ளிக்கால் வந்த ஆபத்து!

இவர்கள் வரு வதைப் பார்த்த தும் தோட்ட ஏஜண்ட் ஜாகையிலிருந்து ஓடி வந்தார்.

''என்ன தம்பி களா, இப்பதான் வாரி களா? வாங்க! வாங்க! இருந்தாலும் அடுத்த வாரம் வந்திருக்கலாமே?'' என்று கூறிக் கொண்டே முன்னால் நடந்து சென்றார்.

"ஏன்? என்ன விஷயம் ஏஜண் டய்யா?" என்றான் ஞானன்.

"தொழிலாளிங்க எல்லாம் ஊர்ல ஏதோ திருவிளான்னு இறங்கிப் போயிட்டாங்க. உங்க உதவிக்கு யாரும் இல்லையேன்னுதான்" - தயங்கியவாறு கூறினார்.

"நாங்களே சமைச்சி சாப்புட் டுக்கிடுவோம்'' என்றான் இளங்கோ.

"மலையச்சுத்திக் காட்ட நீல னையும் கூட்டியாந்திருக் கோமே?" என்றான் அமுதன்.

"நீங்க சமைச்சிப் போடலாமில்ல



ஏஜண்டய்யா?" என்று ஞானன் கேட்டுச் சிரித்தான்..

"இன்னும் பத்துப் பேருக்குக் கூட நான் சமைச்சிப் போடுவேன். கூடமாட ஒத்தாசைக்கு ஆள் இல்லேன்னு தான்."

''நாங்க இருக்கோமில்லே?'' என்றான் மணி.

''நான் காய்கறி நறுக்கித் தாரேன்" - இது அகிலன்.

''நான் ஆத்துல தண்ணி கொண்டாறேன்'' - இது கண்ணன்.

கொ.மா. கோதண்டம்

''சரி தம்பிகளா. நீங்க போயி ஸ்டோர் முன் ஜாகையில இருங்க. நானே மளமளன்னு சமையல் முடிச்சிட்டு சாப்புடக் கூப்புடுறேன்'' என்று கூறிவிட்டு ஸ்டோரின் மாடி முன் அறையைத் திறந்து பாய்களை விரித்துத் தந்துவிட்டுக் கீழிறங்கினார் ஏஜெண்ட்.

அப்போது நீலனைக் காட்டி.


"இந்தப் பயலை எங்கே தங்க வைக்க?" என்று கேட்டார்.

''இவனும் எங்க கூடவே தங்கட்டும்... நீங்க போங்க" - ஞானன் கூறியதும் அவர் போய் விட்



டார். நான்கு மணிக்கு அவர்கள் சாப்பிட்டு முடித்ததும் ஏஜண்ட் அவர்களிடம் வந்தார்.

''தம்பிகளா, அஞ்சி மணிக்கு மேலே மிருகங்க நடமாட ஆரம்பிக்கும். அலுத்துப் போயி வந்திருக்கிக. ரூமுலேயே ரெஸ்ட் எடுங்க. நாளக்கி தோட்டத்தை சுத்திப் பார்த்து உச்சி மலைக்கு அந்தப் பக்கமும் போகலாம். நான் அவசரமா அடுத்த தோட்டத்து ஏஜண்ட் கிட்டே ஒரு தகவல் சொல்லிட்டு ஆறு மணிக்குள்ளே வந்திடுறேன்'' என்றார்.



"சரி, நீங்க போயிட்டு வாங்க" என்றான் ஞானன்.

"கதவ மூடிக்கிட்டு ஜாக்கிரதையா இருங்க. யானை வராம இருக்க எல்லையில ஒரு வெடி போட்டுட்டுப் போறேன்."

தூரத்தில் வேட்டுச் சத்தம் கேட்டது.

அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

தோட்டத்திலிருந்து பறவைகளின் ஒலிகளும், சில வண்டுகளின் இசை போன்ற ஓசையும், தூரத்திலிருந்து மந்திகளின் 'குங்ம்' 'குங்ம்' என்ற சத்தலும் கேட்டுக் கொண்டிருந்தன.

சிறிது நேரம் சென்றதும் ஏதோ சத்தம் கேட்கவே நீலன் எழுந்து கதவைத் திறந்து எட்டிப் பார்த்தான். மெல்லப் பின்வாங்கி வந்து பேச வேண்டாம் என்று சைகை காட்டிவிட்டு "சாமி இம்மே பெரிய யானையும், குட்டியும் நிக்குதுங்க,'' என்றான் மெல்ல.

மாணவர்கள் ஒவ்வொருவராக எழுந்து எட்டிப் பார்த்தார்கள்.

இம்மே பெரிய யானை குட்டியுடன் நின்றிருந்தது. மூன்றடி உயரமே உள்ள குட்டி தாயைச் சுற்றி வந்து கொண்டிருந்தது.

"அடடா என்ன அழகான காட்சி!" என்றான் ஞானன். "சாமி, கிளிக் செய்யாதீங்க, என்று நீலன் எத்தனை தடுத்தும் உள்ள இருந்து காமிராவை எடுத்து வந்து ஒரு 'கிளிக்' செய்தான்.


'பளிச்'சென்று ஒளி மின்னியதும் யானை பெரிதாக ஒரு பிளிறல் இட்டது.

பயந்து போன அவர்கள் அறைக்குள் ஓடி விட்டனர். நீலன் மட்டும் பார்த்துக் கொண்டிருந்தான்.

யானை சிறிது முன்னே வந்து சரக்கு பாடம் செய்யும் ஸ்டோர் ரூமின் கதவை தும்பிக்கையால் ஒரு முட்டு முட்டி இடித்ததும் கதவு 'படீரென' திறந்து கொண்டது. குட்டியானை வாசல் வழியாக உள்ளே சென்று விட்டது.

நீலன் வந்து சொன்னதும் அவர்கள் பயத்தால் நடுங்கியபடி பின் கதவைக் திறந்து எட்டிப் பார்த்தனர்.

அது ஏலக்காய் பாடம் செய்யும் இடம். பெரிய தகர பீப்பாயை அடுப்பாக்கி அதிலிருந்து ஓர் அடி அகலத் தகரக் குழாயை சதுரமாகவும் இடையில்



இரண்டு குறுக்கு வெட்டாகவும் அமைத் திருந்தனர். அடுப்பில் தடிகளைப் போட்டு எரித்து விட்டால் அந்தக் குழாய்கள் சூடாகி அறை முழுவதும் பரவும். மேலே கட்டைகளைப் போட்டு அதன் மீது கம்பி வலைகளைப் பரப்பி அடித்து வைத்திருந்தனர். ஏலக்காய்களை அதில் பரப்பி வைத்தால் ஒரு நாளில் அந்தச் சூட்டில் காய்ந்து பக்குவமாகி விடும்.

அவர்கள் வலைக்குமேல் நின்று கீழே பார்த்தார்கள். யானைக் குட்டி கீழறை யில் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. அதன் உடல் பட்டதும் கதவு அடைத்துக் கொண்டுவிட்டது. வழி தெரியாமல் குட்டி யானை சுற்றிக் கொண்டிருந்தது. அதன் உடல் பட்டு குழாய்கள் வளைந் தன!

முன்னால் இருந்த தாய் யானை, பயங் கரமாகப் பிளிறிக் கொண்டிருந்தது.

அந்தக் காட்சி வேடிக்கையாகவும் அதே நேரத்தில் அச்சமூட்டுவதாகவும் இருந்தது.

மாணவர்கள் செய்வதறி யாது திகைத்துக் கொண் டிருந்தனர். "ஏஜெண்ட் எப்போ வராரோ? நாம என்ன செய்ய?" - ஞானன் பயத்துடன் மெல்லப் பேசி னான்.

ஏஜண்ட் வாரத்துக் குள்ளே பெரிய யானை சுவத்தை இடிச்சி நாம கீழே விழுந்து யானை மிதிச்சு சாக வேண்டியது தான்" என்றான் கண்ணன்.

நீலன் வந்து ஞான னிடம் ஏதோ பேசினான்.

"சரி அப்படியே செய்யி. அதோ மூலையில கடப் பாற கம்பி இருக்கு" என் றான் ஞானன்.

நீலன் மேலே சிமிண்ட் ஓட்டை சிறிது உடைத்து, ஏறி, கடப்பாறை கம்பியை வாங்கிக் கொண்டு பின் புறமாகக் குதித்தான்.


ஸ்டோரின் பின் பக்கம் ஒரு பெரிய ஜன்னல் மூடியபடி இருந்தது. நீலன் கம்பி யால் சுவரை இடித்து ஜன்னலைத் தூக்கித் தூரப் போட்டான். கீழே இருந்த சுவரை யும் இடித்தான்.

ஒரு வழி கிடைத்து வெளிச்சம் வந்ததும் குட்டி யானை பின் வழியாக ஓடி தாயி டம் சேர்ந்து கொண்டது. குட்டி வந்ததும் அதனை அழைத்துக் கொண்டு பெரிய யானை தோட்டத்திற்குள் போய்விட்டது.

மரத்தடியில் ஒளிந்திருந்த நீலன் ஓடி வந்தான். மற்ற மாணவர்களும் இறங்கி வந்தனர்.

"ஏய் நீலா, இன்னக்கி நீயில்லேன்னா எங்க கதி அதோகதி ஆகியிருக்கும். எல் லோரையும் காப்பாத்திட்டியேப்பா!" என்று எல்லோரும் அவனைப் பாராட்டிக் கொண்டிருந்தனர்.

மெல்ல இருள் பரவும் நேரம். ஏஜெண்ட் வேகமாக வந்து கொண்டிருந்தார்.



நீயுமா?

சுவரில் ஆணியில் மாட்டியிருந்த அழகான ஓவியத்தை சுரேஷ் அப்போதுதான் பார்த்தான். அது சுரேஷின் அண்ணன் ராம் வரைந்து பள்ளியில் நடந்த ஓவியப் போட்டியில் முதற் பரிசு பெற்ற படம். அந்தப் படத்தை முதல் நாள் இரவுதான் வரவேற்பு அறையில் தொங்க விட்டிருந்தார்கள்.

அந்த வண்ண ஓவியத்தில் மரமொன்று நடுநாயகமாக இருந்தது. மரத்தின் கிளைகளிலே பொன்னிறமான பூக்கள் நிறைந்திருந்தன. காற்றில் மெதுவாக அவை உதிர்ந்து விழுவது போல் இருந்தது. மரத்தின் கீழுள்ள புல்வெளியில் மானொன்று மேய்ந்து கொண்டிருந்தது. மானின் கூரிய கொம்புகள் வளைந்திருந்தன. அதன் உடலிலே இருந்த வெண் புள்ளிகள். அதன் அழகை இன்னும் அதிகரிக்க வைத்தன. தானும் நிறையப் படங்கள் வரைய வேண்டும். அண்ணனைப் போல் பரிசு பெற வேண்டும் என்று எண்ணினான் சுரேஷ்.

அவனுக்குள் கற்பனை பொங்கியது. அண்ணனுடைய மேசையில் கிடந்த காகிதங்களையும் வண்ணங்களையும் பெரிய தூரிகை ஒன்றையும் எடுத்துக் கொண்டு வந்தான். கிண்ணத்தில் தண்ணீர் கொண்டு வந்தான்.

வீட்டு முற்றத்திலே பூத்துக் குலுங்கிய சிவப்பு ரோஜா மலர்களை அப்படியே வரைய வேண்டுமென்ற ஆசை எழுந்தது. சிவப்பு நிறமென்றால் அவனுக்குக் கொள்ளை ஆசை. ரோஜாவின் இதழ்களை சிவப்பு நிறத்தில் தீட்டினான். பச்சை நிறத்தால் இலைகளைத் தீட்டினான். அதே நிறத்தில் நீண்ட தண்டையும் வரைந்து முடித்தான். பெரிய, பெரிய ரோஜாப் பூக்கள் பார்ப்பதற்கு அழகாக இருந்தன.

படத்தை சுவரிலே சார்த்தி வைத்து விட்டு சிறிது தூரத்திலே போய் நின்று கொண்டு பார்த்தான். இடுப்பிலே கைகளை வைத்தபடி தலையைச் சாய்த்துப் பார்த்தான். அவனுடைய அண்ணன் ராமுவும் அப்படித்தான் பார்ப்பது வழக்கம். வரைந்த ரோஜாச் செடி நன்றாக இருப்பது போலத்தான் அவனுக்குத் தோன்றியது. அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தான்.

அதற்குள் அம்மா திரும்பி விட்டாள். சமைக்கத் தொடங்கி விட்டாள். வீட்டு கேட்டை யாரோ திறக்கும் சத்தம் கேட்டது. சுரேஷ் எட்டிப் பார்த்தான். அப்பாவும், அண்ணனும்தான்! அவசரம், அவசரமாக எல்லாவற்றையும் மறைத்தான். ஆனால், ராம் கண்டு பிடித்து விட்டான். உதை விழப் போகிறது என்று நடுங்கினான் சுரேஷ்

"இதுக்கு முன்னாடி படம் போட்டிருக்கிறியாமே?" அண்ணன் கோபத்தை மறந்து வியப்புடன் கேட்டான்.

தான் ஏற்கெனவே வரைந்து படங்களைக் கொண்டு வந்து காண்பித்தான் சுரேஷ்.

"அருமையா போட்டிருக்கான் அப்பா. இவனுடைய திறமையை நன்கு வளர்க்க வேண்டும். எங்க ஆசிரியரிடமே பயிற்சிக்குச் சேர்க்கிறேன்" என்றான் ராம் பெருமையுடன்.

"இந்த சிவப்பு ரோஜாச் செடி ஓவியத்தை உலகச் சிறுவர் ஓவியப் போட்டிக்கு அனுப்புவோம்" என்று அண்ணன் கூறியதும் சுரேஷின் மகிழ்ச்சிக்கு அணை போட முடியவில்லை.

- **வீரலட்சுமி கண்ணப்பன், ஸ்ரீலங்கா.**

தவறுகள் என்ன? போட்டி முடிவு

இந்தப் போட்டியிலும் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு அசத்தியிருக்கிறார்கள். எங்கள் ஊரில் கோகுலம் கிடைக்கவில்லை. அதனால் முகவரிக் கூப்பன் இல்லாது விடை எழுதியுள்ளேன் என்று ஏகப்பட்ட வாசகர்கள் எழுதியிருக்கிறார்கள். இவர்களது ஆர்வத்தைப் பாராட்டத்தான் முடியுமே தவிர, போட்டி விதிகளின்படி இவர்களது விடை பரிசீலனைக்கு ஏற்கப்படவில்லை. இப்படிப்பட்டவர்கள், உள்ளூர் ஏஜெண்டிடம் தங்கள் பிரதிக்கு முன்னதாகப் பதிவுசெய்து கொள்ளலாமே?

ஏராளமானவர்கள் சரியான விடை எழுதியிருந்ததால், பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க குலுக்கல் முறையே கைகொடுத்தது.

ரூபாய் பதினைந்து பரிசு பெறுவோர் :

1. எம். புஷ்பா, காரைக்கால், புதுவை மாநிலம், 2. கே. குப்புச்சாமி, பழனி. 3. ஏ. அலெக்ஸ், புதுப்பாளையம், கடலூர் – 1, 4. வி. ரங்காசினி, என். சூரன்குடி அஞ்சல், 5. எஸ். மேனகா, ஸ்ரீரங்கம், 6. உ. ஜோதி முருகன், துடுப்பதி, 7. இ. ராஜாதேசிங், வாலாஜாபாத், 8. டி. நவீன், சிறுமுகை, 9. இ. எழிலரசி, புதுச்சேரி – 10, 10. எம். முகமது ரஃபிக், தலைவாசல், 11. எஸ். அப்துல் ரெஜாக், அதிராமபட்டினம், 12. எம். அற்புத ராஜ், ஆரோக்கியபுரம், தென்னூர், 13. டி. பானுமதி, சிம்மக்கல், மதுரை – 1, 14. ஜி. ஆனந்த் ஸ்ரீநாத், பெங்களூர் - 71, 15. சு. கலியதுல்லா, குணமங்கலம்.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு; வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி!

சரியான விடை :

1. காண்டாமிருகம், தாவர உண்ணி, 2. ஆமை பறக்காது 3. சிறுமியின் காதணிகள் ஒன்றாக இல்லை, 4. ரம்பம் தலைகீழாக உள்ளது, 5. சிங்கம் மரமேறாது; பழம் சாப்பிடாது! 6. எலி, பூனையைத் துரத்தாது, 7. சங்கின் ஊதும் பகுதி மாறியுள்ளது, 8. கால் பூட்சுகள் மாறியுள்ளன, 9. ஆட்டிற்கு நீண்ட வால் கிடையாது, 10. மெழுகுவர்த்தியின் 'ஜ்வாலை' தலைகீழாக உள்ளது.

பாவம் பூமா!



ஈற்று வாக்கியக் கதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை

பூமா மிகவும் கெட்டிக்காரி. படிப்பிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் படு சுட்டி. ஆனால் எதிலும் அவளுக்கே ஆர்வம் வந்து ஈடுபட்டால்தான் வெற்றி பெறுவாள். அப்படி இல்லாது சோம்பல்பட்டால் பள்ளியில் அவள்தான் கடைசி! அடிக்கடி அவளுக்கு இப்படி சோம்பல் வந்துவிடும்.

அன்று பள்ளியில் ஸ்போர்ட்ஸ் டே. போட்டிகளில் பங்கெடுத்துக் கொள்ளாவிட்டால் அப்பா, அம்மா, ஆசிரியர்கள் என்று எல்லோரும் திட்டுவார்கள். பூமாவுக்கு அன்றைக்கு என்று படு சோம்பல். போட்டிகளில் கலந்து கொள்ளாது இருக்க என்ன வழி என்று யோசித்தாள். அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது.

காலையில் எழுந்ததுமே, "அம்மா", என்று அலறினாள். எல்லோரும் ஓடி வந்தனர். "ஐயோ அம்மா காலை ஊன்றி எழுந்திருக்கக் கூட முடியவில்லையே! வலிக்கிறது அம்மா!" என்று தொண்டி நெளிந்தாள்.

"ஏண்டி என்னாச்சு? காலில் முள்கிள் குத்தி விட்டதா?" என்று அம்மா காலைத் தொட்டுப் பார்த்தாள்.

"ஆ! ஆ! தொடாதீங்க அம்மா. ரணமா வலிக்கிறது!" என்று காலை இழுத்துக் கொண்டாள் பூமா.

"நேற்று ராத்திரி வாசல்படியில் இறங்கும் போது கால் மளுக்கிக் கொண்டது. தூங்கினால் சரியாகிவிடும் என்று சும்மா இருந்து விட்டேன். இப்போது காலைக் கீழே கூட வைக்க முடியவில்லையே?" என்று முகத்தைச் சிணுக்கினாள் பூமா.

"ஏண்டி, இந்தக் காலோடு, எப்படி ஸ்போர்ட்ஸில் ஓடப் போறே?" என்று அக்கா கவலையோடு கேட்டாள்.


பூமா சோகமாக அம்மாவைப் பார்த்தாள்.

"ஸ்போர்ட்ஸ் போனால் போகட்டும். பம்பாய் தமிழ்ச் சங்கத்தில் நாட்டியம் ஆடுவதற்கு ஒரு குரூப் மாணவிகளை அனுப்பப் போகிறோம். பூமாவையும் அனுப்பி வையுங்கள் என்று உன் டான்ஸ் டீச்சர் காலையில் போன் பண்ணினார்களே. 8 மணிக்கு உன்னை அழைத்து வருவதாக சொன்னேனே! செலக்ட் பண்ணுகிறவர்கள் முன்னால் எப்படி ஆடுவாய்? போச்சு, ஒரு நல்ல சான்ஸ் போச்சு" என்று அம்மா புலம்பினாள்.

பூமா, திகைத்துப் போய் நின்றாள்!

— எஸ். சிந்துஜா

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.



◆ உலகக் கோப்பைக்கு
ஆடப் போறேன்!